உ

# சிவஞானபோதசாரம்

## THE QUINTESSENCE OF SIVA-GNANA-BODHAM



'சித்தாந்தமாணவன்'

எழுதியது

கிடைக்குமிடம்:-

விவேகானந்த அச்சகம், புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவஞானபோத சாரம்

## THE QUINTESSENCE OF SIVA-GNANA-BODHAM

சித்தாந்தமாணவன்

எழுதியது

யாழ்ப்பாணம்

விவேகானந்த அச்சகத்திற் பதிக்கப்பெற்றது

ஏவிளம்பி௵ சித்திரைமீ

1957

(RIGHTS RESERVED)

விலை ரூபா 1-80

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | 4 |
| ஸ்ரீமெய்கண்டதேவ நாயனார் வரலாறு | 6 |
| கடவுள் வணக்கம் | 8 |


## i பொதுவியல்பு


பிரமாணவியல்:-

| | |
|---|---|
| முதலாஞ் சூத்திரம் | 9 |
| இரண்டாஞ் சூத்திரம் | 25 |
| மூன்றாஞ் சூத்திரம் | 45 |

இலக்கணவியல்:-

| | |
|---|---|
| நான்காஞ் சூத்திரம் | 52 |
| ஐந்தாஞ் சூத்திரம் | 60 |
| ஆறாஞ் சூத்திரம் | 65 |


## ii சிறப்பியல்பு


சாதனவியல்:-

| | |
|---|---|
| ஏழாஞ் சூத்திரம் | 75 |
| எட்டாஞ் சூத்திரம் | 84 |
| ஒன்பதாஞ் சூத்திரம் | 99 |

பயனியல்:-

| | |
|---|---|
| பத்தாஞ் சூத்திரம் | 111 |
| பதினோராஞ் சூத்திரம் | 118 |
| பன்னிரண்டாஞ் சூத்திரம் | 129 |

# முன்னுரை

வாழ்வை வளம்படுத்தத் தோன்றிய சமயங்கள் பல. அவற்றுள் அகமனம், சித்தம், உணர்ச்சி, புத்தியெனு (*unconscious mind, will, emotions, intellect*) மிவற்றுக்கு, முறையே, விடயங்களாகிய கிரியை, நீதிநெறி, வணக்கமுறை, தத்துவசாத்திரம் (*rituals, ethics, form of worship, philosophy*) எனும் நான்கு பிரிவுகளையுந் தம்மகத்தே கொண்ட சமயங்களே மேலான சமயங்களாகும். இதன்படி ஆராயின் சித்தாந்தசைவசமயமே அதிசிறந்ததெனத் துணிந்துகூறலாம். வேதம், ஆகமம், திருமுறை, மெய்கண்டசாத்திரம் எனுமிவை இச்சமயத்துக்கு ஆதாரமாயமைகின்றன.

சைவசமயநூல்கள் பலவாயிருத்தலின் அவற்றையாராய்ந்து ஒற்றுமைகாண் வாழ்க்கைமுறை இடமளிக்கவில்லை. ஒரு சிலவற்றைப்படிப்பதால் முரண்பாடுகளும் சிக்கல்களுமே யுண்டாகின்றன; அவற்றை நீக்குவதில் மெய்கண்ட சாத்திரங்கள் முதலிடம்பெறும். அவற்றுள் முதன்மையானதும், சித்தாந்த சைவநெறியின் ஞானபாதப்பொருளிதுவெனத் திட்டவட்டமாகக் கூறுவதுமாயுள்ளது மெய்கண்டார் அருளிய சிவஞானபோதமெனும் நூலாகும். அது பதி, பசு, பாசமெனும் முப்பொருளையும் தெளிவாக விளக்குகின்றது; ஆயினும், வேதம், ஆகமமுதலாம் நூல்களைக்கற்றுச் சரியைகிரியையோகநெறிகள் கைவரப்பெற்று முத்தியை விரும்பிநின்றார்க்கு ஞானபாதப்பொருளை விளக்குதற்கெழுந்த நூலாதலின், அதை இலகுவில் கற்றுத்தெளிவு

பெறமுடியாது. விளக்குதற் கெழுந்த வழிநூல்சார்பு நூல்களும் விரிந்துபோகின்றமையின், எம்மிற்பலர் அவற்றையும் பயன்படுத்தமுடியவில்லை.

இஃதிவ்வாறாக, எனது ஆசிரியர் "யாம் செய்யும் சமயத்தொண்டை நீவிரும் தொடர்ந்துசெய்க" எனக்கூறிய திருவாக்கும், யான்கண்ட சிலவுண்மைகளை மற்றையோரும் அறியச்செய்யவேண்டுமெனும் ஆசையும் உந்த, எனது அறிவின்சிறுமையையும் நோக்காது "சிவஞானபோதசாரம்" எனுமிந்நூலை எழுதத்துணிந்தேன். கருத்துமுரண்பாடுகள் தோன்றக்கூடுமாயினும் அவை வாசிப்போரைச் சிந்திக்கச்செய்தாலே எனது நோக்கம் நிறைவேறியதாகக் கருதப்படும்.

இந்நூல் மாதவச்சிவஞானசுவாமிகளின் கருத்துக்களைப் பெரும்பான்மையுந் தழுவியெழுதப்பட்டது. குறைகள் காணப்படின், அறிஞர்கள், அவற்றை எடுத்துக் காட்டுமுகமாய், திருத்தஞ்செய்ய உதவிபுரிவார்களாக.

இதன் மூலப்பிரதியைப் பார்வையிட்டுக் குற்றங்களைந்த எனதருமை நண்பர்களுக்கும், இந்நூல் விரைவில் வெளிவரக்காரணராயிருந்த விவேகானந்தவச்சகத்தாருக்கும் எனது அன்புகலந்த நன்றி உரியதாகின்றது.

வட்டுக்கோட்டை
இலங்கை
14-5-57

சித்தாந்தமாணவன்

உ

திருச்சிற்றம்பலம்

# மெய்கண்டதேவநாயனார் வரலாறு

திருமுனைப்பாடிநாட்டில், திருப்பெண்ணாகடம்எனும் அழகிய நகர் உண்டு. அங்கே ஆத்மீகசெல்வமும் கல்விச்செல்வமும் பொருட்செல்வமு மொருங்கேயமையப்பெற்றவரும், வேளாண்குலத்தவருமான அச்சுதகளப்பாளர் எனும் பெரியார் வாழ்ந்துவந்தார். மனைவியார் பெயர் மங்களாம்பிகை. பிள்ளைப்பேறில்லாத காரணத்தால் குலகுருவாகிய சதாசிவசிவாசாரியரிடம் சென்று தங்குறையைக் கூறினர். ஆசாரியர் திருமுறைக்கண் கயிறுசாத்தியபோது திருஞானசம்பந்தசுவாமிகள் அருளிய,

"பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே."

எனுஞ்செய்யுள் காணப்பட்டது. அதிற்கூறியபடி, அச்சுதர் திருவெண்காடுசென்று சோமகுளம், சூரியகுளம், அக்கினிகுளமெனும் மூன்று திருக்குளங்களிலும் நீராடி, வரம்பெற்று வீட்டுக்குத் திரும்பினார்.

கி.பி. 1225-ம் ஆண்டில் மங்களாம்பிகையார் ஓர் ஆண்பிள்ளையைப் பெற்றார். அவ்வருட்பிள்ளைக்கு சுவேதவனப்பெருமாள் எனுந் திருநாமமிடப்பட்டது. முற்பிறவியிலே சரியை,கிரியை,யோகம், ஞானம் எனுமிவை கைவரப்பெற்ற சாமுசித்தராதலின், அவர் மூன்றாம் வயதிலேயே திருவெண்ணெய்நல்லூர் பொல்லாப்பிள்ளையார்கோயில் மண்டபத்தில் நிட்டைகூடிவந்தார்.

அங்ஙனமிருக்குங்காளில், அகச்சந்தான குரவரு ளொருவராகிய பரஞ்சோதிமாமுனிவர் அகத்தியமுனி வரைக்காணும்பொருட்டு ஆகாயமார்க்கமாகச் செல்ல நேர்ந்தது. அவர் பிள்ளையின் பெருமையையறிந்து கீழிறங்கி, ஆசீர்வதித்து, **சிவஞானபோதம்** எனும் நூலைக்கொடுத்து "உலகமுய்ய எதுதிருட்டாந்தங்க ளால் விளக்கியுரைக்க"எனக்கூறி 'மெய்கண்டார்' எனும் பெயரையும் சூட்டிச்சென்றார்.

இந் நூல் பரமசிவனால் ஸ்ரீகண்டருத்திரருக்கும், அவரால் நந்திதேவருக்கும், அவரால் சனற்குமாரமுனி வருக்கும், அவரால் சத்தியஞானதரிசனிகளுக்கும், அவரால் பரஞ்சோதிமுனிவருக்கும் போதிக்கப்பட்ட பெருமையையுடையது.

மெய்கண்டார், குருவின்கட்டளைப்படி, மாணுக்க ருக்குப் போதித்துவந்தார். இதனைக்கேள்வியுற்ற குல குருவும் சகலாகமபண்டிதருமாகிய சதாசிவசிவாச்சாரி யர், சோதிக்கும்பொருட்டுப் பிள்ளையிடம்வந்து, "ஆண வமல வடிவம்" எவ்வாறிருக்குமெனக்கேட்டார். பிள்ளை அவரையே சுட்டிக்காட்டினார். ஆசாரியருக்கு மெய் யறிவுபிறந்தது; பாதங்களை வணங்கினார்; தன்னையு மொரு மாணவனாக ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினார். மெய்கண்டார் அவரை ஏற்றுக்கொண்டு அவருக்கு அரு ணந்தி எனும் தீட்சாநாமஞ்சூட்டினார்.

மெய்கண்டதேவர் சிலகாலம் நிட்டைகூடியிருந்து தமது இருபதாவதுவயதில் போாதபேரின்பப்பெரு வாழ்வையெய்தினர்.

மெய்கண்டதேவர் வரலாறு முற்றிற்று

உ

சிவமயம்

## மங்கலவாழ்த்து

கல்லா னிழன்மலை
வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர்
நல்லார் புனைவரே

மெய்கண்டதேவநாயனார்

## நூற்சிறப்பு

வேதம் பசுவதன்பால் மெய்யாகம நால்வ
ரோதுந் தமிழதனி னுள்ளுறுநெய்—போதமிகு
நெய்யி னுறுசுவையா நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்த தமிழ்நூலின் றிறம்.

---

## தத்துவப்பேறு

தத்துவ மெங்குண்டு தத்துவ னங்குண்டு
தத்துவ மெங்கில்லை தத்துவ னங்கில்லை
தத்துவ ஞானத்தின் தன்மை யறிந்தபின்
தத்தவ னங்கே தலைப்படுந் தானே.

திருமந்திரம்

பற்றை யறுப்பதோர் பற்றினைப் பற்றில்அப்
பற்றை யறுப்பரென் றுந்தீபற
பாவிக்கில் வாராதென் றுந்தீபற.

திருவுந்தியார்

## குருவணக்கம்

மெய்யன்பு கொண்டு மெய்த்தவத்தில் நின்றார்க்கு
உய்யும் நெறியளித்த உத்தமனே—மெய்ப்பொருள்தேர்
சற்குருவாய் வெண்ணெய் நல்லூர்தனி லுதித்த
பொற்புடையோர் நின்கழல்கள் போற்றி.

சித்தாந்தமாணவன்




தோற்றந் துடியதனில் தோயுந் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

(படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்)

VIVEKANANDA PRESS JAFFNA (Copyright)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவஞான போதம்

## பொது வியல்பு

### பிரமாண வியல்

### முதற் சூத்திரம்

அவன்அவள் அதுஎனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கிமலத் துளதாம்
அந்தம்ஆதி என்மனார் புலவர்.

**செம்பொருள் :-**

**இச்சூத்திரம் பதியைப் பற்றிக் கூறுகின்றது.**

உலகமாகிய பிரபஞ்சத் தொகுதி (*material world*) அவனென்றும் அவளென்றும் அதுவென்றும் சுட்டி (பகுதி பகுதியாய்) அறியப்படும். அது சொற்பிரபஞ் சம் பொருட்பிரபஞ்சம் என இரு பிரிவுகளை அடக் கும். அப்பிரபஞ்சத் தொகுதி தோன்றல், நிலை பெறு தல், அழிதல் (ஒடுங்குதல்) எனும் முத்தொழில்களை யுடையது. இத்தொழில்களைச் செய்ய ஒரு கருத்தா (*agent*) வேண்டும். அக்கருத்தா பிரபஞ்சத்துக்கு வேறாயிருத்தல் வேண்டும். அக்கருத்தாவை இறைவன் அல்லது முழுமுதற் கடவுளெனக் (*the God Supreme*)

கூறுதல் பொருந்தும். இறைவன் ஆன்மாவின் ஆணவ மலம் (*anavic veil*) நீங்கும் பொருட்டு முத்தொழில்களையும் புரிவன். அவை முறையே படைத்தல், காத்தல், அழித்தல் (ஒடுக்குதல்) என்பனவாம். இறைவன் ஆன்மாவின் (*soul*) கன்மங்கள் பக்குவமானவுடன் அவற்றின் பயனை அநுபவிக்கச் செய்யும் பொருட்டு முதற்காரணமான (*first cause*) மாயை (*material cause*) யினின்று தநு கரண புவன போகங்களைத் தோற்றுவித்தல் படைத்தல் எனப்படும். ஆன்மா உரிய கன்மங்களை அநுபவித்து முடியும் வரை தநு கரண புவன போகங்களை நிலைபெறச் செய்தல் காத்தல் எனப்படும். ஆன்மா வினைப் பயன்களை அநுபவிப்பதா லுண்டாகும் இளைப்பை நீக்குதற் பொருட்டு தநு கரண புவன போகங்களை மாயையில் ஒடுக்குதல் அழித்தல் எனப்படும். பிரபஞ்சம் மாயையில் ஒடுங்குமெனவே அது நிலைபேறுள்ள (*eternal*) பொருளென்பது புலனாகும். ஆகையால் படைத்தல் என்பது ஒடுங்கிய பிரபஞ்சத்தை மறுபடியுந் தோன்றச் செய்தல் (*re-appearance of cosmos*) எனப்பொருள்படும். இறைவனே இதைச் செய்வன். இதன் காரணமாகப் படைப்பவனும் ஒடுங்குதற்கு இடமாய் (நிலைக்களன்) உள்ளவனும் ஒருவனே யாகத்தானிருக்க வேண்டும். அவ்வாறுள்ளவனே மகாசங்காரத்தைச் செய்யும் முதற் கடவுள் (பரமசிவன்) எனப் பிரமாண நூல் கற்றோர் கூறுவர்.

**மேற்கூறியவற்றால் பெறப்படுவன:-**

1. பிரபஞ்சம் தோன்றல், நிலைபெறல், அழிதல் எனும் முத்தொழில்களை யுடையது.
2. பிரபஞ்சம் இறைவனாலே முத்தொழில்களை அடையும்.

3. *பிரமா, விஷ்ணு, காலருத்திரர் முத்தொழிற் படுவாராகையால் அவர்களில் எவரும் முதற் கடவுளாராக முடியாது.*

**விளக்கம் :-**

## அ. பிரபஞ்சம் முத்தொழில்களை யுடையது

*தோன்றல் அல்லது பிறத்தல், நிலைபெறல் அல்லது சீவித்தல், அழிதல் அல்லது இறத்தல் என்பன முத்தொழில்கள். உயிரற்றவையும் உயிர் நிலைபெறற் கிடமான தாவரம், பறவை, மிருகம், மனிதன் முதலிய தோற்றங்களும் தோன்றி நின்று அழிகின்றன. ஆகையால் காணப்படும் மாயா காரியங்களாலான பிரபஞ்சம் தோன்றி நிலைபெற்று ஒடுங்குமெனக் கூறப்பட்டது. ஆயினும், ஆன்மாக்கள் முத்தொழிற் படுவதில்லை. அவை என்றும் ஒரே தன்மைத்தாய் உள்ளன. ஆன்மாக்கள் எடுக்கும் உடம்புகளே முத்தொழிற்படுகின்றன.*

பொதுவாக நோக்குமிடத்து, பிரபஞ்சம் இன்று வரை நிலைபெறுதலையே காணமுடிகிறது. தோன்றுவதையும் அழிவதையும் பார்க்க முடியவில்லை. ஆதலால் முத்தொழில் நடைபெறுகின்றதென்பது, அஃதாவது உலகம் முற்றும் அழிந்து பின் தோன்றி, நிலைபெறுமென்பது எவ்வாறு பொருந்துமெனக் கேட்கலாம்.

*காணப்படு மொருபொருள் மறைவதைப் பார்க்கிறோம். காடுகள் தோப்புகள் காணப்பட்டன. பின் ஒரு காலத்தில் அதே இடத்தில் அவற்றைக் காண முடியவில்லை. மனிதன் பிறக்கிறான்; சிலகாலம் நிலைபெற்றுச் சீவிக்கிறான்; பின் இறக்கிறான். மரம் முளைத்து நின்று அழிந்து போகின்றது. இத்தொழில்கள் இடையீடின்றி நடைபெறுகின்றன. இன்னும் நுணுகி ஆராயின் விதையிலிருந்து மரமும், நீராவியிலிருந்து நீரும்*

உண்டாவதை அறியலாம். இவற்றிலிருந்து தோன்று தல் அழிவைச் சார்ந்தே நிகழ்கின்றது என்ற உண்மை புலனாகும். அஃதாவது, முன்னிருந்த நீர் அழிந்து நீராவி அணுக்களாய்ப் பிரிந்து பின் ஒன்று கூடுங்கால் மீளவும் நீராகின்றது. ஆதலின் அழிதல் என்பது உருவ மாற்றம். மேலும் வீடு அழிந்துவிட்டது, சீலை எரிந்து விட்டது என்றால் அப்பொருட்கள் எவ்வெவ்வணுக் களிலிருந்து தோன்றினவோ அவ்வவ்வணுக்களாய் மாறிவிட்டன வென்பதே பொருள் எனப் பௌதீக சாத்திரங் கூறுகின்றது. சற்காரிய வாதம் (*the law of the conservation of matter*) இதனையே வற்புறுத் துகின்றது. சுருங்கக் கூறின், எப்பொருளும் கண்ணாற் காணப்படும் நிலைக்கு வரும்போது தோன்றுகின்றது அல்லது பிறக்கின்றது என்றும், இடைவிடாது காணப் படும்போது நிலைபெறுகின்றது அல்லது வாழ்கின்றது என்றும், உருவமாற்றத்தை அடையும்போது, அஃதா வது காணப்படாத தன்மையை அடையும்போது அழி கின்றது அல்லது இறக்கின்றது என்றும் சொல்லப் படும். இன்னும் தாய் தந்தையர் உயிருடன் இருக் குங்கால் பிள்ளைகள் பிறக்கவும் சிலகாலம் சீவிக்கவும் பின் இறக்கவும், பிள்ளைகள் சீவிக்கும்பொழுது தாய் தந்தையர் இறக்கவும் காண்கிறோம். இதனால் முத் தொழில் நடைபெறுவதைக் காண்கிறோம்.

அவ்வாறாயின், எல்லாம் ஒருங்கே தோன்றி ஒருங்கே நின்று ஒருங்கே அழிவதைக் காணமுடியவில்லையே எனச் சிலர் கேட்கலாம்.

மாரிகாலத்தில் செடிகள், சில ஊரும் பிராணிகள் ஒருங்கே தோன்றி, நின்று, ஒருங்கே அழிவதைப் பார்க்கிறோம். இச்செயல்கள் முத்தொழில்கள் கூட்

டாகவும் நடைபெறுகின்றன என்ற உண்மையை உணர்த்துகின்றன. இதனால் மகாசங்கார காலத்தில் பிரபஞ்சத் தொகுதி ஒருங்கே அழியுமென்பதும், அழிவைச் சார்ந்து பின் தோன்றுமென்பதும், இவ்வாறு இத்தொழில்கள் இடைவிடாது நடைபெறுமென்பதும் ஊகித்தறியக் கிடக்கின்றன. மகாசங்கார காலத்தில் நடைபெறுவதை நாம் நேரிற் பார்க்க முடியாது. எல்லாம் ஒருங்கே அழியுங் காலத்து நாமும் அழிவோமாகையால் பிரபஞ்சம் அழிவதை யார் பார்த்து யாருக்குக் கூறுவது!

## ஆ. பிரபஞ்சம் இறைவனாலே முத்தொழில்களை அடைகின்றது.

பிரபஞ்சம் தோன்றி நின்று அழிதல் அதன் இயற்கையான தொழில்கள். ஆதலால் முத்தொழில் நடைபெறச்செய்ய இறைவன் இருந்தாக வேண்டுமென்பது எவ்வாறு பொருந்தும் எனக் கேட்கலாம்.

சினிமாப் படம் ஓடுவதைப் பார்க்கிறோம். சில மணித்தியாலங்களில் ஓட்டம் நின்று விடுகின்றது. இவற்றால் அங்கு ஒருவனிருந்து படத்தை ஓடச் செய்கின்றான், பின் நிறுத்துகின்றான் என அனுமானித்தறிகிறோம். அதுபோல சுட்டி அறியப்படும் காரியமாய இப்பிரபஞ்சம் ஒரு கருத்தாவின் ஆணை வழி நின்று முத்தொழில்களை அடைகின்றது என அனுமானத்தால் (*inference*) அறியக்கிடக்கின்றது.

**இ:- பிரமா, விஷ்ணு, காலருத்திரர் முதலியோர் முத்தொழிற் படுவாராகையால் அவரில் எவரும் முதற்கடவுளராக முடியாது.**

சங்காரங்கள் (ஒடுக்கம்) ஐவகை. அவை நிவிர்த்தி கலையிலடங்கிய நூற்றெட்டுப் புவனங்களின் சங்காரம்,

பிரதிட்டாகலையிலடங்கிய ஐம்பத்தாறு புவனங்களின் சங்காரம், வித்தியா கலையிலடங்கிய இருபத்தேழு புவனங்களின் சங்காரம், சாந்திகலையிலடங்கிய பதினெட்டுப் புவனங்களின் சங்காரம், சாந்தியதீத கலையிலடங்கிய பதினைந்து புவனங்களின் சங்காரம் என்பன. இவற்றுள் இறுதியிற் கூறிய சாந்தியதீத கலையுட்பட்ட புவனங்களுஞ் சேர்ந்த சங்காரமே மகாசங்கார மெனப் படுதலால் அதைச் செய்பவன் முழுமுதற் கடவுளெனப்படுவான். எவ்வாறெனில், நிவிர்த்திகலைக்கு (சிருஷ்டிசக்கரம்) அதிபதி பிரமா, பிரதிட்டாகலைக்கு (திதிசக்கரம்) அதிபதி விஷ்ணு, வித்தியாகலைக்கு (சங்கார சக்கரம்) அதிபதி உருத்திரன், சாந்திகலைக்கு (திரோதான சக்கரம்) அதிபதி மகேசுரன், சாந்தியதீத கலைக்கு (அநுக்கிரக சக்கரம்) அதிபதி சதாசிவன். இவர்கட்கும் மேலாய், சங்கார காரணராயுள்ள சமஷ்டிரூப சதாசிவருக்கே (பரமசிவன்) முற்கூறிய ஐந்து கலைகளினுமடங்கிய புவனங்களையும் (மொத்தம் இருநூற்றிருபத்துநாலு), அவ்வவற்றிற்குரிய வியூகர் உட்பட அவர்களின் விசேஷ தொழில்பற்றி அதிபதிகளாகிய பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசர், சதாசிவர் முதலியோரையும் மகாசங்கார காலத்தில் சங்கரிக்கும் வல்லமை உண்டு. ஆதலின் பிரமா, விஷ்ணு, காலருத்திரர் முதலியோர் தத்தம் அதிகார எல்லையளவும் கடவுளரேயன்றி முழுமுதற் கடவுளராக மாட்டார். அன்றியும் மகாசங்காரத்தைச் செய்யும் பரமசிவன் சிலவற்றை யொழித்துச் சங்கரிக்கமாட்டார். சிலவற்றைச் சங்கரிக்காதுவிடின் அது மகாசங்காரமாக மாட்டாது. இவ்வாறு முழுவதையும் சங்கரித்தவிடத்து பரமசிவன் ஒருவரே எஞ்சி நிற்பரென்பதும், ஒடுங்கிய பிரபஞ்சத்துக்கு ஆதாரம் எஞ்சிய

அவரே என்பதும், ஒடுக்கிய அவரே ஆதாரமாய் நின்று பின்னரும் பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பரென்பதும் வெளிப்படை.

## ௬. இறைவன் ஐந்தொழில் (பஞ்சகிருத்தியம்) செய்வன்.

இறைவன் ஆன்மாவை அநாதியாகப் பந்தித்து நிற்கும் மலத்தை நீக்கிச் சிவமாந் தன்மையை யடையச் செய்யவே பஞ்சகிருத்தியமாய ஐந்தொழில் செய்வன். பிரபஞ்சம் தோன்றி நிலைபெற்று அழிதல் எனும் முத்தொழில்கள் ஆன்மாவின் பொருட்டுப் பிரபஞ்சமடையும் பொதுவான மாற்றங்களைக் குறிக்கும். படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழிலுடன், மறைத்தல் (*suppression of anavas*) அருளல் (*liberation*) என்பன ஆன்மாவுடன் நேர்த்தொடர்புடைய தொழில்களைக் குறிக்கும். மறைத்தலென்பது ஆணவமலத்தின் வலிமையைத் தடுத்தலெனவும், அருளல் பக்குவமுள்ள ஆன்மாக்களுக்கு முத்தி கொடுத்தல் எனவும் பொருள்படும். இன்னும் ஐந்தொழில் தூலவைந்தொழில், சூக்கும வைந்தொழில் என இருவகை. தூலவைந்தொழில் மகா பஞ்சகிருத்தியம், நித்தியபஞ்சகிருத்தியமென இருவகைப்படும். மகாபஞ்சகிருத்தியம் மகாசங்காரத்தின்பின் எல்லா வுலகங்களையும் ஆன்மாக்களின் சரீரங்களையும் ஒருங்கே படைத்துக் காத்து அழித்து மறைத்து அருளுதலைக் குறிக்கும். நித்திய பஞ்சகிருத்தியம் ஆன்மா தனித்தனி முத்திபெற வேண்டிக்கணந்தோறும் தொடர்பாக நடக்குந்தொழில்களைக் குறிக்கும். சூக்கும வைந்தொழில், சங்காரத்தின் பின், ஆன்மா கேவல நிலையிலிருக்கும்போது செய்

யப்படுவது. இது இறைவனின் முதலுபகார மெனவும் படும். மேற்கூறிய ஐந்தொழில்களில் மறைத்தலைக் காத்தற் றொழிலினும், அருளலை அழித்தற் றொழிலினு மடக்கி முத்தொழிலெனத் தொகுத்துக் கூறப்படுத லுமுண்டு.

### வேறுமதக் கொள்கைகள் :—

## 1. உலகாயதர் (materialists or carvakas) கொள்கை

"காட்சி (*perception*) அனுமானம் (*inference*) உரை (*verbal testimony*) எனும் மூன்று பிரமாணங்களுள் பஞ்சேந்திரியங்களால் நேரே அநுபவித்தறியக் கூடிய காட்சிப்பிரமாணமே நிச்சயமானது. மற்றவை இரண்டும் ஏற்றுக்கொள்ளப் படக் கூடியவையல்ல. பூதங்கள் (*material elements*) நிலம், நீர், நெருப்பு, வாயு எனும் நான்குமே. இவற்றின் கூட்டுறவி னால் பிரபஞ்சம் தோன்றும். ஆன்மா என்று ஒரு பொருள் இல்லை. நான் பருத்திருக்கிறேன் என்றால் 'நான்' என்ற சொல் தேகத்தையே குறிக்கும். வெற்றிலை, பாக்கு, சுண்ணும்பு இவை மூன்றையும் வாயில் மெல்ல சிவந்த நிறமுண்டாகும். அதுபோல, 'நான்' எனும் உணர்ச்சி உடம்பில் உள்ள பொருட் களின் சேர்க்கையால் உண்டானது. மனிதன் இறக்க உடம்பு மறுபடியும் நீர் அணு, தீ அணு, வாயு அணு முதலிய அணுக்க ளாகப் பிரிந்து விடும். இதனால் 'நான்' என்ற உணர்ச்சியுமற் றுப் போய்விடும். இறந்தபின் முத்தி (*liberation*) அடைய வேண்டுமென வெண்ணிப் புண்ணியங்கள் செய்வது வீண். உடம்போடிருக்கும் பொழுது எதைச் செய்தும் உண்டு உடுத் துச் சுகபோக வாழ்வை நடத்த வேண்டும். கடவுள் ஒருவன் இருந்தால் முத்தொழில்களைச் செய்ய வேண்டும். அத்தொழில் கள் நடைபெறுவதைக் காண முடியவில்லை. ஆதலால் கடவுளுண்டு என்பதும் கட்டுக்கதை" என்று உலகாயதர் கூறுவர். இக்கூற்றுக்கள் பொருந்தா.

ஏன்? உலகாயதர் காட்சிப்பிரமாணம் ஒன்றையே ஏற்பர். "இம்மையின் முயற்சியாலே இருமை யீட்

டப்படும்" என்பது இவர்களின் கொள்கை. இக் கொள்கை இவர்கள் கூறும் காட்சிப் பிரமாணத்தில் அடங்காது ஆகமப் பிரமாணமாய் அதில் அடங்குதலால், இவர்கள் கூறும் காட்சிப் பிரமாணம் எது என்பதை அறியமுடியவில்லை. "நான் பருத்துவிட்டேன்" என்றால் அது தேகத்தையே குறிக்கும். தேகத்தைச் சேர்ந்த பொருட்கள் கூடுவதாலுண்டாகும் உணர்ச்சியே அந்த "நான்" என்று உலகாயதர் கூறுவதும் அநுபவத்துக்குப் பொருத்தமில்லை. தேகத்தை எனது தேகம், எனது கை அல்லது எனது தலை யென்றுதான் சொல்கிறோம். எனது என்ற சொல்லால் தேகத்துக்குப் புறம்பாயது "நான்" என்பது தெளிவு. அன்றியும், நான் பருத்துவிட்டேன் அல்லது நான் வளர்ந்துவிட்டேன் என்று கூறப்படுதலாலும் தேகம் ஆன்மாவாகி விடாது. ஆன்மா மயக்கத்தினால், தான் வேறு உடம்பு வேறு என்று அறியாது, தான் தேகமே என எண்ணி அதனுடன் கூடி வாழ்வதினாலேயே "நான் பருத்து விட்டேன்" என்கின்றது. இது பழக்கம்பற்றி வந்த உபசார வழக்காகும். உலகம் முத்தொழில்களை யுடையது என்பதும் முன்பு எம்மால் விளக்கப்பட்டுள்ளது. இதனால் உலகாயதர் கூறுவது வெறுங் கற்பனை யாகின்றது.

## 2. புத்தர்கள் (Buddhists) கொள்கை.

முற்காலத்தில் இந்தியாவில் புத்தமதம் நான்கு பிரிவுகளை யுடையதாயிருந்தது. அவை யோகாச்சாரம் (விஞ்ஞான வாதம்), மாத்தியமிகம் (சூனியவாதம்), சௌத்திராந்திகம், வைபாடிகம் என்பனவாம். இவற்றின் கொள்கைகளை ஆதார

மாகக் கொண்டோர் "நிர்வாணம்" (*liberation*) எனும் முத்தி நிலையைப்பற்றி வெவ்வேருன கொள்கைகளை யுடையராயினும் அதனை யடையும் வழிகளைப்பற்றிப் பொதுவான கொள்கைகளை யுடையர். ஞானமே ஆன்மா. ஞானம் என்பது நீரோட்டம் போலச் சந்தானமாய், கணந்தோறுந் தொடர்ச்சியாய்த் தோன்றியழியும் தன்மையுள்ளது. ஆதலால் ஆன்மாவென்பது முற்கணத்தில் தோன்றிய ஞானத்தின் வாசனை, பிற்கணத்தில் தோன்றும் ஞானத்தைப் பற்றுவதால் தொடர்ச்சியாய் நிகழும் அறிவுணர்ச்சியே. அஃதாவது வித்துக் கெட மரந் தோன்றுவதுபோல, முற்கணத் தறிவின் வாசனை, தொடர்ச்சியாய்த் (*continuously changing stream of consciousness*) தோன்றும். மற்றைய உலகப் பொருட்களின் தோற்றமும் மறைவும் ஒவ்வொரு கணத்திலும் காணப்படும் உணர்ச்சி அநுபவமேயன்றி வேறொன்றுமில்லை. இவ்வாறுண்டாகும் வாசனையறிவு நீங்குவதே முத்தி அல்லது நிர்வாணம். ஆகையால் உலகம் மீளத் தோன்றுமென்பது பொருத்தமற்ற கூற்று. உலகம் உள்பொருளாயின் மீளத் தோன்றவேண்டியதில்லை. ஆதலால் தோற்றுவிக்கக் கடவுள் இருக்கிருர் என்பது வீண் பேச்சு என்று கூறுவர்.

சைவசித்தாந்திகள் "*முதற்காரணமாகிய மண் காரியமாகிய குடமாக மாருது. அதை வனைதற்கு நிமித்த காரணமாகிய* (*efficient cause*) *ஒரு குயவன் வேண்டும். அது போன்று முதற்காரணமாகிய மாயையினின்று தோன்றும் பிரபஞ்சத்திற்கு நிமித்த காரணமாகிய ஒரு கருத்தாவின்றிப் படைத்தல் முதலிய தொழில்கள் நிகழமாட்டா. அல்லாமலும், கணந்தோறும் பொருட்கள் மாற்றமடைகின்றன; ஆன்ம உணர்வும் கணந்தோறுந் தோன்றித் தோன்றி அழிகின்றது என இவர்கள் கூறுவதால், ஒருவன் செய்யும் பாவ புண்ணியத்தின் பயன் யாரைச் சேருமென்பது நிச்சயமற்றதாகின்றது. "இவர்கள் ஆன்மா கணந்தோறுந்*

தோன்றி யழிகின்றது என்று ஆன்மாவினுண்மையை மறுப்பதால் ஆன்மாவென்று சுட்டப்படும் இவரும் இல்லையாய், இவர்கள் கூறும் மறுப்பும் "என் தாய் மலடி என்றாற் போல முடியும்" எனக் கூறுவர்.

## 3. சாங்கியர் (Sankyas) கொள்கை.

"ஆன்மா (புருடன்), மூலப் பிரகிருதி என்பன அநாதியாயுள்ளவை. ஆன்மாக்கள் பல. ஆன்மா அறிவு மாத்திரையாய் பந்த நிலையிலும் முத்தி நிலையிலும் விகாரமடைதலின்றி ஒரே தன்மைத்தாயுள்ளது. மூலப் பகுதியாகிய பிரகிருதி, அசேதனமாய் அருவாய் உள்ளது. இம்மூலப் பிரகிருதியே (*not matter but unintelligent something*) பிரபஞ்சம் தோன்ற முதற் காரணமாயுள்ளது; சாத்வீகம், இராசதம், தாமதம் எனும் முக்குணங்களை அங்கமாக வுடையது; முக்குணங்களின் சம நிலையில் (*equilibrium*) பிரகிருதியாய் நின்று, முக்குணங்கள் ஒன்றிற் கொன்று கூடிக்குறைய உலகமாகப் பரிணமிக்கும் (*evolves*); அத்துடன் ஆன்மாவின் போகப் பொருளா யுமுள்ளது. ஆன்மாவும் பிரகிருதியும் சம்யோக சம்பந்தத்தால் கூடும்போது ஆன்மாவின் சந்நிதி (*mere presence*) மாத்திரத்தில் சிருட்டி ஆரம்பமாகும். அஃதாவது முக்குணங்களின் சமநிலை மாறப் பிரகிருதியினின்று "மகத்" என்னும் உலக வித்து (*the great germ of this vast universe*) வெளிப்படும். ஆன்மஅறிவு (*consciousness of the soul*) இதில் பிரதிபலிக்க, இது (மகத்) தொழிற்படத் தொடங்கி, அறிவைப் பெற்றுப் புத்தியாகப் பரிணமிக்கும். புத்தியினின்று நான் எனும் அகங்கார தத்துவம் தோன்றும். அகங்கார தத்துவம், சாத்வீக குணம் மேம்பட்ட நிலையில் மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஞானேந்திரியங்களையும், வாக்கு, கை, கால், பாயு, உபதம் எனும் கன்மேந்திரியங்களையும் மனத்தையும் தோற்றுவிக்கும். தாமதகுணம் கூடிய நிலையில் சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம் எனும் தன்மாத்திரைகள் ஐந்தையும் தோற்றுவிக்கும். தன்மாத்திரைகளினின்று பஞ்ச பூதங்கள் தோன்றும். இதன்படி தத்துவங்கள் இருபத்தைந்தாம்

ஆன்மாவுக்கு இத் தத்துவங்களின் சேர்க்கையால் இன்ப துன்பங்களை அநுபவித்தல் போன்ற உணர்ச்சி உண்டாகிறது. ஆயின், ஆன்மா புருடனாகிய தன்னையும் பிரகிருதியையும் வேறு வேறெனப் பகுத்துணர அஞ்ஞானம் நீங்கி மேல் நிலையை யடையும்'' என்பது சாங்கியரின் கொள்கை.

இவர்கள் கூறும் தத்துவத் தோற்றங்களிற் பெரும்பகுதி ஒப்புக்கொள்ளப்படினும், கடவுட் கொள்கை சம்பந்தப்பட்ட மட்டில் இவர்கள் கொள்கை பொருந்தாது. ஏன்? இவர்கள் ஆன்மாவின் சந்நிதியில் புத்தி தத்துவத்தில் அறிவு தோன்றுமென்கின்றனர். இது, ''நிலைக்கண்ணாடியிற் றோன்றும் உருவத்தைக் கண் காண்கிறது என்று கூறாது நிலைக்கண்ணாடியே காண்கிறது'' என்னுங் கூற்றுக் கொப்பாகும். புத்தி உயிரற்ற சடப்பொருளாதலால், தானே எதனையுமறிந்து அநுபவியாது என்க.

முன்னரே கூறப்பட்ட சாங்கிரியன் கொள்கையை ஆதாரமாகக் கொண்டு சிலர், ''சைவ சித்தாந்தம் கூறும் மாயையிலிருந்து உலகந் தோன்றின் அதே மாயையிலேயே பிரபஞ்சம் ஒடுங்கவேண்டும்; நிமித்த காரணனாகிய பரமசிவனில் ஒடுங்கு மென்பது எவ்வாறு? மாயையில் ஒடுங்கிய உலகத்தை மாயையே தோற்றுவிக்கும். அதற்கு ஒரு கருத்தா வேண்டாம். இன்னும் வனைதல் நடைபெறும்போது குயவனையும் குடத்தையும் ஒருங்கே காணலாம். ஆனால் படைத்தல் தொழில் நடைபெறும்போது கருத்தாவையும் மாயையையும் ஒருங்கே காணமுடியவில்லையே. ஆகையால் கடவுள் தேவையில்லை'' என வாதிக்கலாம்.

குயவனின் முயற்சியின்றி மண் குடமாகாது. மாயை அறிவற்ற, அசேதன, சூக்குமப் (*non-intelligent and subtle*) பொருள். ஆயினும் அது, அதி சூக்குமமான கடவுளுடன் ஒப்பிடும்போது, தூலப்பொருளா

கும். ஆதலால் கடவுள் வியாபகமாகவும், மாயை கடவுளில் வியாப்பியமாகவும் இருத்தலால் இரண்டையும், குயவனையும் குடத்தையும் போன்று, ஒருங்கே காண முடியாது. அன்றியும் முளைக்கு வித்து ஆதாரம். வித்துக்கு நிலம் ஆதாரம். அதுபோலப் பிரபஞ்சத்துக்கு மாயை ஆதாரம். மாயைக்குச் சிவசக்தி ஆதாரம். சிவன் சக்திக்கு வேறுதலின்மையால், சிவனே மாயை யொடுங்குதற்கு நிலைக்களனாயுள்ளா னென்பதும், மீளத் தோன்றுதற்கு நிமித்தகாரணனாகின்றான் என்பதும் பெறப்படும். ஆகையால் கடவுள் ஒருவன் உளன் என்பது அனுமானத்தால் அறியக்கிடக்கின்றது.

## 4. ஏகான்ம மாதிகள் (monists) கொள்கை.

இவர்களுக்கு வேத உபநிஷதங்கள் ஆதாரமா யிருக்கின்றன. இதில் அத்வைத வேதாந்திகள் உட்பட பல பிரிவினர் உளர். பிரமம் ஒன்றே சத் சித் ஆனந்தமாய் நித்தமாய் வியாபகமாயுள்ளது. மற்றும் காணப்படுவன வெல்லாம் வெறுந் தோற்றங்கள் காரியமாய உலகம் உள்ளதென்ற உணர்ச்சி, சிப்பியை அறியாமையினால் வெள்ளியெனக் காண்பது போன்ற மயக்க உணர்ச்சியே. பிரமம் தனது மாயா சக்தியினால் இவ்வாறு தோன்றச் செய்கின்றது. மாயா சத்துமன்றி அசத்துமன்றி அநிர்வசனமாய் (*indefinable*) உள்ளது. இன்னும் வழியில் காணப்படுங் கயிறு, தூரத்தில் நின்று மயக்கத்துடன் பார்ப்பவனுக்குப் பாம்பாகவே தோன்றும். எனினும் இப் பொய்த் தோற்றம் ஒரு உண்மைப் பொருளான கயிற்றை ஆதாரமாகக் கொண்டே உண்டானது. இதேபோன்று, அஞ்ஞானம் (அவித்யா-*nescience*) ஒரு பொருளின் உண்மைநிலையை அறியாதபடி தடுப்பதுமல்லாமல் வேறொரு பொருளாகவுங் கருதச் செய்கின்றது பிரமம் ஒன்றே அஞ்ஞான முடையார்க்கு உலகமாகவும் பல்வேறு பொருட்களாகவுங் காட்சியளித்து உணர்ச்சிகளை விகாரப்படுத்துகிறது. மாயைக்கு வேறான பிரமரூபமே நான் என வேதாந்த ஞானத்

தால் அறிய அஞ்ஞானம் நீங்கி முத்தி பெறலாம். ஆகை யால் கடவுள், ஆன்மா, பிரபஞ்சம் என்பன வெவ்வேறான பொருள்களல்ல (*Brahman and the world are one and they exist as reality and appearance*) என்று கூறுவர். இக்கூற்றும் பொருந்தாது.

ஏன்? பிரமம் ஆன்மாவாயிருப்பின் ஆன்மா துன்ப மடையக் காரணமில்லை. பிரமம் மாயாசக்தியினால் இவ் வித துன்பவுணர்ச்சியை யுண்டாக்குவது தன்னையே துன்பப்படுத்துவது போலாம். பிரமத்துக்கும் துன்ப முண்டெனின் பிரமம் மாயையால் கட்டுண்டு சுவதந் திரமில்லாத ஒரு பொருளாகிவிடும். அப்போது மாயையே எல்லா மாகிவிடும். ஆன்மா, பிரமம், உலகம் எல்லாம் மாயையால் கட்டுண்டதாய் விடும். இத னால் பிரமத்தைப்பற்றி மேம்படப் பேசுவதும், ஆன்மா தன்னைப் பிரமரூபமாகப் பாவனை பண்ணுவதும் வீண் செயல்களாகிவிடும். ஆகையால் கடவுள் வேறு, ஆன்மா வேறு, மாயை வேறு என்று கூறுவதே அநுபவத்திற் குப் பொருத்தமானது.

## 5. விசிட்டாத்வைதி (Qualified Monists) கொள்கை.

"கடவுள் ஒருவனே உளன். அவனே பரம்பொருள். எல் லாம் அறிபவன். எல்லாம் வல்லவன். அணுரூபமுள்ள ஆன் மாக்களும் அறிவற்ற சடப்பொருட்களும் அவனின் பகுதிக ளாய் அநாதியாய் அமைந்துள்ளன. சிலந்தி தனது உடம்பி லிருந்து எடுக்கும் பொருட்களைக் கொண்டு வலையை உண் டாக்குவது போல, அவன் தன்னுளடங்கிய சடப்பொருட்களைக் கொண்டு உலகைப் படைக்கின்றான். அப்போது அணு ரூபமா யுள்ள ஆன்மாக்கள் தங்கள் கன்மங்கட் கேற்ப உடம்புகளைப் பெறும். தேகத்தை வேறான பொருளென உணர்ந்து பற்றை நீக்குதல் முத்திக்கு வழி" என்பர். இக்கூற்றும் பொருத்த மன்று.

ஏன்? ஆன்மாக்கள் பரம்பொருளின் பகுதிகளா யமையின் அவைகட்கு விரும்பியபடி கன்மஞ் செய்யு முரிமையில்லை. ஆன்மாக்கள் துன்பமடைவது கடவுளுக்காக, கடவுள் செய்த கன்மங்கட்காக எனக்கொள்ளுதலும் பொருத்தமில்லை. அவ்வித குற்றத்தைச் சுமத்துவது இறைநிந்தை யாகும். ஆகையால் விருப்பு வெறுப்பற்ற கருத்தா ஒருவன் முத்தொழில்களைச் செய்யும் சங்காரகாரணனுயுளன் என்றே கொள்ள வேண்டும். ஆன்மா ஆணவ மலத்தின் சேர்க்கையால் கன்மங்கள் செய்து துன்பமடைகின்றது என்பதும் வெளிப்படை.

## 6. பொது.

1 'வினையே (கர்மா-*actions*) முத்தொழில் செய்யும், வினையைக் கூட்ட இறைவன் தேவையில்லை' என்று சிலர் வாதிப்பர்' இக்கூற்றும் பொருந்தாது.

ஏன்? வினை, மாயை போன்று சடப்பொருள். அது தானே ஆன்மாவைச்சென்று அடையாது வினையைக் கூட்டக் கருத்தா ஒருவன் வேண்டும். மடியில் பால் தானே சுரக்குமாயினும் இறந்த பசுமடியில் பால் சுரக்காது. காந்தம் இரும்பை இழுப்பினும் அவ்விரண்டினையும் நேர் வைக்க ஒருவன் வேண்டும். ஆதலின் அறிவுள்ள சேதனப் பொருளின் துணை, வினையை நடத்தத் தேவைப்படுகிறது. அதுபோன்று, வினையை அவ்வான்மாக்களுக்குக் கூட்டக் கருத்தா ஒருவன் வேண்டுமென்பது புலனுகின்றது.

2. குயவன் சிற்றறிவுடையன், ஆசையுட்பட்டவன், வினை வயத்தன். அப்படியிருக்கவும் அவனைக் கடவுளுக்கு உவமை கூறின், அக்கடவுளும் முத்தொழிலைச் செய்யும் போது வினை

யாற்கட்டுண்டு நிற்க வேண்டும். ஆதலால் கடவுள் ஆசை வயப்பட்டுச் செய்வாரோ? எனக் கேட்கலாம்

வினை சங்கற்ப (*mere presence*) மாத்திரையாற் செய்வதும் காரணத்தால் (கை முதலியவற்றால்) செய்வது மென இருவகைப்படும். இறைவன் சங்கற்ப மாத்திரையாற் செய்வன். அதனால் ஆசை வயப்பட்டு நிற்கக் காரணமில்லை. அவன் நிர்விகாரி, விகாரமுறாதவன். காலதத்துவம் இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என வெவ்வேறு வகைப்பட நின்று தொழிற்படினும், அம்மூன்று காலங்களுளொன்றினாலும், (காலதத்துவம்) கட்டுண்டு விகாரமடையாது. அது போல, இறைவன் கருவிகாரணங்களின்றிச் சங்கற்ப மாத்திரையால் முத்தொழில்களையும் செய்வானாகையால் விகாரமுறான். அஃதாவது, ஒருவன் கற்ற நூலினுள்ள சொல்லும் பொருளும் அவன் மனதில் உதிக்கும் போது அவன் அவற்றால் பந்தப்படாதது போலவும், ஒருவன் கனவில் கண்டவைகளை விழிப்பு நிலையில் அறியும் போது அக்கனவினால் பந்தப்பட்டு விகாரமுறாதது போலவும், கடவுள் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு இயல்பாகச் செய்யும் வினைகளால் விகாரமுறான். ஆகையால் கடவுள் ஆசை வயப்பட்டு எதையும் செய்யானென்பது தெளிவு.

முதற் சூத்திரம் முடிந்தது.

# பிரமாண வியல் ii

## இரண்டாஞ் சூத்திரம்

அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய ஆணையி
னீக்க மின்றி நிற்கு மன்றே.

அனுமானப் பிரமாணத்தால் பெறப்பட்ட முதல்வன் நிமித்த காரணனுகையால், அதே பிரமாணத்தால் முதற் காரணமான மாயையும் *(first cause)*, துணைக் காரணங்க ளான *(instrumental cause)* கன்மமும், சிற்சக்தியும் உண் டென இங்கே கூறப்படுகின்றது.

**செம்பொருள்:-**

இறைவன் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு சிவ சக்தி வடிவாய் நின்று உலகத்தைத் தோற்றுவிக்கின் ருன். உயிர் வேறு, உடம்பு வேறு எனப் பிரித்துக் காணமுடியாதபடி நம்முயிர் உடம்புடன் கலந்து நிற்பது போல, இறைவன், உயிர்கள் நிலைபெறும் பொருட்டு கலப்பினுல் அவ்வான்மாக்களேயாய் (ஒன்ருய்) நிற்கின் ருன். அதே சமயத்தில், கண்ணெளி விளங்கக் காரணம் சூரியனுயினும் கண் வேறு, சூரியன் வேருய்த் தனித்து நிற்பதுபோல, இறைவன் உயிர்கட்கு அறிவை விளக் குதற் பொருட்டுப் பொருட்டன்மையால் அவற்றின் வேருயும் நிற்கின்ருன். அதே சமயத்தில், கண் ஒரு பொருளைப் பார்த்துக் கொண்டிருப்பினும், ஆன்ம போதம் (அறிவு) அதனுடன் கூடினுலன்றி அப்பொரு ளைக் காணுது. அதுபோல, இறைவன், உயிர்கள் (ஆன் மாக்கள்) இன்ப துன்பங்களை அநுபவித்தற் பொருட்டு, உயிர்க்குயிராதல் தன்மையால் உடனுயும் நிற்கின்ருன்.

இவ்வாறு இறைவன் சிவசத்தி வடிவாய் ஆன்மாக் களுடன் கலந்து அவ்வான்மாக்களே யாயும், அவ்

வான்மாக்களின் வேருயும், ஆன்மாக்களுடனுயும் (இம் மூன்று சம்பந்தமும் தன்கட்டோன்ற) நிற்கும் நிலை "அத்துவிதநிலை" யெனப்படும்.

இறைவன் அருளுடையவன். சூரியனுக்கு ஒளி போன்று அவனுக்கு அருள் குணமாயுள்ளது. அருள் ஆற்றலாக (*energy*) இருப்பதால் ஒவ்வொரு நிலையில் அருட்சக்தி, பராசக்தி, திரோதானம், ஆணை எனப் பெயர்கள் பெறும். இவ்வாறு இறைவன் பராசக்தியிற் பிரிவில்லாது சமவேதமாய், திரோதானசக்தி வடிவாய் நின்று ஆன்மாக்கள் வினைக்கிடாக இன்பதுன்பங்களை நுகரச்செய்தல் வேண்டி, பிறப்பு இறப்புக்களை யடையச் செய்து, அருள் புரிவன்.

"வினைக் கிடாக" எனவே வினைகளுண் டென்பதும், "பிறப்பு இறப்புக்களை யடையச் செய்வன்" எனவே உடம்புகளும் அவை தோன்றுதற்கு முதற் காரண மான மாயையு முண்டென்பதும், வினை (கன்மம்) மாயை எனும் இரண்டும் தொழிற்படக் காரணம் ஆணவ மல நீக்கத்தின் பொருட்டாதலால், ஆணவ மல முண்டென்பதும் பெறப்படும்.

**பெறப்படுவன:-**

1. இறைவன் ஆன்மாக்களுடன் இரண்டற நிற்பன்.
2. இறைவன் கன்மபலனைக் கொடுப்பன்.
3. ஆன்மாக்கள் கன்மங்கட் கேற்ப உடம்புகளை எடுக்கும்.
4. இறைவன் சர்வ வியாபகன்.

**விளக்கம்:-**

அ. இறைவன் ஆன்மாக்களுடன் இரண்டற நிற்பன். அஃதாவது இறைவன் ஆன்மாக்களேயாயும், அவற்றின் வேருயும், அவற்றின் உடனும் நிற்பன் என்பதாம்.

## 1. இறைவன், கலப்பினுல் ஆன்மாக்களேயாய், அபேதமாய் நிற்கும் நிலை:-

ஒருவன், உடம்பு ஐம்பொறிகள் முதலியவற்றைப் பொருந்தி நிற்கும்போது, வேருெருவன் உடம்புக்கிட்ட பெயரால் "கந்தா" என அழைக்க, முன்னேயவன் 'ஏன்' என்கின்ருன். அஃதாவது உடம்பின் பெயரால் அழைக்க ஆன்மா "ஏன்" என்கின்றது. ஆன்மா தான் வேறு, உடம்பு வேறு என வேற்றுமை இன்றிக் கலந்து நிற்கின்ற காரணத்திஞலேயே அவ்வாறு "ஏன்" என்கின்றது. ஆன்மா இவ்வாறு உடம்புடன் இயைந்து நிற்பினும் ஆன்மா உடம்பாகாது. அதுபோல, இறைவன் ஆன்மாக்களின் வேறுபடாதியைந்து அவ்வான்மாக்களாயே நிற்பன். அவ்வாறு நிற்குங்கால் இறைவன் ஆன்மாவாயும், அதற்கு வேருயும் நிற்பன். ஆன்மா ஆன்மாவாய் மட்டுமே நிற்குமன்றி இறைவஞகாது.

## 2. இறைவன், பொருட்டன்மையால் ஆன்மாக்களின் வேருய், தானேயாய், பேதமாய் நிற்கும் நிலை:-

கண்ணுக்கு இயல்பாக ஒளிக்குணம் உண்டு. ஆயினும் அது தானே காணமாட்டாதாகையால் வேறு ஒளியுடன் கலந்து நின்றே காணும். இதஞல் கண்

ணுக்கும் பொருட்களுக்கும் ஒளியைக் கொடுத்துக் காணச் செய்வது சூரியன். சூரியனில்லையேல் கண்ணுக்குக் காணுந் தொழிலில்லை. அப்போது கண் தான் ஒரு பொருளுண்டென்பதையும் அறியாது. இவ்வாறு சூரிய ஒளி கண்ணொளியுடன் கலந்து நின்று காணச் செய்யினும் சூரிய ஒளி வேறு, கண்ணொளி வேறு என நாம் வேறுபடுத்தியறிகின்றோம். அதுபோல, இறைவன் அறிவை விளக்குதற் பொருட்டு ஆன்மாவுக்கு வேறாயும் நிற்கின்றான்.

இறைவன் ஆன்மாவுக்கு வேறாயுள்ளானெனின், வேதத்துள் "அத்துவிதம்" என்றதுமன்றி "ஏகம்" எனக் கூறப்படுவதால், இறைவன் ஆன்மா எனும் இரண்டும் ஒரு பொருளையே குறிக்குமோ வெனச் சிலர் கேட்கலாம்.

"துவிதம்" என்ற சொல் இரண்டு பொருட்களையே குறிக்கும். ஆயின் "அ" எனும் எதிர்மறையைக் குறிக்கும் எழுத்து இறைவன் ஆன்மா எனும் இரண்டு பொருட்களும் பிரித்துணர முடியாதபடி உடனாய் நிற்குமென்பதைக் குறிக்கும். இதனால் இறைவனும் ஆன்மாவும் ஒரே பொருளல்ல வென்பது புலனாகும். ஒரே பொருளாயின் ஏகம் என்ற சொல் ஒன்றே போதும். அத்துவிதம் என்ற சொல்லை உபயோகிக்க வேண்டிய அவசியமில்லை. வேதத்துள் "ஏகம்" என்ற சொல் ஐந்தொழில் செய்யும் பதிப்பொருள் ஒன்றே, இரண்டில்லை என்பதைக் குறிக்கும். இப்பதிப் பொருளுக்கு வேறாகியது, "பசு" எனப்படும் ஆன்மா. ஆன்மா ஆணவ மலத்தால் கட்டுண்ட நிலையில் "பசு" எனப் பெயர் பெறும்.

இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் வேற்றுமை கூறின், "பிரமமில்லை யெனில் எப்பொருளு மில்லை" யெனும் வேதக் கூற்றுக்கு இழுக்காகாதோ எனக் கேட்கலாம்.

"அ" என்ற ஒலி வாயைத் திறக்கும்பொழுது இயல்பாகப் பிறக்கின்றது. அதற்குப் பின்பு மூச்சை இயக்கும் வகையாலும், நா, உதடு முதலியவற்றை ஏற்றவாறு மாற்றியமைப்பதாலும், ஏனைய உயிரெழுத்துக்களையும் உயிர்மெய் யெழுத்துக்களையும் குறிக்கும் ஒலிகள் பிறக்கின்றன. இதனால் வாய் திறத்தலினாலுண்டாகும் "அ" எனும் ஒலியைச் சார்ந்தே மற்றைய ஒலிகள் பிறக்கின்றன என்பது தெளிவு. அதுபோல, இறைவன் எங்கும் வியாபகமாயிருத்தலின் (*pervading all things*) "பிரமமில்லை யெனில் எப்பொருளுமில்லை" யெனப்பட்டது.

### 3. இறைவன், ஆன்மாவுக்கு ஆன்மாவாதல் தன்மையால், ஆன்மாக்களுடனாய், பேதாபேதமாய் நிற்கும் நிலை:-

கண் ஒரு பொருளைப் பார்த்துக் கொண்டிருப்பினும், ஆன்மபோதம் கண்ணொளியுடன் கூடியவிடத்தே அப்பொருளைக் காணும். அதுபோல, இன்ப துன்பங்களை அனுபவிக்கும் உரிமையுடைய ஆன்மாக்களை அவ்வவ் விடயங்களிற் செலுத்திப் பயன்களை அநுபவிக்கச் செய்யவேண்டி இறைவன் உடனாயும் நிற்கின்றான்.

மேற் கூறியவாறு, இறைவன் ஆன்மாக்களுடன், கலப்பினால் ஒன்றாயும், வேறாயும், உடனாயும் நிற்கும் (அஃதாவது தனித்தனி அபேதமாயோ அல்லது பேதமாயோ அல்லது பேதாபேதமாயோ நில்லாது மூன்று நிலைகளும் ஒருங்கே யமைய நிற்கும் நிலையே) சுத்த அத்துவித நிலை யெனப்படும். எவ்வாறெனில், மெழுகுடன் பொன்தூளைச் சேர்த்து உருக்

சினால் பொன்னூல் மெழுகுடன் ஒருங்கிணைந்தாலும் பொன்னூல் வேறு மெழுகு வேறெனப் பேதமாயும், பேதமாயினும் வேறு பிரிக்கமுடியாது நிற்கின்ற நிலையில் பேதாபேதமாயும் நிற்றல்போல, இறைவன் உயிர்களுடன் நிற்கின்றான் என்க. சுத்தாத்துவித சைவசித்தாந்தம் கூறும் அத்துவிதமே இது. இதனால் மற்றைய சில மதங்கள் கூறும் கருத்துக்கள் பொருந்தா என அறிக. உதாரணமாக, "அத்துவிதம்" (*non daulity*) இன்னதென்பதை விளக்கும் மாயாவாதிகள் பொன்னும் ஆபரணமும் போல் அபேதமென்பர்; மாத்துவர் (*dualists*) இருளும் ஒளியும்போல் பேதமென்பர்; பாஞ்சராத்திரிகள் (*qualified monists*) சொல்லும் பொருளும்போல் பேதாபேத மென்பர். இவர்கள் கூறுவன ஒவ்வோர் நிலையையே (*aspects*) குறிக்கின்றன.

**ஆ இறைவன் ஆன்மாக்களுக்குக் கன்ம பலனைக் கொடுப்பன்.**

இருவினைகள் கன்மங்கள் (*actions*) எனப்படும். முற்பிறப்பிற் செய்த கன்மங்கள் மாயையிற் கட்டுண்டு கிடக்கும். அவற்றையே இறைவன் ஆன்மாக்களுக்குக் கொடுப்பான். நடைபெறும் எக்காரியங்களுக்கும் காரணங்களுண்டு. காரண மின்றேல் காரியமில்லை. நன்கு ஆராயின், உலகில் எல்லோரும் ஒரே தன்மைத்தாய் இன்பதுன்பங்களை அடையாம லிருப்பதற்கும் காரணமுண்டென்பது புலனாகும். சுருங்கக் கூறின், நாம் முற்பிறவியிலோ அல்லது இப்பிறவியிலோ செய்த கன்மங்கட் கேற்ப இன்ப துன்பங்களை அநுபவிக்கிறோம்.

வினைகள் எவ்வாறிருப்பினும், அருளே (*Grace*) வடிவாயுள்ள இறைவன் எல்லோரையும் ஒப்ப நோக்காது, சிலரைத்

தாழ்வித்தும், சிலரின் ஆயுளைக் குறைத்தும் ஐந்தொழில் செய்தல் நீதியோ எனுமையம் எழலாம்.

அதற்குக் காரணம் முற்கூறப்பட்ட வினைகளே. வினை நல்வினை, தீவினை என இருவகைப்படும். அவை இரண்டும் அநுபவத்துக்கு வரும் நிலையில் முறையே பிராரத்துவ, ஆகாமிய, சஞ்சித கன்மங்களாய் மாறும். பிராரத்துவ கன்மம் உடம்பு இருக்கும் போதே அதன் மூலம் அநுபவிக்கப்படுவது. அது அநுபவிக்கப்பட்டுக்கழிய உடம்பும் அழிந்துவிடும். ஆகாமியகன்மம் பிராரத்துவ கன்மத்தை அநுபவிக்கும்போது புதிதாய்த் தோன்றும் விருப்பு வெறுப்புக்களாம். இவ்விருப்பு வெறுப்புக்கள் ஆன்மா உடம்பை விட்டு நீங்கும்போது புத்தி தத்துவத்தைப் பற்றி நின்று சஞ்சிதகன்மம் ஆகும். கன்மம் இவ்வாறு மூன்று நிலைகளில் நின்று பயனைக் கொடுப்பதால் அது தொடர்பாய் நிகழும். சுருங்கக் கூறின், முற்பிறப்பிற் செய்த புண்ணிய பாவங்களாகிய இருவினைகள், சஞ்சிதகன்மமாய் நிற்கும். அதனின் பயனாகிய இன்ப துன்பங்களை அநுபவித்தற்குரிய இடமாகிய உடலைத் தோற்றுவிக்க இறைவன் காரணனாயிருக்கிறான். ஆகையால் இறைவன் கன்மத்துக்கேற்ப இன்ப துன்பத்தை அநுபவிக்கச் செய்தல் நீதியே. உடம்பு அறிவற்ற சடமாயிருப்பதால் இன்ப துன்ப அநுபவங்கள் உடம்புக்கு இல்லை. ஆயின் ஆன்மாக்கள் தாம் எடுத்த உடம்புகள் மூலம் அவற்றை அநுபவிக்கும்.

அவ்வாறாயின், ஒரு பிறவியில் செய்தவினைகள் எதிரே வரும் மறுபிறவியில் அதே ஆன்மாவை எங்ஙனந் தொடருமெனக் கேட்கலாம்.

உடம்பை விட்டுப் பிரியும்போது, ஆன்மா புத்தி தத்துவமுட்பட்ட சூக்குமதேகத்துடன் செல்லும்.

விருப்பு வெறுப்புக்கள் புத்தி தத்துவத்தைப்பற்றி நிற்றலால் அவை அவ்வான்மாவையே தொடர்ந்து பலனைக் கொடுக்கும்.

அவ்வாறாயின், விருப்பு வெறுப்புக்களே அடுத்த பிறவியில் பலனைக் கொடுக்குமென்றது. இறைவன், சக்தியைத் துணைக்கொண்டு, வினைகளுக்கீடாக இன்பதுன்பங்களை நுகர்விப்பன் என்றது எதற்காக எனும் கேள்வி எழலாம்,

கமக்காரன் செய்யும் முயற்சியின் பயனை விளைநிலமே கொடுக்கும். முயற்சி தானே கொடுக்காது. அது போல உணவும், வித்துமாயும் முன் தொட்டு முறையே வரும் பிராரத்த, ஆகாமிய, சஞ்சித வினைகளை இறைவன் அவ்வான்மாவுக்குக் கூட்டுவான். கூட்டுவான் என்பது சங்கற்ப மாத்திரையால் தொழிற்படச் செய்வன் எனப்பொருள் படும். வினைகள் சடமாயும், அசித்தாயும் (*insentient*) இருப்பதால் தாமே பயன்களாகா.

வினை சடப்பொருளாயிருப்பதினால் தானே சென்று ஆன்மாவைச் சேராது என்பது பொருந்தும். ஆயின் அறிவுடைய ஆன்மாக்கள் வினைப்பயனை அறிந்து எடுத்து அநுபவிக்கலாம். அதற்கு ஒரு கருத்தா வேண்டுமோ? எனக் கேட்லாம்.

ஆன்மா பெத்தகாலத்தில் (*fettered state*) சுதந்திரமின்றி மலத்தால் மறைப்புண்டு கிடக்கின்றது. வினையுமோ சடப்பொருள். இரும்பினை நேரே பிடிக்கும் போதே காந்தம் அதனை இழுக்கும். அதுபோல, இறைவன் வினைப்பயனை அவ்வவ்வான்மாவுக்கு முறை பிறழாது கூட்டவேண்டியவனாகின்றான்.

இறைவன் பிரபஞ்சத்தைத் தோற்றுவித்தானென்றல் பொருந்தும்; காக்கின்றான் என்பது பொருந்தாது. பிரபஞ்சம் சங்கரிககப்படுமளவும் தானே நிலைபெறும். சங்கரிப்பார் வேறொருவர் இருந்தால் தானே அவரைத் தடுத்துக் காத்தல்

வேண்டும்; ஆகையால் இறைவன் காத்தற்றொழில் செய்ய வேண்டுவதில்லை என மேலும் ஐயம் எழலாம்.

ஒரே நேரத்தில் தோன்றிய இரு சீவராசிகளுள், ஒன்று நெடுங்காலமும், மற்றது சிறிது காலமும் வாழுகின்றன. இவ்வேறுபாடு வினை வேறுபாட்டால் ஆயது. இவ்விருவினைகளும் இறைவன் ஆணையால் நடைபெறுவதால், காத்தல் தொழில் நடைபெற வேண்டியதாயிற்று.

முன் செய்த கன்மத்திற்கேற்ப நாம் இப்போது அனுபவிக்கின்றோமெனின், கன்மமே எங்களை இயக்குகிறது; கன்மத்தை விலக்க முடியாது; நடக்க வேண்டியது நடந்தே தீரும், அன்றியும் தீமை செய்பவன், உடன் பலனாக, இன்பத்தை அநுபவிக்கின்றான்; நன்மை செய்பவன் துன்பமடைகிறான். இவை இடையிடையே காணப்படுங் காட்சி. ஆகையால் நாம் வினையை வெல்ல முயற்சி செய்வது வீண் என்ற அடுத்த ஐயம் எழுகின்றது.

ஒருவன் ஏதோ ஒரு காரணத்தால் கடனாளியாய் விட்டான்; முயற்சி செய்தால் அக்கடனைத் தீர்ப்பது மட்டுமன்றி, சில ரூபாய்களையும் மிச்சம் பிடிக்கலாம். இதை விடுத்து "கடன் வந்து விட்டதே" என ஏங்கி நின்றால் கடன் ஒரு போதும் தீராது. எனவே முயற்சி அவசியமாகின்றது.

ஆகாமிய கன்மம் வினைக்கு வித்தாகும் என முன் கூறினோம். இதன்படி ஆராயின் நாம் இப்போது அநுபவிக்கும் இன்ப துன்பங்கட்கு, முற்பிறவியிற் செய்த வினைகளும் இப்பிறவியிற் செய்த வினைகளும் காரணமென்பது புலனாகும். முன் செய்த வினை தீவினையாயிருந்தால், இப்போது செய்யும் நல்வினையின் பயன்குறையும்.

முன் செய்த வினை நல்வினையாயிருப்பின் இப்போது சிறிது நன்மை செய்தாலும் அதிகப்பயனைத்தரும். மேலும், ஒருவன் கடன்காரனாயிருந்தால் எவ்வளவு பொருளைச் சம்பாதித்தாலும் பெருஞ் செல்வனாக வர முடியாது. ஏனெனில் உழைப்பின் பெரும்பகுதி கடனுக்குப் போய்விடும். அந்நிலையில் "எவ்வளவைச் சம்பாதித்தாலும் மிச்சமில்லையே" என எண்ணி முயற்சி செய்யாது விட்டால் கடன் குறையாது; செல்வனாகவும் வர முடியாது. இதிலிருந்து, ஆத்மீகசெல்வத்துக்கும் முயற்சி இன்றியமையாதது எனும் உண்மை தெற்றென விளங்குகின்றது.

## மாயை (First Cause)

மா - ஒடுங்குதல், யா - தோன்றுதல். அஃதாவது பிரபஞ்சம் தோன்றுவதற்கும், ஒடுங்குவதற்கும் இடமாயுள்ளது. அது பிரபஞ்சத்திற்கு முதற் காரணமாய் நித்தமாய், சடமாய், முதல்வனுக்குப் பரிக்கிரக சக்தியாய், முதல்வனின் வியாப்பியமாய், அருவாயுள்ளது. அது சுத்தமாயை, அசுத்தமாயை என இருவகைப்படும்.

### சுத்தமாயை:-

சிவதத்துவம் முதலான சுத்தப் பிரபஞ்சத்துக்குக் காரணமாய், இன்பத்தைப் பயப்பதாய், நித்தமாய், வியாபகமாய், அருவமாய், சடமாய், விஞ்ஞானகலர்க்கும் பிரளயாகலர்க்கும் சுத்த தனுகரணபுவன போகங்களைத் தோற்றுவிப்பதாய், மயக்கஞ் செய்யாததாயுள்ளது.

**அசுத்தமாயை:-**

கலைமுதல் நிலமீருன அசுத்தப் பிரபஞ்சத்துக்குக் காரணமாய், துன்பம் விரவியதாய், நித்தமாய், சடமாய், வினைக்குப் பற்றுக் கோடாய், பொதுவகையால் வினையாற் கட்டுண்ட ஆன்மாக்களை மயக்குவதாய், அருவமாய், சகலருக்குத் தனுகரணபுவன போகங்களைத் தோற்றுவிப்பதாய், ஆணவம் கன்மம் மாயை எனும் மும்மலங்களுள் ஒன்ருய், திரோதானசக்தியாற் காரியப்படுவதாயுள்ளது. இவ்வசுத்தமாயையினின்று அநித்தியமாயுள்ள பிரகிருதி மாயைதோன்றும்.

**ஆணவம்:-**

ஞானம், இச்சை, கிரியை எனும் ஆன்ம சிற்சக்திகளை அணுத்தன்மையாக்கிக் கீழ்நிலைப் படுத்துவதால் ஆணவமலம் எனப்படும். விபரீத வுணர்வை உண்டாக்கல் அதன் தொழில். பொதுவாகச் சகலத்தில் கருவி கரணங்களுடன்கூடி அஞ்ஞானத்தைக் காட்டும். அது நித்தியமாய், வியாபகமாய், ஏகமாய் ஆனுல் பல சக்திகளையுடையதாய், ஆன்மாக்களை அநாதியே பந்திப்பதாய், ஆன்மாக்கள் அவத்தைகளடையக் காரணமாயுள்ளது.

கன்மம், மாயை எனும் இரண்டும் ஆன்மாவை மேல் நிலைப்படுத்த உதவுவன. ஆயினும் ஆணவத்துடன் சேர்ந்து நின்று தத்தம் தொழில்களைச் செய்வதினுல், ஆணவத்துடன் சேர்த்து இவையும் மலங்களெனக் கருதப்படும்.

ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களும் ஆதியோ அநாதியோ எனக் கேட்கலாம்.

அரிசி எப்பொழுது உண்டோ அப்போது அதன் கூடவே உமியும், தவிடும், அதன் முளைத்தற் சக்தியு முண்டு. அதுபோல, ஆன்மா எப்பொழுது இருந்ததோ, அப்போதே, ஆணவமும் மாயையும் மூலகன்மமும் இருந்தன என்பது பெறப்படும். கடவுள் அநாதியே யுள்ளவர்; அதுபோல ஆன்மாக்களும் அநாதியே உள்ளனவென அறியப்படுதலால், ஆணவம் கன்மம் மாயை என்பனவும் அநாதியானவை.

சூரியனின் சந்நிதியில் தாமரை மொட்டு விரிதல் போல, சிவத்தின் வேறுபடாத திரோதானசக்தியின் இயக்கத்தால் மும்மலங்களும் தத்தம் காரியங்களைச் செய்கின்றன.

## தத்துவத் தோற்றம்:- 1. சுத்தமாயாதத்துவங்கள்.

சுத்த மாயையினின்று சிவம், சக்தி, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை எனும் சிவதத்துவங்கள் ஐந்துந் தோன்றும். சொல்வடிவும், பொருள்வடிவுமாகிய இருவகைப் பிரபஞ்சங்களையுந் தோற்றுவித்தற் பொருட்டு, ஆதிசக்தி தொழிற்படுங்கால் ஞானசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி எனும் மூன்று நிலைகளில் தொழிற்படும். இச்சாசக்தி என்றும் ஒரே தன்மைத் தாய்த் தொழிற்படும். ஞானசக்தி சுத்தமாயையைப் பொருந்துதலால் சிவதத்துவமெனப்படும் நாததத்துவந் தோன்றும். கிரியாசக்தி நாததத்துவத்தைப் பொருந்துதலால் சக்திதத்துவ மெனப்படும் விந்துதத்துவந் தோன்றும். விந்துவில் ஞானசக்தியும் கிரியாசக்தியும் சமமாய்த் தொழிற்படுதலால் சாதாக்கிய தத்துவந் தோன்றும். ஈசுரதத்துவத்தில் ஞானம் கூடி

யும், கிரியை குறைந்தும் தொழிற்படும்போது சுத்த வித்தை தோன்றும்.

**2. அசுத்தமாயாதத்துவங்கள் (ஏழு). இவை வித்தியா தத்துவங்கள் எனவும்படும்.**

காலம்:- இறப்பு, நிகழ்வு, எதிர்வு என நின்று காரியப் பிரபஞ்சத்தை வரையறவு செய்து கன்மத்தை அளவுபடுத்தும்.

நியதி:- அவரவர் செய்த கன்மபலனை, அவரவரே அநுபவிக்க வழி செய்யும்.

கலை:- ஆன்மாவின் குற்றமாகிய ஆணவமலத்தை இடையிடையே சிறிது நீக்கும்.

வித்தை:- ஆன்மாவின் ஞானசக்தியை சிறிது விளக்கும்.

அராகம்:- ஆன்மாவின் இச்சாசக்தியை விளக்கிப் போகத்தில் ஈடுபடச் செய்யும்.

புருடன்:- கலை, வித்தை, அராகம் என்பன ஆன்மாவின் கிரியா இச்சா ஞான சக்திகளை விளக்கிய போது, ஆன்மா, காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்பனவற்றுடன் கூடி பஞ்சகஞ்சுகமுடையனாய், இச்சை கிரியை ஞான சக்திகளை ஏகதேசத்தில் பொருந்தி, பிரகிருதி மாயைப் போகநுகர்ச்சியின் பொருட்டு உன்முகமாய் நிற்கும் நிலை.

மாயை:- பிரகிருதி மாயைக்கு முதற்காரணமாயுள்ளது.

**3. பிரகிருதிமாயை (Primordial Substance).**

இதினின்று ஆன்ம தத்துவங்கள் இருபத்துநாலுந் தோன்றும். அவை, புத்தி, அகங்காரம், மனம்,

சித்தம் எனும் அந்தக்கரணங்கள் நான்கும், மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஞானேந்திரியங்கள் ஐந்தும், வாய், கால், கை, பாயு, உபத்தம் எனும் கன்மேந்திரியங்கள் ஐந்தும், சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தம் எனும் தன்மாத்திரைகள் ஐந்தும், ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம் எனும் பூதங்கள் ஐந்துமாம்.

புத்தி:- குணதத்துவத்தினின்றுந் தோன்றி, ஆன்மாக்கள் செய்யும் இருவினையின் பயனாக வந்த விடயத்தை இன்னதென நிச்சயிக்கும்.

அகங்காரம்:- யான், எனது எனக்கூறும் இறுமாப்புக்குக் காரணமாய் நிற்கும்.

மனம்:- தைசதஅகங்காரத்தினின்றுந் தோன்றி விடயத்தை அறியும் பொருட்டுச் சித்த ரூபமாய் நின்று சிந்தித்தும், பின் விடயத்தின்மீது சந்தேகமுற்று மறுபடியும் நிச்சயிக்க ஆசையைப் பிறப்பித்து நிற்கும்.

சித்தம்:- மனத்தின் விருத்தியே சித்தம்.

ஞானேந்திரியங்கள்:- இவை உறுப்புக்களைக் குறிக்கா. உறுப்புக்களின் சக்திகளைக் குறிப்பன. ஆன்மாவின் ஞான சக்தியை விளக்குதலின் ஞானேந்திரியங்களெனப்படும். அவை மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐந்துமாம்

கன்மேந்திரியங்கள்:- வாக்கு, கை, கால், பாயு, உபத்தம் எனும் ஐந்துமாம். இவைகளும் அவ்வவ்வுறுப்புக்களைச் செலுத்தும் சக்திகளையே

(இந்திரியங்களையே) குறிக்கும். ஆன்மாவின் கிரியாசக்தியை விளக்குவதினால் கன்மேந்திரியங்களெனப்படும்.

**தன்மாத்திரைகள்:-** சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தம் எனும் ஐந்துமாம். ஐம்பெரும் பூதங்களுக்கு முதற்காரணமாயுள்ளன.

**பூதங்கள்:-** நிலம், நீர், நெருப்பு, வாயு, ஆகாயம் எனும் ஐந்துமாம். தன் மாத்திரைகளுக்கும் இவற்றுக்கும் சூக்கும தூல வேறுபாடேயுண்டு. தன்மாத்திரைகளை முளைக் கொப்பிடின், அதில் தோன்றும் பூதங்களை மரத்துக்கொப்பிடலாம்.

இங்ஙனங் கூறிய நாதம் முதல் நிலமீறாகவுள்ள முப்பத்தாறு தத்துவங்களின் தொழில்களை ஆராய்ந்து அறிதல் தத்துவரூப மெனப்படும். இவற்றை அசத்தாகிய சடமெனக் காணல் தத்துவதரிசன மெனப்படும்.

**இ. இனி, கன்மம் தொழிற்படுமாறும் அது தொடருமாறும்:-**

வினை மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும் செய்யப்படும். அது மந்திராத்துவா, பதாத்துவா, வன்னாத்துவா, புவனாத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா எனும் ஆறு அத்துவாக்களினிடமாக நடைபெறும். செய்யப்படும் அவ்வினையினால் உண்டாகும் விருப்பு வெறுப்புகள் தூலகன்ம மெனப்படும் ஆகாமியகன்மமாய் நிற்கும். ஆகாமியம், பின்பு பக்குவமாகும்வரை புத்திதத்துவத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு மாயையில் ஒடுங்கிச் சூக்குமகன்மமாகிய சஞ்சிதமாகும். சஞ்சிதம் பின்னர் சாதி, ஆயுள், போகம்

எனும் மூன்றிற்கும் காரணமாய், சனகம், தாரகம், போக்கியம் என மூவகைப்பட்டு, பின்னர் பக்குவமடையுங்கால் ஆதிதெய்வீகம், ஆத்தியான்மீகம், ஆதிபௌதீகம் எனும் முத்திறத்தால் பலவகைப்பட்டு, அதிசூக்கும கன்மமாகிய பிராரத்தமாகும்.

**ஆதிதெய்வீகம்:-**

தெய்வங் காரணமாக வரும் துன்பங்கள்:- உதாரணமாக, கருப்பம், பிரசவம், மூப்பு, அஞ்ஞானம், மரணம், நரகம் இவற்றினால் வருந்துக்கங்கள்.

**ஆத்தியான்மீகம்:-**

உயிர்களால் வரும் துன்பங்கள்:- உதாரணமாக, நோய், மனிதர், விலங்கு, கள்வர், மனைவி, மைந்தர், பொருள் தேடல், காத்தல், முதலியவற்றால் சரீரத்தோடு சம்பந்தப்பட்ட துக்கமும், மனைவியைச் செல்வத்தைப் பிரிதல், அழுக்காறு, கோபம், அதிக ஆசை இவற்றால் மனத்தைப்பற்றி வருந் துக்கமுமென இருவகைத் துன்பங்கள்.

**ஆதிபௌதிகம்:-**

பஞ்ச பூதங்கள் வாயிலாக வரும் துன்பங்கள், உதாரணமாக, குளிர், வெப்பம், இடி, பூகம்பம், மழை, வீடுவிழுதல் இவற்றால் வருந் துக்கம்.

இவற்றால் வினைகள் செய்தமுறைப்படியே பயனைக் கொடுக்கும் என எண்ணலாகாது. அஃதாவது 'கியூ' வரிசையில் அநுபவத்துக்கு வரவேண்டுமென்ற நியதியில்லை. முன்செய்த வினைப்பயன் பின்னும், பின் செய்த வினைப்பயன் முன்னும் அநுபவத்துக்கு வரலாம். அன்றியும் இப்பிறவியிற் செய்த வினைகளிற் சில இப்

பிறவியிலேயும்; சில, வரப்போகும் பிறவியிலேயும்; சில, பல பிறவிகட்குப் பின்னும்; சில, முற்பிறப்பிற் செய்த் வினைகளுடன்கூடி இப்பிறப்பிலேயும் பயன் தரும். இக்காரணத்தினுல், இப்பிறப்பில் நன்மை செய்தவர் துன்பத்தையும், தீமைசெய்தவர் நன்மையையும் எய்தி எதிர்மறையான பயன்களை அநுபவிக்கக் காண்கிறேம்.

இன்னும், வினைகள் உலகம் (தண்ணீர்ப் பந்தல் வைத்தல் முதலியன), வைதிகம் (யாகஞ் செய்தல்), அத்தியான்மிகம் (சிவபூசை முதலியன), அதிமார்க்கம் (யோகஞ் செய்தல்), மாந்திரம் (மந்திரம் செபித்தல், ஞான சாத்திரம் ஓதுதல் முதலியன) என ஐவகைப் படும். இவை, ஒன்றிலொன்று உயர்வுடையனவாதலால், முறையே, நிவிர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியாதீதகலை எனும் பஞ்சகலைகளுள் அடங்கி அசுத்தம், மிச்சிரம், சுத்தமாகிய போகங்களைக் கொடுக்கும்.

**ஈ. உயிர்கள் கன்மங்கட்கேற்பப் பலவித உடம்புகளை எடுக்கும்:-**

பாம்பு தோலை உரித்துவிட்டு, உட்டோலை ஆதாரமாகக் கொள்வதுபோல, ஆன்மா கண் காது முதலிய அவயவங்களையுடைய தூலவுடம்பை நீக்கிவிட்டு, படைப்புக் காலந் தொடக்கம் சங்கார காலமளவும் அழியாது நிற்குஞ்சூக்கும வுடம்புடன் பூதசாரசரீரம், யாதனு சரீரம் என்பனவற்றிலொன்றை எடுத்துக்கொண்டு, முறையே சுவர்க்கத்திலும் நரகத்திலும் சென்று இன்ப துன்பங்களை அநுபவிக்கும். அப்போது, விழிப்புநிலையில் அறிந்தவற்றைக் கனவுநிலையில் அறியமுடியாது மறத்

தல்போல, முற்பிறப்பநுவத்தை மறந்துவிடும். இத ுலேயே, நாமும் முற்பிறப்பநுபவங்களை இப்போது ஞாபகத்திலிருந்து அறியமுடிவதில்லை. சூக்குமதேகம் சத்தம் பரிசம் உருவம் இரசம் கந்தம் எனுங் காரண தன்மாத்திரை ஐந்தும், மனம் புத்தி அகங்காரம் எனும் மூன்றுமாகிய எட்டுங் கூடுவதால் உண்டாகும். சுவர்க்க நரகவின்பதுன்பங்களை அநுபவித்தபின், சூக்கும தேகத்தோடுள்ள அவ்வான்மா, முன்னர்த் தூலவுடம்பு நீங்கிய தருணத்தில் வினைக்கேற்ப விரும்பிய தெய்வப் பிறப்பு மக்கட்பிறப்பு விலங்கின் பிறப்பு நரகர் பிறப்பு முதலியவற்றுளொன்றை விரும்பும். அவ்விருப்பம், எஞ்சிநிற்கும் புண்ணிய பாவத்திற்கேற்ப வாய்த்துள்ள கருவைச் சேர்ந்து பிறவியெடுக்கச் செய்யும்.

## உ. இறைவன் சர்வ வியாபகன் (all pervasive):–

இறைவன் ஐந்தொழில் செய்வன்; செய்யும்போது, சக்தியுடன் நீக்கமறநின்றுசெய்வனெனில் 'இறைவன் ஐந்தொழில் செய்வன்' என்பது பொருந்தாது. ஆகையால் அருளாகிய பராசக்தியும் ஐந்தொழில் செய்வள் என்று கூறின் குற்றமோ? எனும் கேள்வி எழலாம்.

இறைவன் எங்கும் வியாபகமாயுள்ளவன்; ஆதலின், சக்தியினின்று பிரிந்திருத்தலென்பது அவனியற்கைக்கு மாறானதொன்று. சக்தி சிவத்துடன் குணகுணி சம்பந்தமுள்ளது. அஃதாவது சூடும், நெருப்பும்போல அவை பிரியாதவை. சிவசக்திதொடர்பை வேறொரு உதாரணத்தில் வைத்தும் அறியலாம். சூரியன் தன்னையுங் காட்டும், பிறபொருள்களையுங் காட்டும். தன்னைக்காட்டும் நிலையில் சூரியனெனவும், பிறபொருள்களைக் காட்டும்நிலையில் கிரணம் எனவும் பெயர் பெறும்.

ஆயினும், சூரியன்வேறு,கிரணம் வேறன்று. அதுபோல இறைவன் புறப்பொருள்களில் தோய்வின்றிச் சுயம் பிரகாசமாய் நிற்குந்தன்மையில் சிவம்'என்றும், கருணை காரணமாய் உலகெலாமாகி, உடனுமாய் ஆன்மாக்களிடத்து நிற்குந் தன்மையில் 'சக்தி' யெனவும், ஐந்தொழில்செய்யுந்தன்மையில் 'பதி' எனவும் பெயர்பெறுவன். சூரியன் தனியாய்த் தூரத்து நிற்பினும், கிரணங்கள் மூலமாக உலகப் பொருள்களோடு தொடர்புறுந் தன்மையினாலே தாவரங்களும், உயிர்களும் வாழுகின்றன. அதுபோல, இறைவனும் தனது அருளாகிய பராசக்தியினிடமாய் நின்று உயிர்களுடனும், உலகுடனும் தொடர்புகொண்டு ஐந்தொழில் செய்கின்றான். ஆதலால், பராசக்தி ஐந்தொழில் செய்வள் என உபசாரமாகக்கூறினும், இறைவன் ஐந்தொழில் செய்கின்றான் என்றே கொள்ளவேண்டும்.

**௨. காரக சக்திகள்:-**

இன்னும், இறைவன் சக்திரூபத்தில் சிவசக்தியாய் நின்று, தொழில் வேறுபாட்டால் பராசக்தி ஆதிசக்தி இச்சாசக்தி ஞானசக்தி கிரியாசக்தி எனும் பஞ்சசக்திகளாயும், ஈசானத்துக்குரிய பஞ்சசக்திகளாயும், அகோரத்துக்குரிய அட்டகலாசக்திகளாயும், வாமதேவத்துக்குரிய பதின்மூன்று சக்திகளாயும், சத்தியோசாதத்துக்குரிய அட்டகலாசக்திகளாயும், சனனி இரோதயித்திரி ஆரணி எனும் மூவகைச் சக்திகளாயும், நிவிர்த்தி பிரதிட்டை வித்தை சாந்தி சாந்தியதீதை எனும் ஐவகைச் சக்திகளாயும், வாமை சேட்டை ரௌத்திரி காளி, கலவிகரணி பலவிகரணி சர்வபூததமனி மனோன்மணி எனும் அட்ட மூர்த்திகளின் சக்திகளாயும்,

அத்தியான்மிகம் எனப்படும் உன்மனை, சமனை அநாசிருதை, அனந்தை, அநாதை, வியோமரூபை, வியாபினி முதலாம் சோடசப்பிரசாதகலாசக்திகளாயும் நின்று ஆன்மாக்களுக்கு அருள் செய்வன்.

இரண்டாஞ் சூத்திரம் முடிந்தது.

## மூன்றுஞ்சூத்திரம்

உளதில தென்றலின் எனதுட லென்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலிற் கண்படில்
உண்டிவினை இன்மையின் உணர்த்த உணர்தலின
மாயா வியந்திர தனுவினுள் ஆன்மா.

இறைவன் மாயையிலிருந்து உலகத்தைத் தோற்றுவிக்கின்றானென்பது அனுமானப்பிரமாணத்தால் முன்னே பெறப்பட்டது. இப்போது, அதேபிரமாணத்தால் இறைவன் மாயை எனும் இரண்டிற்கும் வேறாக உலக காரியங்களை அநுபவிக்க, ஆன்மா உண்டெனக் கூறப்படுகின்றது.

**செம்பொருள் :-**

சூனியான்மவாதிகள் ஆன்மா எதுவென அறியப் புகுந்து, இறுதியில் ஆன்மாவெனும் ஒரு பொருள் இல்லையென்று கூறுவர். இக்கூற்றுப் பொருந்தாது. "ஆன்மாவென ஒரு பொருளில்லை" என்று ஆராய்ந்தறிந்து நிற்கும் பொருள் எதுவோ, அதுவே ஆன்மாவென இவர்கள் அறியார்.

தேகான்மவாதிகள் தேகமே ஆன்மாவென்பர். இவர்கள் "எனது உடம்பு பருத்து விட்டது; உனது தேகம் மெலிந்து விட்டது" எனக் கூறக்காண்டலால் தேகத்துக்கு வேறாக ஆன்மா உண்டென இவர்கள் கூற்றிலிருந்தே அறியலாம். ஆகையால் தேகம் ஆன்மா அன்று.

இந்திரியான்மவாதிகள் ஐம்புலன்களே ஆன்மாவென்று கூறுவது பொருந்தாது. கண் பொருட்களைக் காணும்; காது சத்தத்தைக் கேட்கும். ஆனல் கண் சத்தத்தைக் கேட்டலும், காது பார்த்தலும் இல்லை.

ஐம்புலன்களையும் ஆதாரமாகக்கொண்டு, அவற்றின்மூலம் அறியும் ஒரு பொருள் அவற்றின் வேறாக உண்டு. அதுவே ஆன்மா. ஆகையால் ஐம்புலன்கள் ஆன்மா அல்ல.

சூக்குமதேகான்மவாதிகள் சூக்குமதேகமே ஆன்மா வென்று கூறுவதும் பொருந்ாது. ஐம்பொறிகளு மடங்கிய கனவுநிலையிற் கண்டவிடயங்கள் விழிப்புநிலை யில் அறியப்படுவதில்லை. அறியவரினும் மாறுபாடாய் அறியப்படும். சூக்குமதேகம் ஆன்மாவாயின் விடயங்கள் மாறுபட்டுத்தோன்றக் காரணமில்லை. ஆகையால் சூக் குமதேகம் ஆன்மாவன்று. சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்(ஓசை ஊறு சுவை ஒளி நாற்றம்) எனும் தன்மாத் திரை ஐந்தும் மனம், புத்தி, அகங்காரம் எனும் மூன் றும் கூடுவதால் உண்டாம் தேகம் சூக்குமதேகம் எனப்படும்.

பிராணான்மவாதிகள் பிராணனே ஆன்மாவென்று பொருத்தமின்றிக் கூறுவர். பிராணவாயு (பிராணன்) விழிப்புநிலையிலும் உறக்கநிலையிலும் ஒரே தன்மைத் தாய்த் தொழிற்படுகின்றது. ஆயினும் ஐம்பொறிகள் விழிப்புநிலையில் தொழிற்பட்டும், உறக்கத்தில் ஒடுங்கி யும் விடுகின்றன. இதனால், பிராணவாயு அவற்றைத் தொழிற்படுத்தவும் ஒடுக்கவும் சக்தியற்றது என்பது பெறப்படும். ஆகையால் பிராணவாயுவின் வேறாக அவற்றை இயக்கும் ஆன்மா உண்டு என்பது புலனாகும்

விஞ்ஞானான்மவாதிகள் பிரமமே ஆன்மா என்பர். விடயத்தை அறிவிக்கவே நாம் அறிகிறோம். அறிந்ததை யும் மறந்துவிடுகின்றோம். ஆனால் பிரமம் அறிந்தாங்கு

அறியும் முற்றறிவுடைய பொருள் எனக் கூறப்படுகின்றது. ஆகையால் 'பிரமம்' 'ஆன்மா' அன்று.

சமூகான்மவாதிகள் உடம்பின் தத்துவங்கள் கூடிய சமூகமே ஆன்மா என்பர். இதுவும் பொருந்தாது. உடம்பின் தத்துவங்களெல்லாம் ஒன்றுகூடி நிற்பினும் அது தானேயியங்காது. தத்துவங்கள் சடப்பொருள். ஆதலால் ஆன்மாவே தத்துவங்களுடன் கூடிநின்று உடம்பை இயக்கும்.

பெறப்படுவன:-

1. "ஆன்மா இல்லை" என்று கூறும் அறிவு ஒன்று உண்டு. அதுவே ஆன்மா.
2. "எனது தேகம்" என்று கூறப்படுதலினால் நான் வேறு, தேகம் வேறு. இந்த 'நானே' ஆன்மா.
3. ஐம்புலன்களின் விடயங்களை ஒருங்கே அறியக்கூடியது எதுவோ அதுவே ஆன்மா.
4. சூக்குமதேகம் ஒரேதன்மைத்தாய்த் தொழிற்படினும், கனவு விழிப்புநிலைகளில் மாறுபாடாய் அறிவு நிகழ்வதால், அதற்கு வேறாக் ஆன்மா உண்டு.
5. துயில்நிலையில் இன்பதுன்பவுணர்ச்சி இன்மையால், பிராணவாயுவுக்கு வேறாக உள்ளது ஆன்மா.
6. எல்லாவற்றையும் ஒருங்கே அறியும் முற்றறிவுடைய பிரமம் மறந்து, மறந்து அறியாதாகையால் பிரமம் ஆன்மா அல்ல.

**விளக்கம் :-**

**அ. சூனியான்மவாதிகள் :-**

ஆன்மா இல்லையென்று கூறுவர். இவர்கள் முறையே உடல் நான் அன்று, ஐம்பொறிகள் நான் அன்று, பிராணன் நான் அன்று என்று சொல்லுங்கால், "இது நானல்ல, இது நானல்ல" என்று கூறிக் கொண்டு இறுதியில் நிற்கும் ஒரு அறிவு உண்டென்பதை அறிவார்கள். அந்த அறிவையும் சூனியம் என்று கூறின், அகரமுதலிய சூக்குமபஞ்சாக்கர ரூபமாய் நின்று அவ்வாறு 'சூனியம்' எனக்கூறும் ஓர் அறிவு இறுதியில் உண்டென்பதை உணருவர். பஞ்ச அக்கரங்களாவன அகாரம், உகாரம், மகாரம், நாதம், விந்து என்பனவாம். அந்த அறிவையுஞ் சூனியமென்று கூறின் அக் கூற்று "என் தாய் மலடி" என்றாற்போல வழுவாய் முடியும். ஆகையால் இறுதியில் அறிந்து நிற்கும் அறிவையே ஆன்மாவெனல் மிகப் பொருத்தமுடைத்து.

**ஆ. தேகான்மவாதிகள் :-**

தேகமே ஆன்மாவென்பர். உலக வாழ்க்கையில் ஒருவன் எனதுமனைவி, எனதுபிள்ளை, எனதுவீடு எனக் கூறினும், உண்மையில் அவன் வேறு, மனைவி வேறு, பிள்ளைவேறு, வீடுவேறு என அறியப்படும். அது போல, என்னுடைய தேகம் என்று சொல்லுவதால் நான் வேறு, என்னுடைய தேகம் வேறு என்று ஆகிறது. அன்றியும் தேகம் உறக்கநிலையில் உணர்ச்சியற்றிருக்கிறது. அவயவங்கள் ஒன்றும் குறைவுபடாததேகம் பிணமான நிலையில் ஒன்றையும் அறியமுடியாதிருக்கிறது. ஆகையால் இவர்கள் தேகமே ஆன்மா என்று கூறுதல் ஏற்புடைத்தன்று.

இ. இந்திரியான்மவாதிகள்;-

இவர்கள் ஐம்பொறிகளே ஆன்மாவென்பர். கண் அறிவதை மூக்கு அறியமாட்டாது; ஒவ்வோர்பொறிக்கும் ஒவ்வோர் தொழிலேயுண்டு. மேலும், உறுப்புக்கள் ஊறுபாடின்றியிருக்கும் உயிரற்ற உடம்பில், ஒரு பொறியும் தொழிற் படுவதில்லை. நாம் கூறும் பொருளுக்கோ இச்சை, ஞானம், கிரியை எனும் தொழில்கள் இருக்கின்றமையின், அதுவே ஐம்பொறிகளின் தொழில்களால் பயனடையும் பொருளென்பது பெற்றும். ஆகையால் இந்திரியான்மவாதிகள் ஐம்பொறிகளை ஆன்மா என்றல் ஒவ்வாது.

ஈ. சூக்குமதேகான்மவாதிகள்:-

இவர்கள் சூக்குமதேகமே ஆன்மாவென்பர். கனவின்கண் ஐம்பொறிகளுமடங்கித்தொழிலற்று நிற்கும். அப்போது சூக்குமவுடம்பை (*subtle body*) ஆதாரமாகக்கொண்டு கேட்டும், பார்த்தும், முகர்ந்தும், விளையாடும் ஒருபொருள் சூக்குமதேகத்துக்கு வேறாக உண்டு; அதுவே ஆன்மா.

அவ்வாறுயின், ஆன்மா கனவில் கண்டவற்றை விழிப்பில் மறக்கக் காரணமென்ன எனக்கேட்கலாம்.

ஆன்மா அவத்தையுறுதலின் எப்போதும் ஒரே தன்மைத்தாயறியாது; உள்ளேபோதலும் வெளியே வருதலுமாகிய தொழில்களையுடையது; அஃதாவது, ஆன்மா தத்துவங்களுடன் கூடுதலும், நீங்குதலுமாகிய தொழில்களையுடையதென்பதாம். இதனுல், ஆன்மா கனவில் கண்டவற்றை விழிப்புநிலையில் மாறியும் அறி

யுந்தன்மையுடையது. ஆகையால் சூக்குமதேகமே ஆன்மா என்றல் பொருந்தாது.

## உ. பிராணான்மவாதிகள்:-

இவர்கள் பிராணனே (பிராணவாயுவின் இயக்கம்) ஆன்மாவென்பர். பிராணவாயு துயில்நிலையிலும், விழிப்புநிலையிலும் ஒரேதன்மைத்தாய்த் தொழிற்படினும் துயில்நிலையில் உடம்பின் கருவிகள் ஒடுங்கிவிடுகின்றன. உடம்புக்கு இன்பதுன்ப நுகர்ச்சி விழிப்புநிலையிலேயே உண்டாகின்றது. இதனால் உடம்பையும் பிராணவாயுவையும் அடக்கியாளும் ஒருபொருள் இவற்றின் வேறுயுண்டென்றும், அதனாலேயே ஒருவன் "நான் நன்றாக நித்திரைசெய்தேன்" எனக்கூற முடிந்தது என்றும் அறியக்கிடக்கின்றன. ஆகையால் பிராணனே ஆன்மா எனல் பொருந்தாது.

## ஊ. விஞ்ஞானான்மவாதிகள் (பிரமான்மவாதிகள்):-

இவர்கள் பிரமமே ஆன்மாவென்பர்; இக்கூற்றும் பொருந்தாது. பிரமமே ஆன்மாவெனில் அது விழிப்பு கனவு நிலைகளில் மாறுபாடாயும், மறந்தும் அறிய வேண்டிய காரணமில்லை. ஏனெனில், பிரமம் முற்றறிவுடையது; இயல்பாகவே அறியுந்தன்மையது. நாம் ஆராயும்பொருளோ, ஒருவிடயத்தை அறிந்தும், மற்றதை அறியாதும், விட்டுவிட்டு அறிந்தும், இவ்வாறு ஐந்தவத்தைப்படுதலால் அப்பொருள் சடமுமன்று, பிரமமுமன்று. அது, இவற்றுக்கு வேறான ஆன்மா. இதனால் பிரமமே ஆன்மா எனுங்கூற்று மறுக்கப்பட்டது.

ஏ. சமூகான்மவாதிகள் :-

இவர்கள் கலை முதல் நிலம் இறுதியாகவுள்ள தத்துவங்களும், அவற்றின் மாயாகாரியங்களான உருவம், வேதனை, விஞ்ஞானம், குறிப்பு, பாவனை முதலிய பஞ்ச கந்தங்களும் சேர்ந்த கூட்டமே ஆன்மா; இவற்றில் ஒன்று குறையினும் அறிவு நிகழாது; ஆகையால் இவற்றின் சமுதாயமே ஆன்மா என்று வாதிப்பர். தத்துவங்கள் அறிவற்ற சடப்பொருள்கள். இவற்றுக்குத் தனித்தனி வேறுபெயர்களுள. இவை ஆன்மாவுக்கு விடிவாம்விளக்கனையதாய தூல, சூக்கும, பரதேகங்களாம். அன்றியும், இந்திரியங்களும், மற்றும் சித்தம், பிராணன் முதலிய கருவிகளும் தொழிற்படாத துரியாதீதநிலைக்கண்ணும் அறிவு நிகழ்தலால் தத்துவக் கூட்டங்களே ஆன்மா என்பது பொருந்தாது

மூன்றுஞ் சூத்திரம் முடிந்தது

## இலக்கணவியல் ;

### நான்காஞ்சூத்திரம்

அந்தக் கரண மவற்றி னொன் றன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணரா
தமைச்சர சேய்ப்பமின் றஞ்சவத் தைத்தே.

அனுமானப் பிரமாணத்தால் பெறப்பட்ட விடயங்களினால் உண்டாமையந்தீர இலக்கணங்கூறப்படுதல் வழக்கமாதலின், இரண்டாஞ்சூத்திரத்தாற் பெறப்பட்ட ஆன்மாவின் இலக்கணம் இங்கே கூறப்படுகின்றது.

செம்பொருள்:-

*ஆன்மா அந்தக்கரணங்களாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரமெனும் உட்கருவிகள் நான்கினுள் ஒன்றன்று அது இயல்பாகவே அறியுந்தன்மையுடைய பொருள். ஆயினும், அது அநாதியே சகசமலம் எனும் ஆணவமலத்தால் பிடிக்கப்பட்டிருப்பதினால் அதனறிவு மறைப்புண்டிருக்கின்றது. அதனால், அதன் (ஆன்மா) அறிவைத் தெளிவுபடுத்தக் கருவிகள் தேவைப்படுகின்றன.*

*ஆன்மாவை அரசனுக்கு ஒப்பிடலாம். மந்திரிமார் பக்கத்திலிருந்து அரசனுக் கறிவுறுத்துவதுபோல அந்தக்கரணங்களாகிய கருவிகள் ஆன்மாவுக்கு விடயங்களை அறியவுதவுகின்றனவாதலால், அவற்றை மந்திரிமாருக்கு ஒப்பிடலாம். அவ்வாறு அறியும்போது, ஆன்மா ஏனைய தத்துவங்களோடு கூடியும் கூடாமலும் நின்று அறிந்து வருகின்றது. அதனால், அது சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் (விழிப்பு, கனவு, துயில், உறக்கம், பேருறக்கம்) எனும் ஐவகை அவத்தைநிலைகளில், முறையே தூலவுடம்பு, சூக்குமவுடம்பு, புரியட்*

டகவுடம்பு, கஞ்சுகவுடம்பு, காரணவுடம்பு எனும் ஐந்து உடம்புகளைப் பொருந்தி நின்று விடயங்களை அறிகின்றது.

**பெறப்படுவன:-**

1. ஆன்மா மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் அந்தக்கரணங்களுக்கு வேறானது.
2. ஆணவமலம் ஆன்மாவின் அறிவை மறைத்திருக்கின்றது.
3. ஆன்மா ஐந்தவத்தையுற்று அறியும்.

**அ. ஆன்மா அந்தக்கரணங்களுக்கு வேறானது:-**

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் நான்கும் அந்தக்கரணங்கள். மனம் விடயங்களைச் சந்தேக நிலையில் பற்றும்; சித்தம் அவற்றைச் சிந்திக்கும்; அகங்காரம் விடயங்கள் எவ்வாறென நிச்சயிக்கத் துணியும்; புத்தி அவற்றை நிச்சயிக்கும்; எனினும், அவ்வந்தக் கரணங்கள் அத்தொழில்களைத் தாம் செய்கின்றனவென்று அறியமாட்டா. ஆயின், ஆன்மா அந்தக்கரணங்களுடன் கூடிநின்று, அவற்றின் தொழில்கள் காரணமாக வரும் இன்பதுன்பங்களை அறிந்து தானே அநுபவிக்கும்.

**ஆன்மா விடயங்களை அறியும்முறை.**

காண்டல் அல்லது அநுபவவறிவு முறையே மூன்று படிகளில் பூர்த்தியாகும். முதலில் நிகழ்வது வாயிற் காட்சி (*sensory perception*-இந்திரியக் காட்சி); அஃதாவது, காணப்படும் பொருள் இன்னதெனப் பகுத்தறியமுடியாதநிலையில் ஐம்பொறிகளால் பொதுப்படை

யாகக் (நிர்விகற்பமாய்) காணுங் காட்சி. இதன்பின் நிகழ்வது மானசக்காட்சி(*discriminatory perception*); அஃதாவது நிர்விகற்பமாகக் கண்டகாட்சியை ஐயந் திரிபின்றி, மனதினால் தெளிவாக உணருவதாகிய சவிகற்பக்காட்சி. இதன்பின் நிகழ்வது தன்வேதனைக் காட்சி (*knowledge by actual experience*); அஃதாவது தெளியப்பட்ட விடயத்தை இன்பமாகவோ, துன்பமாகவோ ஆன்மா உணர்ந்துநிற்குங்காட்சி. இவ்வாறு இக்காட்சிகள் ஆன்மாவைச் சென்றடையும்முறையைக் கடல் அலைகள் கரைசேரும் முறைக்கொப்பிடலாம். கடலினுண்டாகும் அலைகள் தொடர்பாய்க் கரைசேர்வது போல, குறித்த காட்சிகள் அந்தக்கரணங்கள் வாயிலாக ஆன்மாவைச் சேருமென்பதாம்.

ஆன்மா சூக்குமபஞ்சாக்கரரூபமாய் நின்றே விடயங்களை யறியும். அகாரம், உகாரம், மகாரம், நாதம், விந்து என்பன சூக்குமபஞ்சாக்கரங்கள். இவை தம்முள் ஒன்றுகூடி நிற்கும் நிலையில் 'பிரணவம்' எனப்படும். விடயங்களை அறியமுற்படும் நிலையில், ஆன்மா முற்படும் நிலையில் சதாசிவத்தை அதிதெய்வமாகவுடைய நாததத்துவத்தினால் செலுத்தப்பட்டுக் கலாதிதத்துவங்களுடன் கூடிப்புருடதத்துவமாய் நிற்கும். அப்போது புருடனாகிய ஆன்மா, செவி முதலிய ஐம்பொறிகளால் அறியப்படும் சத்தம் முதலிய விடயங்களுள் ஒன்றினை மகேசுரனை அதிதெய்வமாகவுடைய விந்துவினாற் செலுத்தப்படும் சித்தமாய் நின்று, இவ்விடயம் எதுவோவெனச் சிந்தித்தும்; உருத்திரனை அதிதெய்வமாகக்கொண்ட மகாரத்தாற் செலுத்தப்படும் மனமாய் நின்று, விடயத்தில் ஆசைகொண்டு பற்றியும்; பிரமாவை அதிதெய்வமாகக்கொண்ட அகாரத்தினாற் செலுத்தப்படும் அகங்

காரமாய் நின்று, இதை யானறியவேண்டுமென முற்படும்; பின் விட்டுணுவை அதிதெய்வமாகக் கொண்ட உகாரத்தாற் செலுத்தப்படும் புத்தியாய் நின்று, "இதுவின்னது" எனத் தெளிந்தும் நிற்கும். ஆகையால் ஆன்மா அந்தக்கரணங்களின் வேருனதென்பது புலனுகும்.

## ஆ. சகசமலமாகிய ஆணவமலம் ஆன்மாவின் அறிவை மறைத்திருக்கிறது:-

இரண்டு மரக்கட்டைகளையெடுத்து ஒன்றுடன் மற்றதை உரோஞ்சினுல் தீயுண்டாகிறது. இதனுல் "மரக்கட்டையில் தீ மறைந்திருக்கிறது" என்று கூறுவோம். இன்னொருவகையிற் கூறின், மரக்கட்டை தீயுடன் இரண்டறநின்று தீயை வெளிக்காட்டாதுதன்னுள் மறைத்து வைத்திருக்கின்றது எனலாம். அதுபோல, மயக்கத்தைச் செய்யும் இருளையொத்த ஆணவமலம், அறிவேரூபமாயுள்ள ஆன்மாவைத் தன்னுள் மறைத்து ஆணவமலரூபமாய் நிற்கச்செய்யும். இந்நிலையில் ஆன்மா தன் சுயநிலை கெட்டுநிற்கும். கண்பார்வைகுறைந்த கண்ணுக்குக் கண்ணுடி உதவுவதுபோலவும், இருளை ஓட்டுதற்கு விளக்கு உதவுவதுபோலவும், ஆணவமலச் சேர்க்கையால் ஆன்மா தானிழந்த அறிவைப் பெறுதற்கு, உடம்பு முதலிய மாயாகாரியங்கள் உதவுகின்றன. இதன்காரணமாகவே ஆணவமலநீக்கத்துக்குப் பிறப்பு இன்றியமையாததாயிற்று. ஆணவமலம் செம்பிற் களிம்புபோல உயிரின் குற்றமாய், அநாதியே ஆன்மாவுடன் கூடியதாய், ஆன்மா கேவலாவத்தை, சகலாவத்தை, சுத்தாவத்தை எனும் மூன்று காரணவத்தைகளையுடைய மூலகாரணமாய், நித்தமாய், வியாபக

மாய் நின்று ஆன்மாவின் ஞானத்தை மறைக்கும். வேறுசமயநூலோர் ஆணவமலத்தை ஞானபாவம் பிராந்திஞானம், தமோகுணம், அவிச்சை, மாயா என மாறுபடக்கூறி மயங்குவர்.

## இ. ஆன்மா (தொழிற்படும் முறையால்) ஐந்தவத்தையுற்று அறியும் இயல்புடையது.

**விளக்கைக் கொளுத்தியவுடன் கண் ஒரேதன்மைத்தாய்க் காணும். அதுபோல, ஆன்மா, விளக்கத்தைக் கொடுக்கும் உடம்பு முதலிய கருவிகரணங்களைப் பெற்றும், ஐந்து அவத்தையுற்றுக் காணுதல் ஏன் எனக் கேட்கலாம்.**

ஆணவமலத்தினால் மறைப்புண்ட ஆன்மா அரூபியாய், தத்துவங்களுடன் கூடி, இரண்டறநிற்கும். அஃதாவது, தத்துவரூபமாய் நிற்கும். அங்ஙனம் நின்று சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் எனும் ஐந்துகாரியாவத்தைகளுறும். அஃதாவது, விழிப்புநிலையில் தூலவுடம்பு தொழிற்படுதலால் புருடனாகிய ஆன்மா, இலாடத்தானமாகிய புருவமத்தியில் நிற்கும். பின்பு கனவுநிலையில் சூக்குமவுடம்புக்குச் சென்று கண்டத்தில் நிற்கும்; பின்பு துயில்நிலையில் புரியட்டகவுடம்புக்குச் சென்று இதயத்தில் நிற்கும்; பின்பு துரியநிலையில் கஞ்சுவுடம்புக்குச் (நுண்ணுடம்பு) சென்று, உந்தியில் நிற்கும்; பின்பு துரியாதீதநிலையில் காரணவுடம்பிற் சென்று உந்தியின் கீழுள்ள மூலாதாரத்தில் நிற்கும். இம் முறையே, ஆன்மா ஒடுக்கநிலையில் இலாடத்தானத்திலிருந்து மூலாதாரத்தை நோக்கிக் கீழே செல்வதைக் கீழாலவத்தை யென்றும், மூலாதாரத்திலிருந்து ஆன்மா தான்வந்தவழியே மேல்நோக்கிச் செல்வதை மேலாலவத்தை யென்றுங் கூறப்படும். இவ்

ஐந்து உடம்புகளும் நமது தேகத்தில் முறையே, ஒன்றிற்கொன்று, சூக்குமமாய் அமைந்துள்ளன வென்பதை அவத்தைநிலைகளினால் அறியலாம்.

இவ்வாறு ஆன்மா விழிப்புநிலையில் புருவமத்தியில் நிற்கும்போது வாய், கை, கால், பாயு, உபத்தம் (வாக்கு, பாணி, பாதம், பாயு, உபத்தம்) எனும் கன்மேந்திரியங்கள் ஐந்தும்; அவற்றின் தொழில்களான வசனம், தானம், கமனம், விசர்க்கம், ஆனந்தமெனும் வசனாதி ஐந்தும்; செவி, மெய், கண், வாய், மூக்கு எனும் ஞானேந்திரியங்கள் ஐந்தும்; அவற்றின் விடயங்களான சப்தம், பரிசம், உருவம், இரசம் கந்தம் எனும் தன்மாத்திரைகள் ஐந்தும்; பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் எனும் வாயுக்கள் பத்தும்; மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் அந்தக்கரணங்கள் நான்கும்; புருடதத்துவமொன்றுங் கூடிய முப்பத்தைந்து கருவிகளுடன் கூடிநிற்கும். பின் ஆன்மா கனவுநிலையில் கண்டத்தில் நிற்கும்போது முற்கூறிய கன்மேந்திரியம் ஐந்தையும், ஞானேந்திரியம் ஐந்தையும் விட்டுநீங்கி, எஞ்சிய இருபத்தைந்து கருவிகளுடன் கூடிநிற்கும். அது துயிலில் இதயத்தில் நிற்கும்போது பிராணன், சித்தம், புருடன் எனும் மூன்று கருவிகளுடனேயே கூடிநிற்கும்; துரியநிலையில் உந்தியில், பிராணன், புருடன் எனும் இரு கருவிகளுடன் கூடிநிற்கும்; துரியாதீதநிலையில் இக்கருவிகள் செல்லாத மூலாதாரத்தில் புருடன் ஒன்றுடனேயே நிற்கும்.

ஆன்மா புருவநடுவிலிருந்து மூலாதாரம்வரை குறித்த கருவிகளைப் படிப்படியாக விட்டுநீங்கிக் கீழே

செல்வதையும், பின் மூலாதாரத்திலிருந்து படிப்படியாக மேலேறி முன்விட்ட கருவிகளை அவ்வவ்விடத்தில் கூடுவதையும், முறையே கீழாலவத்தை, மேலாலவத்தை என்பர். இதனால் இருதன்மைத்தாய ஐந்தவத்தைகள் உள்ளனவென்பது பெறும்.

கீழாலவத்தை, மேலாலவத்தை உண்டெனக் கூறவே, மத்தியாலவத்தை உண்டென்பதும் பெறப்படும். அஃதாவது, சாக்கிரத்தானமாகிய புருவமத்தியினின்று ஆங்காங்கே அவத்தையுற்றுக் கீழேபோய் மூலாதாரத்தை யடைந்த ஆன்மா, மீண்டும் மேலே சென்று புருவமத்தியை யடையுமென முன்னே கூறப்பட்டது. மத்தியாலவத்தையில், ஆன்மா சாக்கிரநிலையிலேயே நின்று சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி துரியம், துரியாதீதம் எனுமைந்தவத்தையுறும்.

முதனூலாசிரியராகிய மெய்கண்டதேவநாயனார், சுத்தாவத்தையில், சாக்கிரத்திலதீதத்தைப் புரிந்து நின்றவர் என்பதை, நாம் இங்கு ஞாபகத்திலிருத்த வேண்டும்.

இதனால், சாக்கிரத்திற்சாக்கிரம், சாக்கிரத்திற்சொப்பனம், சாக்கிரத்திற்சுழுத்தி, சாக்கிரத்திற்றுரியம், சாக்கிரத்திற்றுரியாதீதம் எனச் சாக்கிரத்தில் நுண்ணவத்தைகள் ஐந்துள்ளனவென்பதும் பெறும்.

இவ்வாறு ஐந்தவத்தைகள் நிகழுமிடத்து, சாக்கிரத்தில், சிவம் சத்தி சாதாக்கியம் ஈசுரம் சுத்தவித்தை எனும் ஐந்து சிவதத்துவங்களும் கலாதிகளைச் செலுத்தும். சொப்பனத்தில், சிவம் சத்தி சாதாக்கியம் ஈசுரம் எனும் நான்கும், சுழுத்தியில் சிவம் சத்தி சாதாக்கியம்

எனும் மூன்றும், துரியத்தில் சிவம் சத்தி எனும் இரண்டும், துரியாதீதத்தில் சிவதத்துவமொன்றும் நின்று காலாதிகளைச் செலுத்தி ஆன்மாவை அறியச்செய்யும்.

மேலே கூறியவாற்றால், கேவலம், சகலம், சுத்தமெனமூன்று காரணாவத்தைகளுள்ளனவென்றும், அவற்றின் காரியங்களான சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் எனும் ஐந்து காரியாவத்தைகளுள்ளனவென்றும், அவை தொழிற்படுமாற்றால் கீழாலவத்தை மேலாலவத்தை மத்தியாலவத்தை எனும் மூன்று உண்டென்றும், இவற்றுள்ளும் ஒவ்வொன்றிலும் நுண்ணிய அவத்தைகள் பலவுள்ளனவென்று மறியப்படும்.

ஈ. வாயுக்கள் பத்தின் தொழில்களாவன:-

பிராணன் இடை, பிங்கலை, சுழுமுனை நாடிகளைத் தொழிற்படுத்தும்; அபானன் மலசலங்களைப்பிரிக்கும்; வியானன் உடம்பு முழுவதும் நிற்கும்; சமானன் நாடிதோறும் அன்னரசத்தைச்செலுத்தும்; நாகன் நகைப்பு முதலியனவற்றை உண்டாக்கும்; கூர்மன் கண் இமைப்புக்குக் காரணமாகும்; கிருகரன் தும்மலை உண்டாக்கும். தேவதத்தன் கொட்டாவிக்குக் காரணமாகும்; தனஞ்சயன் தேகத்தை வீங்கி வெடிக்கச் செய்யும்.

நான்காஞ் சூத்திரம் முடிந்தது

## ஐந்தாஞ்சூத்திரம்

விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண்மூக்
களந்தறிந் தறியா வாங்கவை போலத்
தாந்த முணர்வின் றமியருள்
காந்தம் கண்ட பசாசத் தவையே.

இரண்டாஞ்சூத்திர வாயிலாய் அனுமானப் பிரமாணத் தாற் பெறப்பட்ட திரோதானசக்தியின் இயல்பும், கன்மந் தொழிற்படுமாறும் இங்கே கூறப்படுகின்றன.

**செம்பொருள்:-**

*செவி, மெய், கண், வாய், மூக்கு எனும் ஐம் பொறிகள் தத்தம்விடயங்களாகிய சத்தம், பரிசம், உரு வம்,இரசம்,கந்தம் முதலியனவற்றை ஆன்மாவின் துணை யுடன் அறிகின்றன. இவ்வாறு அவை புறப்பொருள் களையறியுமாயினும், தம்மையும் தம்முடன் கலந்துநின்று இயக்கத்தைக் கொடுக்கும் ஆன்மாவையும் அறிவதில்லை. அதுபோல, கேவலாவத்தையில் முதல்வனுபகாரமெனப் படும் திரோதானசக்தியினால் இயக்கப்பட்ட ஆன்மா தன்னையும் தன்னை இயக்கிய திரோதானசக்தியையும் அறியாது நின்றது; அதேபோல சகலாவத்தையிலும் ஐந்தவத்தையுற்று வினைப்பயன்களையறிந்து அநுபவித்து வரும் ஆன்மா, தன்னையும் தன்னுடன் கலந்துநின்று விடயங்களிற்செலுத்தி அறியச்செய்யும் திரோதான சக்தியையும் அறியமாட்டாது. அறியமாட்டாதெனவே இறைவன் சொரூபமாகிய திருவருளையும் அறியமாட் டாதென்பது பெறப்படும்.*

*மேலும், ஆன்மா ஐம்பொறிகளுடன் கலந்துநின்று அவற்றைச் செலுத்திப் புறவிடயங்களை அறியும்போது*

அவ்விடயங்கட்கேற்ப ஆன்மாவின் இன்பதுன்பவநுபவங்கள் பலவேறு தன்மையனவாயிருக்கும். அதன்காரணமாய் ஆன்மா விகாரமடையும். இறைவனும் அவ்வாறு திரோதானமாய் நின்று ஆன்மாவை இயக்கி, அது அறிய அருள் புரியினும், அதன் பலதிறப்பட்ட அநுபவங்களால் இறைவன் விகாரமடையான். ஏனெனில் காந்தம் தன் சந்நிதியில் இரும்பை இழுப்பதன் மூலம் தொழிற்படுத்துவதுபோல, இறைவன் உடம்பு முதலிய தொழிற்படுங் கருவிகளைக் கூடாது, சங்கற்ப மாத்திரையாலேயே ஆன்மாக்களைத் தொழிற்படச் செய்து நிற்பன். அவன் சந்நிதியில் ஆன்மா பல்வேறு அவத்தைகளிலும் உணர்ந்துவருகின்றது.

**பெறப்படுவன:-**

1. ஆன்மா ஐம்பொறி முதலியனவற்றை இயக்கும்.

2. இறைவனுல் ஆன்மா அறியும்.

**விளக்கம்:-**

## அ. ஆன்மாவினுல் ஐம்பொறி முதலிய இந்திரியங்கள் தொழிற்படும்.

ஐம்பொறி முதலிய இந்திரியங்கள் அறிவற்ற சடப்பொருள்கள்; அவை தாமே விடயங்களை அறியமாட்டா. அவற்றை இயக்கும் ஆன்மாவின் துணைகொண்டே விடயங்களை அறிகின்றன. இவ்வாறு அறிவது, ஆன்மாவின் பொருட்டேயன்றித் தமக்காகவல்ல என்றுகூறுவது பொருந்தும். எனினும், ஆன்மா, அறியவேண்டிய விடயங்களைத் தனியேநின்று தானே அறிய மாட்டாதோ? கருவிகளாகிய ஐம்பொறி முதலியவற்றுடன்கலந்துநின்று அறியவேண்டிய அவசியம் என்னவெனும் கேள்விகள் எழலாம்.

*ஆன்மா அநாதியே ஆணவமலத்தால் மறைப்புண்டு தன்னிலைகெட்டு நிற்கின்றது. அது விடயங்களை அறிந்து அநுபவித்தற்குக் கருவிகள்தேவைப்படுகின்றன. அரசன் இருந்த விடத்திலிருந்தே தன்னிராச்சியத்தில் நடைபெறும் காரியங்களை மந்திரிகள், ஒற்றர்கள், சேவகர்கள் முதலியோர் மூலம் அறிவன். அவர்களினுதவியின்றேல் அரசன் இராச்சியத்தில் நடைபெறுவனவற்றை அறிய முடியாது. சேவகர்கள்போன்ற ஐம்பொறி முதலிய கருவிகள் ஆன்மாவுக்கு இன்றியமையாதவைகளாகின்றன. இவ்வுண்மையை, ஆன்மா இலாட்த்தானத்தில் ஐந்தவத்தைப்படும்போது அடையும் அநுபவங்களைக் கொண்டு அறியலாம்.*

## ஆ. இறைவனால் ஆன்மா அறியும்:—

ஐம்பொறிகள் அறிவற்ற சடப்பொருளாயிருப்பதால்தாமே அறியமாட்டா; ஆன்மா, அறியும் இயல்புடைய சித்துப்பொருளாயிருப்பதால், தானே அறியும். ஆகையால், இறைவன் ஆன்மாவை இயக்கி அறியச்செய்வன் என்பது எவ்வாறு பொருந்துமெனக்கேட்கலாம்.

*ஆன்மா அநாதியே ஆணவமலத்தினால் அறிவு மறைப்புண்டு தன்னிலை கெட்டு மயக்கநிலையிலிருப்பதால் தன்னையுணராது நிற்கின்றது. அதனால் இறைவனின் அருளியக்கம் ஆன்மாவுக்கு இன்றியமையாததாகின்றது.*

அவ்வாருயின், ஐம்பொறி முதலியவற்ருல் பெறப்படும் விடயவின்பதுன்பங்கள், ஆன்மாவுக்குப் பயன்படுதல்போல ஆன்மாவடையும் இன்பதுன்பங்கள் ஆன்மாவை இயக்கும் இறைவனுக்குப் பயன்படாதோ வெனுங் கேள்வி எழலாம்.

*இறைவன் சத், சித், ஆனந்தமாயுள்ளவன்; எல்லாம் வல்லவன்; எல்லாம் அறிபவன். அவன் ஆன்மா*

மூலம்பெறக்கிடந்த பயன் ஒன்றுமில்லை. தனதுபேரருள் காரணமாய், அஃதாவது ஆன்மாக்களின் பசுத்துவத்தை நீக்கிச் சிவத்துவத்தைக் கொடுப்பதற்காக, (ஆன்மாவின் ஈடேற்றங்கருதி), அதை இயக்கி, அதன் வினைக்கீடாக கன்மங்களை அறிந்து அநுபவிக்கச் செய்கின்றான். எனவே ஆன்மாவின் இன்பதுன்பங்கள் இறைவனுக்குப் பயன்படுவதில்லை.

அவ்வாறாயின் இறைவன் அறிவிக்க, ஆன்மா இறைவனுக்கு வேறாய் நின்று அறியுமோ அல்லது இறைவனுடன் கலந்துநின்று அறியுமோவெனுஞ் சந்தேகம் எழலாம்.

பாரிய மரக்கட்டையொன்று சுவாலை விட்டெரியும் போது பக்கத்தே இடப்பட்ட சிறு சுள்ளியும் எரியும். அப்போது சுள்ளியின் சுவாலை பெரிய சுவாலையிலடங்கி அதற்கு வேறாய்த்தோன்றாமலும், பெரிய சுவாலையேயாகாமலும் அதனுடனாய் அடங்கிநின்று எரியும். அது போல, கண்டும், கேட்டும், உண்டும், உயிர்த்தும். தொட்டும் அறியப்படும் ஐம்புலவிடயங்களை ஆன்மா அறியச்செய்யும் 'முதலுபகாரம்' எனப்படும் சூக்கும பஞ்சகிருத்தியம் நடைபெறும்போது, ஆன்மா இறைவனுக்கு வேறாதலும் ஒன்றாதலுமின்றி, அவ்விருதன்மைகட்கும் பொதுவாய், அவனிலடங்கி உடனாய் நின்று அறியும்.

## இ. திரோதானசக்தி:-

ஆணவமலம் ஆன்மாவுக்கு இயல்பாயுள்ள இச்சை ஞானம், கிரியை எனுமிவைகளை மறைத்து நிற்கும். அப்போது அருட்சத்தியாகிய பராசத்தி திரோதானமாய் ஆணவமலத்தின் வழி நின்று ஆன்மாவைத் தொழிற்படுத்தும். அதனால், ஆன்மா விடயங்களில்

அழுந்தி வினைகளை அநுபவிக்கும். இதே சக்தி ஆன்மாவுக்கு இருவினையொப்பு, மலபரிபாகம் உண்டானவளவில், பராசக்தியாய் நின்று, இறைவனையடைய அருள் புரியும். ஒரே அருட்சக்தி ஐவகையாய்நிற்கும். அவை பராசக்தி, திரோதானசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி என்பன. இவை இறைவனில் பிரிப்பின்றி நிற்பவை; அவனில் வேறுபடாதவை. இவற்றுள், பராசக்தி சொரூபநிலையைக் குறிக்கும். ஏனையவை நான்கும் இறைவனின் தடத்தநிலைகளைக் குறிக்கும்.

ஐந்தாஞ்சூத்திரம் முடிந்தது.

## இலக்கணவியல் iii

## ஆறுஞ்சூத்திரம்

உணருரு வசத்தெனி னுணரா தின்மையி
னிருதிற னல்லது சிவசத் தாமென
விரண்டு வகையி னிசைக்குமன் னுலகே.

*முதற்சூத்திர வாயிலாய் அனுமானப்பிரமாணத் தாற் பெறப்பட்ட இறைவனின் (பதி) இலக்கணம் இங்கு கூறப்படுகின்றது.*

**செம்பொருள் :-**

*ஐம்பொறிகளால் அறியப்படும் பொருள்கள் முதலியனவும், அவற்றை ஆதாரமாகக் கொண்டு அந்தக்கரணங்களால் விவேகித்து அறியப்படும் விடயங்களும் அநித்தியமானவை; நிலையற்றவை; அஃதாவது, காரியப்பிரபஞ்சமாகியவுலகும் அதில் அடங்கியதாய் உணரப்படும் விடயங்களும் என்ருெருநாள் மறைந்துவிடுந்தன்மையன. இதனுல் நாம் அறியும் விடயங்களெல்லாம் அசத்து அல்லது அநித்தியமானவை. அஃதாவது இந்திரியங்களின் துணைகொண்டு சுருதி, யுக்தி, அநுபவம் வாயிலாகப் பெறப்படும் பாசஞானத்தாலும், உயிரறிவு எனப்படும் பசுஞானத்தாலும் அறியப்படும் விடயங்களெல்லாம் அநித்தியமானவை.*

*ஏனெனில், பிரபஞ்சத்தொகுதியில் மனம் முதலாம் கருவிகள் அடங்குமாதலாலும், அம்மனத்தைப்பற்றியே பாசஞானமும், பசுஞானமும் நிகழ்கின்றனவாதலாலும், பசுபாசஞானங்கள் இரண்டும் பிரபஞ்சத்தொகுதியில் அடங்கும். பிரபஞ்சத்தொகுதி நிலையற்ற*

தெனவே, அதிலடங்கிய பசுபாசஞானங்களும் நிலை யற்றனவாய் அசத்தாய்விடும். ஆகவே அவற்றினுல் இறைவன் அறியப்படுவானெனில், அறியப்படும் இறை வனும் அநித்தியப்பொருளாய் அசத்தாய் விடுவன். அவ்வாறு அசத்தாய் அறியப்படும் இறைவன் நம்மனோ ரில் ஒருவன் போன்று அநித்தியப்பொருளாய் விடுத லின், நாம் அவனுல் ஒரு பயனையும் பெறமுடியாது.

ஆயினும், இறைவன் நித்தமாயுள்ள சத்துப்பொ ருளாயும், முற்றறிவுடையவனும் ஆனந்தரூபனும் இருக்கின்றான். இவ்வாறு கூறவே, இறைவன் அறியப் படும் பொருளோ, அறியப்படாதபொருளோ எனு மையம் எழுகின்றது. அறியப்படுவனெனில் அசத்தாய் விடுவன்; அறியப்படானெனில் முயற்கொம்பு போன்று இல்பொருளாய் விடுவன். இந்த ஐயத்தை நீக்கவே இறைவன் அறியப்படுதல், அறியப்படாமை எனுமிரண் டில் எதுவொன்றிலடங்காமலும், ஒருவகையாலறியப் படுதலும், ஒருவகையாலறியப்படாமையுமாகிய இரு தன்மைகளையுடையவனுகவும் இருத்தலால் அவனைச் "சிவசத்து" என ஞானிகள் கூறுவர். அஃதாவது, இறை வன் பசுஞானத்தாலும் பாசஞானத்தாலும் அறியப் படானுயினும், பதிஞானத்தால் (திருவடிஞானத்தால்) அறியப்படுவன் என்பதாம்.

**பெறப்படுவன:-**

1. ஆன்மவறிவினுல் அறியப்படுவன வெல்லாம் அநித்தியமானவை; அழியுந்தன்மையன.

2. இறைவன் பதிஞானத்தால் அறியப்படுவன்.

விளக்கம்:-

**அ. பாசஞானம், பசுஞானம், பதிஞானம் என ஞானம் மூவகைப்படும்.**

1. பாசஞானம்:-

ஆன்மா சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி எனும் நான்கு வாக்குக்களின் விருத்தியாகிய (சூக்கும பரிணமம்) சொற்பிரபஞ்சம், நாதம் முதல் நிலம் (பிருதிவி) இறுதியாகிய தத்துவங்களின் பரிணமமாகிய பொருட்பிரபஞ்சம் எனும் இரண்டினையும் சார்ந்து நின்று அறிதலாலுண்டாகும் ஞானம் பாசஞானம். அஃதாவது வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், பல வேறு உலகியற்சாத்திரங்கள், தத்துவஆராய்ச்சிகள் எனு மிவைகள் மூலமாகப் பெறப்படும் அறிவு பாசஞானம் எனப்படும். இதைச் செயற்கையறிவு என்றும் கூறுவர்.

2. பசுஞானம்:-

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன கருவிக ளென அறிந்து, பின், இறைவன் எப்படிப்பட்டவனென ஆராயத் தலைப்படுங்கால், 'நான்' எனும் முனைப்பால் ஆன்மாவின்கண் நிகழும் அறிவு பசுஞானம் எனப்படும். "நானே பிரமம்" எனும் பொய்யறிவு பசுஞானத் தால் உண்டாவதெனக் கூறினும் பொருந்தும். இதை ஆன்மாவின் இயற்கையறிவு என்றும் கூறுவர்.

3. பதிஞானம்:-

ஆன்மா அவன்றாள் (சிவன்) வணங்கி அவனிற் பிரியாது அவனருளிலடங்கி அவனருளாய் நிற்றற்கும், அவன் றன்னையும் (சிவன்) காட்டித் தன்னையும் (ஆன்மா)

காட்ட அறிந்து நிற்றற்கும் ஏதுவாய், முத்திநிலையின் கண் நிகழும் 'சிவாநுபவம்' நிலைபெறுதற்காதாரமா யுள்ள ஞானம் பதிஞானம் எனப்படும்.

## ஆ. ஆன்ம அறிவினுல் அறியப்படுவனவெல்லாம் அநித்தியமானவை.

வீடு, கடல், வானம் இவற்றை நாம் பார்த்து அறிகின் ரேம்; எனினும் அவை ஒரு காலத்தில் உருமாறி அணுக்க ளாய்ச் சூக்குமநிலையெய்தி மாயையில் ஒடுங்கும் என முன்னே கூறப்பட்டது. இதனுல் பதியைப்போன்று பாசமும் (மாயை முதலியன) அழிவில்லாத உள்பொருள் என்பது பெறப்படு கின்றது; அவ்வாறிருக்கவும் பசு, பாசஞானங்களால் அறியப் படுபவை அசத்து, அநித்தியமானவை எனக்கூறுதல் எதற் காக? நாம் பாசஞானத்தால் எண்ணியவை, கருதியவை, உணர்ந்தவை முதலியனவும் அசத்தோ? அன்றியும் ஆன்மா பசுஞானத்தால் அறிவனவும் அசத்தாய் முடியுமா? அவ்வா ருயின், நாம் இதுவரை இந்நூலில் வாசித்து அறிந்தனவும் நிலையற்ற அசத்தாய், பொய்யாய், பயனற்று முடியுமாதலின் மேலும் தொடர்ந்து வாசித்தறிதலினுல் யாதும் பய னுண்டோ வெனும் பல சந்தேகங்கள் எழலாம்.

உலகம் (பிரபஞ்சம்), காரியமாய விந்நிலையில் நாம ரூபம் பெற்று, இராசதகுணமிகுதியால் உள்ளதென் றறியுமுணர்வை உண்டாக்கக்கூடியதாய், சுட்டியறியப் படக்கூடியதாய் நிற்கும். இதே பிரபஞ்சம், தாமத குணமிகுதியால் நாமரூபத்தை இழந்து அணுவாய், பின் சக்திவடிவா யொடுங்கி நிற்கும் நிலையில் சுட்டியறியப் படாததாய், பசு பாசஞானங்கட்கப்பாற்பட்டதாய் நிற்கும். காரியப்படும் நிலையிலே சுட்டியறியப்பட்டும், ஒடுங்கிய நிலையில் அறியப்படாதும் நிற்கும் காரணத் தினுலேயே உலகமாகிய காரியப்பிரபஞ்சம் அநித்திய மெனப்பட்டது. இதேபோன்று, பசுபாச ஞானங்க

ளும் முக்குணவசப்பட்ட கருவிகளின் துணைகொண்டு அறியப்படும் அறிவாகையால், அவையும் அநித்தியமாகின்றன. ஆகவே பசுபாசஞானங்களை ஆதாரமாகக் கொண்டு ஆன்மா அறிபவைகளும் அநித்தியமாய், நிலைபேறில்லாதனவாய் முடியும். அஃதாவது, பசுபாச ஞானங்கள் முக்குணங்கடந்த இறைவனை அறிதற்கு உபயோகமற்றன என்பதாம்.

இஃதிவ்வாருக, மலத்தால் மறைப்புண்ட ஆன்மா சாத்வீகம், இராசதம், தாமதம் எனும் முக்குணங்கள் வயப்பட்ட கருவிகளாகிய ஐம்பொறி, மனமுதலியவற்றின் உதவியுடன், முக்குணச்சார்பில் தோன்றிய எஞ்சிய காரியப்பிரபஞ்சத்தைப்பற்றி அறியுமறிவு பாசஞானமாதலாலும், மலத்தால் மறைப்புண்ட ஆன்மா தானே தன்னைப்பற்றி அறியத்தலைப்படின் அவ்வாறு பெறும் அறிவு மயக்கத்தைப் பொருந்திய பசுஞானமாதலாலும், இவ்விருவகைஞானத்தையுமுடைய ஆன்ம அறிவினுல் அறியப்படுவனவெல்லாம் குற்றமுடையனவென்பது வெளிப்படை.

## இ. இறைவன் பதிஞானத்தால் அறியப்படுவன்.

இறைவனருளைப்பெறக் கடவுள் நம்பிக்கையுடைய பலசமயத்தவர்கள் தத்தமக்கேற்ற சாதனங்களைச் (முயற்சிகள்) செய்கின்றனர். எனினும் அச்சாதனங்கள் உரியமுறையில் அமையவேண்டும். அவ்வாறில்லையேல், அருளைப்பெற முடியாது. இறைவன் பசுபாச ஞானங்களால் அறியப்படாத காரணத்திலேயே சாதனம் மிக இன்றியமையாதது. இறைவன் பசுபாச ஞானங்களால் அறியப்படின் சாதனங்கள் தேவையில்லை (சாதனங்கள் வீண் தொழில்களாகவே முடியும்).

எவ்விதத்திஞலும் இறைவன் அறியப்படானெனில், சாதனங்களைச் செய்வதில் உபயோகமில்லை. இவை காரணமாகவே "சிவ சத்தாயுள்ள இறைவன் பதிஞானத்தால் மட்டுமே அறியப்படுவன்" என சைவசித்தாந்தம் இடித்திடித்துக் கூறுகின்றது.

ஆனுல் சிலர், மாயாவாதிகள் கொள்கையை ஆதாரமாகக்கொண்டு "பிரமம் எனும் ஒப்பற்ற பொருள் பசுபாசஞானங்களைக் கடந்து நிற்கும். ஆயின் அது ஆன்மாவுக்கு வேருய் உள்ளது என்பது பொருந்தாது; பிரமம் எனும் ஒரு பொருளே அஞ்ஞானத்திஞல் காண்பாஞகிய ஞாதா அல்லது ஞாதிரு எனவும், காணப்படும் பொருளாகிய ஞேயம் எனவும் பிரிவுபட்ட இரு பொருள்களாயுணரப்படும் சாதனைகளைச் செய்ய அஞ்ஞானம் நீங்கும். நீங்கியவுடன் காண்பான் காணப்படு பொருள் எனுமிரண்டும் பகுப்பின்றி யொன்ருகி, சத்து என்ருே அல்லது அசத்து என்ருே அறியப்படாது, கேவலம் ஞான மாத்திரையாய்ப் பிரமப்பொருள் ஒன்றே நிற்கும்" எனக் கூறுவர்.

பிரமப்பொருள் சத்துமன்று, அசத்துமன்று, அது சொல்லொணுதது (அநிர்வசனீயம்) எனக்கூறும் இவர்களால் பிரமப்பொருள் ஒன்றே உண்டென்பதைப் பிரமாணநூல் கொண்டு நிரூபிக்க முடியாது. அவர்கள் நிரூபிக்க முற்படின் காண்பானுக்கு வேருய்க்காணப்படு பொருள் ஒன்று உண்டு என்று நிரூபிப்பதாய் முடியும். அம்முடிவு அவர்கள் ஏற்றுக்கொண்ட கொள்கைக்கே இழுக்காகும். இனி, அவர்கள் "நிரூபிக்கப் பிரமாணமில்லை, ஆதலால் பிரமம் சத்துமல்ல, அசத்துமல்ல" எனக்கூறின், அப்பிரமம் சூனியமாய் (ஆமைமயிர்க்கம்பலமாய்)விடும். இதனுல், ஆன்மாவின் இயல்பையுணர்ந்த மெய்ஞ்ஞானிகள் ஆன்ம அறிவு இறைவனருளில் அடங்கி, அருளாய்நின்று அருளிஞலே அறியும் மெய்

யறிவுக்கு ஏதுவாகிய பதிஞானத்தினுல் மட்டுமே இறைவன் அறியப்படுவான் எனக்கூறுகின்றனர்.

## ச. தர்க்கம் முதலிய பிரமாணங்களால் மட்டும் இறைவனை அறியமுடியாது.

பிரமாணங்களைக் கொண்டு ஆராயப்புகின், ஒரு ஒப்பற்ற பொருள் உண்டென்பது அறியப்படும். ஆகையால் இறைவன் பாசஞானத்திஞல் அறியப்படான் என்பது பொருந்தாது. ஏனெனில், அந்தக்கரணங்கள் முதலிய அறிகருவிகளோடு கூடாத நிலையில், ஆன்மா கேவலாவத்தை எய்துமாதலின் அதற்கு அப்போது அறிவு நிகழாது. இன்னும், இறைவன் பாசஞானத்தைக் கடந்து நிற்பானெனின். அவன் எதுவகை யாலும் அறியப்படமாட்டான். ஆன்மா அறிகருவிகளோடுகூடி நின்றே அறியுமியல்புடையதாகையால் இறைவன் பாசஞானத் தாலும் அறியப்படுவன் என்று கூறுதலே பொருந்துமென் பர். இக்கூற்றுப் பொருந்தாது.

ஏனெனில் அறிய உதவும் மனம்முதலிய அந்தக் கரணங்களும், கருவிகளும், அசத்து; அசத்துப்பொருள் கள் சடமாதலின் எதையும் அறியமாட்டா. ஆதலால் அவை 'அசித்து'. அசித்துக்களாயுள்ள அக்கருவிகள் மெய்ப்பொருளை அறியமாட்டா. இவற்றின் துணை கொண்டு ஆன்மாவும் அறியமாட்டாது. கருவிகளும், ஆன்மாவும் சேர்ந்து அறியப்புகுதல் குருடுங் குருடும் சேர்ந்து ஆடும் குருட்டாட்டமாய் முடியும். ஆன்மா தாஞகவே ஆராய்ந்து அறியத்தலைப்படின், மெய்ப்பொ ருள், உலகப்பொருள்போல, உணர்கின்ற ஆன்மாவுக்கு வேருய்விடும். வேருயுணரவே, அசத்துப்பொருள் தோன்றுமேயன்றி மெய்ப்பொருள் விளங்காது. ஆகை யால் பரஞானத்தால் இறைவனை அறியமுடியாதென்க.

ஆன்மா அந்தக்கரணங்களை நீங்கிநிற்பின் கேவ லாவத்தை நிகழுமாதலின், ஆன்மாவுக்கு அறிவு நிகழா

தென்பது மலத்தால் மறைப்புண்டு மயக்கநிலையிலுள்ள ஆன்மாவுக்கே பொருந்தும்; ஏனெனில், ஆன்மாவுக்கு இயல்பாயுள்ள அறிவினை, மயங்கிய நிலையில், மனம் முதலிய கருவிகள் விளக்கிக்காட்டுவனவேயன்றி, ஆன்மாவுக்கு (முன்) இல்லாத அறிவினை உண்டாக்கி விளக்குவனவல்ல. இவ்வுண்மையை ஞானிகளே அறிவர். இதன் காரணமாகவே, உண்மையுணர்ந்த ஆன்மா சத்தாகிய சிவத்தை அறியும்போது, தன்னியற்கையறிவு "சிவத்தின்கண் அடங்கிச் சிவமாய்நின்று சிவத்தினல் சிவத்தை அறியும்" என்றும்; உலகப்பொருள்களை அறிவதுபோலத் தனிமுதற் பொருளாகிய சிவத்தை வேருய் நின்று அறிவதில்லையென்றும், பதிஞானத்தை விளக்கு முகத்தால் முன்னரே கூறப்பட்டது.

## உ. யோகநூலார் கொள்கையை ஆதாரமாகக் கொள்வோர் கூற்று.

இவர்கள் "இறைவன் தானகவே அறியப்படக் கூடியவனயிருக்க வேண்டும். அவ்வாறின்றி, அவனறிவினல் அறியப்படுவன் என்று கூறின், அது தன்னையே தான் பற்றுதல் எனும் குற்றத்தின்பாற்படும். அஃதாவது, சிவம் சிவமாகிய தன்னையே அறிந்து அநுபவித்து நிற்கும் எனும் குற்றமுண்டாகும். ஆகையால் தியானபாவனைகளில் வழுவாது நின்று சாதனை செய்யின், இறைவன் விளங்கித் தோன்றுவன் என்று கூறுதலே பொருந்துமென்பர். இக்கூற்றுப் பொருந்தாது.

ஏனெனில் தியானபாவனைகள் பல. ஆன்மா மன முதலிய அந்தக்கரணங்களோடு நின்று பாவிக்கும் பாவனையில் பரம்பொருள் அறியப்படுமாயின், அது ஆன்மவறிவினல் அறியப்படுபொருளாய் அசத்தாய்விடும்; அஃதாவது, மெய்ப்பொருள் அறியப்படுவதன்று என்பதாம். மனமுதலியவற்றை நீங்கிநின்று பாவிக்கும்பாவ

னையராயின், ஆன்மா கேவலாவத்தைநிலையெய்தி ஒன்றையும் அறியமாட்டாது. அதனாலும் பயனில்லை. ஆன்மா மனமுதலியவற்றோடுகூடி நின்றும் பாவியாது, மனமுதலியவற்றை நீங்கி நின்றும் பாவியாது அநிர்வசனமாகப் (சொல்லொணாத பொருள்) பாவிக்கத்தலைப்படின், அங்கு பாழ் எனப்படும் சூனியப்பொருளே காணப்படும். அஃதாவது ஒன்றையுங்காண முடியாது என்பதாம். ஓர் ஏழை தன்னிடத்தில் அதிகப்பொருள் இருக்கிறதாகப் பாவிக்கும் பாவனைபோல, பாவனைக் கெய்தாத பொருளை எய்தியதாகப் பாவிக்கின் அது போலிப்பாவனையாய் பாவனைக்காகப்பாவனைசெய்வதாய், வீண்முயற்சியாய் முடியும். ஆகையால் யாதொரு பாவனைக்கும் எய்தாத இறைவன் சூனியப்பொருளாய் விடுவனோ எனச் சிலர் கொண்ட ஐயத்தை நீக்கவே, ஞானிகள், முன்னே கூறிய பாவனைகளைக் கடந்துநின்ற இறைவனை அவன் திருவருளால் பாவிக்கின் அப்பொருள் சூனியமாகாது விளங்கித்தோன்றுமென்பதை உணர்ந்து, அவனருளால் பாவித்து அவனை யறிய வேண்டும் என்றனர்.

### ஊ. சிவசமவாதக் கொள்கையை ஆதாரமாகக் கொள்வோர் கூற்று.

"இறைவனருளினாலே இறைவனை அறியவேண்டுமென்பதில்லை. ஆன்மாவின் பசுத்துவம் நீங்க. அது, சிவனைப்போலாகிவிடும். இறைவனின் எண்குணங்களும் ஆன்மாவுக்குண்டாகிவிடும். உண்டாகவே ஆன்மஞானம் பதிஞானத்தை ஒத்துநிற்கும், ஆகையால் இறைவன் அந்நிலையிலுள்ள ஆன்ம அறிவில் காட்சியளிப்பன்" என இவர்கள் கூறுவர். இக்கூற்றுப்பொருந்தாது.

ஏனெனில், இறைவன் ஆன்மாவின்வேறின்றி அத்துவிதமாய் நிற்பன். ஒன்றாய் நிற்கும் பொருள்கள் சம

மான இரு பொருள்களாக மாட்டா. இதனால் ஆன்மா ஒருபோதும் சிவத்துக்குச் சமமாக வரமாட்டாது. ஏனெனில், இறைவன் சூக்குமசித்து; பேரறிவுடையவன்; ஆன்மா தூலசித்து, சிற்றறிவுடையது. சூக்குமசித்துள் தூலசித்து அடங்கி வியாப்பியமாயிருக்கும். இதனால் ஆன்மவறிவு தன்னை விளங்கவைக்கும் சூக்குமவறிவை அறியமுடியாது. மறைந்துநின்று ஆன்மாவுக்கு இயக்கத்தைக் கொடுப்பவன் உயிர்க்குயிராகிய இறைவன். ஆகையால், கண்ணொளிக்கு இயக்கத்தைக் கொடுத்துக் காணச்செய்யும் ஆன்மாவைக் கண்ணொளி காணமாட்டாததுபோல, பசுத்துவம் நீங்கிய பின்னும், ஆன்மாவுக்கு மறைந்து நின்று விளக்கத்தைக் கொடுக்கும் இறைவனை ஆன்மஞானம் தானே அறிந்து தன் குணியாகிய ஆன்மாவுக்குக் காட்டாது. இதனால், ஆன்மஞானம் பதிஞானத்துக்கு ஒப்பாக மாட்டாது என்பது வெளிப்படை.

## எ. சிவாத்துவிதக் கொள்கையை ஆதாரமாகக் கொள்வோர் கூற்று.

இவர்கள் "முத்திநிலையில் ஆன்மா சிவத்துடன் கலந்து சிவமாய்விடும்; அந்நிலையில் ஆன்மாவென ஒரு பொருள் வேறுயிராது, அதனால், ஆன்மா சிவனுக்கடிமையாய்நின்று சிவானந்தத்தை அனுபவித்து நிற்கும். அஃதாவது அறிதலும், அறியப்படுதலுமாகிய, தொழில்கள் நடைபெறும் என்றல் பொருந்தாது" என்பர்.

இச்கூற்று மாயாவாதக் கொள்கையின் முடிவை ஒத்திருத்தலால் சைவசித்தாந்தக் கொள்கைக்குப் பொருந்தாது. சிவாத்துவிதம், சைவசித்தாந்தம் எனும் இரண்டும் பலவிடயங்களில் ஒத்த கொள்கையுடையனவாயினும் "முத்திநிலை" பற்றி மாறுபட்ட கொள்கைகளையுடையன என்பது ஈண்டு கவனிக்கத்தக்கது

ஆருஞ்சூத்திரம் முடிந்தது

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிறப்பியல்பு

## சாதனவியல் i

## ஏழாஞ்சூத்திரம்

யாவையும் சூனியஞ் சத்தெதி ராகலிற்
சத்தே யறியா தசத்தில தறியா
திருதிற னறிவுள திரண்டலா வான்மா.

இதுவரை அனுமானப்பிரமாணங்களால் பதி (இறைவன்), பசு (ஆன்மா), பாசம் (ஆணவம் கன்மம் மாயை) எனும் முப்பொருள் உண்டென்றும், அவற்றின் பொதுவிலக்கணம் இவையென்றும் பொதுவியல்புபற்றிக் கூறப்பட்டன. இப்போது அவற்றின் சிறப்பியல்பை சாதனம், பயன் எனுமிரண்டினுலும் கூறத்தொடங்கி, முதலில் ஆன்மாவின் சிறப்பியல்பு கூறப்படுகின்றது.

சிவமாகிய இறைவன் எண்குணங்களுடையவன். அவன் மாயையினின்று காரியப்பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து, காத்து, அழித்து முத்தொழில் செய்வதால் அவனுக்கு ஒரு பிரயோசனமில்லை. மாயை அறிவற்றது. அதனுல அதனினின்றுதோன்றும் பிரபஞ்சமும் அறிவற்றது. அது முத்தொழிற்படுவதால் அதற்கும் ஒரு பிரயோசனமில்லை. முற்றறிவுடைய இறைவன் வீண் தொழில்களைச் செய்து விளையாடிக் கொண்டிருக்கின்ருன் என்று சொல்வதும் பொருந்தாது. உயிர்களாகிய நாம் முத்தொழில்களால் இன்பதுன்பத்தை அடைகின்ரேம்; மற்றும் உயிரற்ற கல், மண் போன்ற உலகப்பொருட்கள் இன்பதுன்பங்கள் அடைவதை நாம் உணரமுடியவில்லை. ஆகையால் இறைவன் ஆன்மாக்கள் மேல் கொண்ட கருணையால் முத்தொழில்கள்செய்கின்ருன் என்பது வெளிப்படை. இதனுலேயே இன்பதுன்பத்தை யடையும் உரிமையுடைய ஆன்

மாக்களின் சிறப்பியல்பு (ஆன்ம சொரூபம்) முதலிற் கூறப்படுகின்றது

**செம்பொருள்:-**

*இறைவன் 'சிவசத்து'. பசு பாசஞானங்களால் அறியப்படாமையிற் சிவமாயும், பதிஞானத்தினலறியப்படுதலிற் சத்தாயுமுள்ளது 'சிவசத்து' எனப்படும். பிரபிரபஞ்சம் அசத்து; அறிவற்ற சடப்பொருள். சூரியனது ஒளியின்முன்னே இருள்தோன்ருது; அதுபோல சிவசத்தின்சந்நிதியில்அசத்தாயுள்ளபிரபஞ்சம்மறைந்துவிடும். இதுபற்றியே சத்தின்முன்னே அசத்தெல்லாம் சூனியம் (unmanifest) எனப்படும். ஆதலால், சிவம் அசத்தை அறிதல்செய்யாது; பிரபஞ்சமும் அறிவற்ற சடப்பொருளா யிருப்பதால் சத்தாகியசிவத்தையோ, அன்றித்தன்னையோ அறிந்து அநுபவியாது. ஆழ்ந்து யோசிக்குமிடத்து, சத்துப்பொருளையும் அசத்துப் பொருளையும் தனித்தனியே அறிந்து அநுபவிக்கக்கூடிய வேருெரு பொருளாகிய 'ஆன்மா' உண்டென்பது தெளிவாகும். அவ்வான்மா பதிஞானத்தால் சத்தாகிய சிவத்தையறிந்து, சிவமாய்நின்று, சிவபோகத்தை அநுபவிக்கவும்; பசுஞானத்தால் அசத்தாகிய பிரபஞ்சத்தையறிந்து, அதிற்ருேய்ந்து இன்பதுன்பத்தை அநுபவிக்கவும் உரிமையுடையது. இவ்வாறு ஆன்மா சத்தோடுகூடிநின்று சத்தையும், அசத்தோடுகூடிநின்று அசத்தையும் அறியுந்தன்மையுடையதாயிருத்தலினுல் அது 'சதசத்' எனப்படும்.*

**பெறப்படுவன;-**

1. *இறைவன் பிரபஞ்சத்தை அநுபவியான்.*

2. பிரபஞ்சம் இறைவனை அநுபவியாது.

ஆன்மா இறைவனை அறியும், அநுபவிக்கும்.

**விளக்கம்:-**

## அ. இறைவன் பிரபஞ்சத்தை அநுபவியான்:-

பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களும் வேறு வேறு பொருள்களல்ல. அவை வேறுவேறாகக் கருதப்படினும் மரமும், அதன்கொப்பும், கிளையும்போன்று உட்பேதத்தையுடையனவன்றிப் புறப்பேதமுடையனவல்ல; நெருப்பும் சூடும் போன்று குணகுணிசம்பந்தம் (*attribute-substance relation*) உள்ளவை. இதனால், 'ஆன்மா' சதசத் எனும் ஒரு தனிப் பொருள் என்றல்பொருந்தாது. பதிப்பொருளாகிய இறைவன் ஆன்மாவினிடமாக நின்று அறிவன். பிரபஞ்சம் சத்தாயவழி சத்தின்வேறாக அறியப்படும் 'அசத்து' எனும் ஒரு பொருள் இல்லையாகும்; ஆகையால் இறைவன் பிரபஞ்சத்தை அநுபவியான் எனும் பேச்சுக்கே இடமில்லையென, சிலர், வேறு மதக் கொள்கைகள்பற்றிக் கூறலாம். இக்கூற்றுக்கள் பொருந்தா.

ஏனெனில் இறைவன் எங்கும் வியாபகமாய் (*all pervasive*) நிறைந்திருப்பதினால் பசுபாசங்கள் அவனுள் வியாப்பியமாய் (*the contained*) அடங்கிநிற்கும்; அஃதாவது, இறைவன் பசுபாசங்களோடு வேற்றுமையின்றிக்கலந்து நிற்பனெனினும் அமையும். நாம் ஒரு மரத்தைப் பார்க்கும்போது அதை நமக்கு வேறாகப் பார்த்து அதை அறிகின்றோம். இவ்வாறு, பசுபாச ஞானங்களால் அறிதலைச் சுட்டியறிதல் (*knowing in parts*) எனப்படும். இறைவன், தன்னுளடங்கிய பாசப் பொருளாகிய பிரபஞ்சத்தை யறியும்போது இவ்வாறு சுட்டியறிய வேண்டியதில்லை. அவன் வியாபகமாயிருத்தலினால் எல்லாவற்றையும் ஒருங்கேயறிந்துநிற்பன். அதனால் இதுமரம், உது ஆறு, அது மலை எனப் பகுதி

பகுதியாய் நாமறிவதுபோல, இறைவன் ஏகதேசமாய்ப் பிரித்தறியான். இவைகாரணமாகவே, சிவத்தின்முன் யாவையும் சூனியம் (விளங்கித் தோன்றுதலில்லை) எனவும், சத்தாகியசிவன் அசத்தாகிய பாசத்தை அநுபவியான் எனவும் கூறப்பட்டன.

எனவே, இறைவன் எண்குணங்களை யுடையவன்; 'முற்றுணர்வு' (*omniscience*) எண்குணங்களிலொன்று எனக்கூறியிருக்கவும், அவனுக்குச் சுட்டுணர்வில்லையெனில் மாறுபடக் கூறல் எனும் குற்றமுண்டாய், அவனின் முற்றுணர்வுக்கு இழுக்காகாதோவெனுமையம் எழுகின்றது.

சூரியனுக்குமுன்னே இருள் தோன்றாது; அதனால் முன்னிருந்த இருள் எங்கோ ஓடி, ஒளிந்துகொண்டதென்பது கருத்தன்று. ஒளியின்முன்னே (சந்நிதியில்) இருள் விளங்கி அல்லது முனைத்துத்தோன்றாது என்பதே அதன் கருத்தாகும். இறைவன் தன்னுள்வியாப்பியமான அசத்துப்பொருள்களோடு வேற்றுமையின்றிக் கலந்துநின்று அசத்தை அறிவன். அப்போது, நாம் அறிவதுபோன்று சுட்டியறியாது, அவன் எல்லாவற்றையும் முயற்சியின்றி அறிந்தாங்கு அறிவன். உயிர் நீங்கப்பெற்ற உடம்பை வேறோர் இடத்துக்கு எடுத்துச் செல்லப் பலரின் உதவி தேவைப்படுகின்றது; ஆனால் உயிருடன்கூடி உயிரின் வியாப்பியமாயுள்ளவுடம்பு உயிருக்குப் பாரமாயிருப்பதில்லை; உயிர் நின்றாங்குநிற்க உடம்பு தானேயியங்கித் தொழில்களைச் செய்கின்றது. அதுபோல, வியாபகமாயுள்ள இறைவன் பாசத்தை அறிந்தாங்கறிவன். இதனால், அவன் பாசத்தை எம்மனோர்போன்று சுட்டியறிந்து அநுபவியான் என்பது பெறப்படும். ஆகையால் சுட்டியறியாது நிற்றல் அவனின் முற்றுணர்வுக்கு இழுக்கன்று. அன்றியும், நிர்க்

குணனும் குணாதீதனுமாகிய இறைவனுக்கு தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, வரம்பிலின்பமுடைமை, முடிவிலாற்றலுடைமை எனும் எண்குணங்களும் ஞானகுணங்களாம்.

## ஆ. பிரபஞ்சம் இறைவனை அறியாது:-

மாயாகாரியங்களான நிலம், நீர், உடம்பு முதலியன சடப்பொருளாதலின் அவை எதையும் அறிந்து அநுபவியாவென்பது உண்மை. ஆயின் தத்துவப்பிரபஞ்சமாயுள்ள மனம்முதலிய அந்தக்கரணங்கள்வாயிலாக அறியுமறிவைப் 'பாசஞானம்' என ஞானங்களில் ஒன்றாகவைத்துக்கூறப்படுவதால், அது பதியையோ அல்லது வேறு விடயங்களையோ அறிந்து அநுபவியாது என்பது எவ்வாறு பொருந்தும் எனக்கேட்கலாம்.

ஆன்மா தத்துவப்பிரபஞ்சத்தைக் கூடிநின்று அதன் மூலம் அறிந்துகொண்டவறிவு 'பாசஞானம்' எனப்படும். தத்துவங்கள் அசித்துப் பொருள்களாதலால் அவைகளுக்கு அறியுந்தன்மையில்லை; ஆதலால், ஞானமும் இல்லை. ஞானம், அறியுந்தன்மையுள்ளபசுவுக்கே (ஆன்மா) உரியது.

நூல்களைப்படித்துப் புதுப்புதுவிடயங்களை அறிகிறோம். விடயங்களை அறிவதற்கு நூல் கருவியேயன்றி, அது தானே ஒன்றையும் அறியாது, அநுபவியாது. அதை வாசிக்கும் நாமே விடயங்களையறிந்து அநுபவிக்கின்றோம். ஆன்மா மனம், புத்தி முதலிய கருவிகளுடன் ஒற்றித்து நின்று அறிதலால் கருவிகள் அறிகின்றன போலத் தோன்றினும், ஆராய்ந்து பார்க்கின் ஆன்மாவேயறிகின்றது என்பது புலனாகும். ஆதலால் பாசஞானமென உபசாரமாகக்கூறப்படுவது, பாசம்வாயிலா

சப் பசுவின்கண் நிகழும் ஞானமேயன்றி, பாசத்தின்கண் நிகழும் உணர்வன்று.

மேலும், வெளியிடமாயுள்ள நீண்ட பிரதேசத்தில் வெப்பங்காரணமாய் உண்டாகும் பவன அடுக்குகளினால் கானல்நீர் (*mirage*) தோன்றும். விடாயுள்ளவொருவன் அறியாமையால் அதை நீரெனக்கருத அது நீராகவே தோன்றும்; ஆனால் அதைத்தேடிச்சென்று குறித்தபகுதியில் நீரில்லை யென்று கண்டபின்பே, தான் நீரெனக்கருதியது வெறுந்தோற்றமென அறிவான். அதேபோல, மலத்தால் மயக்கமுற்ற ஆன்மாவுக்கு அசத்தாயுள்ள நாதம்முதல் நிலமிறுதியாயுள்ள தத்துவப்பிரபஞ்சம் சத்தாகவும், சித்தாகவும் தோன்றும். ஆயினும், ஆன்மா, அவற்றினியல்பை நன்கு அறிந்த குருவின் உபதேசமொழி கிடைக்கப்பெறின் "பாசஞானம் பசுஞானத்துளடங்குதலால், தத்துவப்பிரபஞ்சம் இறைவனை அறிந்து அநுபவியாது" எனும் உண்மையை அறிந்துநிற்கும். ஆதலால், தத்துவப்பிரபஞ்சத்தின் பகுதியவாய மனம்முதலிய அந்தக்கரணங்களும், கலை, வித்தை, அராகம் முதலிய அகவந்தக்கரணங்களும் சிவத்தை யறியமாட்டா என்பது வெளிப்படை.

**இ. ஆன்மா இறைவனை அடையும், அநுபவிக்கும்.**

பதி பாசத்தை அறியாது, பாசம் பதியை அறியாது என்றதனால் அவை தம்முள் ஒன்றனையொன்று அநுபவியாவென்பது கருத்தாயின், அவ்விரண்டினையும் அறிந்து அநுபவிக்கும் பொருளெதுவெனும் கேள்வி எழ இடமுண்டு.

ஒளியின் முன்னே இருள் முனைத்துத் தோன்றாது; அதனால் ஒளி இருளை அநுபவியாது; அவையிரண்டையும் கண்கள் கண்டு அநுபவிக்கின்றன. அதுபோல,

சத்தாகிய சிவசத்தின்முன்னே அசத்தாகிய தத்துவப் பிரபஞ்சம் தோன்றாது; ஆதலால் அவை இரண்டினையும் அறிந்து அநுபவிக்கும் பொருள் ஆன்மாவேயென்பது பாரிசேடவளவையால் (*method of elimination*) பெறப் படும்.

அவ்வாறாயின், பதி, பாசம் எனும் இரண்டினுடன் ஆன் மாவையும் சேர்த்து ஆன்மா "பதி ஆன்மா, பாசம்" எனும் முப் பொருள்களையும் அறியுமெனக்கூறவேண்டும்; அங்ஙனங்கூறாது ஆன்மா பதிபாசமாகிய இரண்டினைமட்டுமே அறியுமெனக் கூறுதல் எவ்வாறு பொருந்தும்? அன்றியும் ஆன்மா தன்னை யறியாதெனில் அது அறியப்படாத சூனியப்பொருளாய் (*nothingness*) விடுமன்றோ வெனுமையங்களுமெழலாம்.

ஆன்மா பதியைப்போலவோ அன்றிப் பாசத்தைப் போலவோ தோன்றினும், அவற்றொடொப்பத் தனி யாய் அறியப்படும் பொருளன்று. எனவே ஆன்மா இல் பொருளான சூனியமுமன்று. பூவின் வாசனை பூவைப் போன்ற பொருளன்று; அதனால், வாசனை சூனியம் போன்றஇல்பொருளுமன்று; வாசனை பூவிலடங்கிய ஒரு பொருளாக அறியப்படும். அதுபோலவே ஆன்மா சத்தா கிய சிவத்திலோ, அல்லது, அசத்தாகிய பாசத்திலோ சார்ந்ததன்வண்ணமாய், அடங்கித் தோன்றுமியல் புடைய ஒருபொருள். பூவைக்கொண்டே அதன் வாச னையையறியவேண்டும்; அதுபோல ஆன்மா தனித்தொரு பொருளாய் அறியப்படாது, பதி, பாசம் எனுமிவற்றை வாயிலாகக்கொண்டே அறியப்படும். எனவே ஆன்மா சூனியப்பொருளன்று என்பது பெறப்பெற்றது.

ஆன்மா அறியுந்தன்மையுடையதா யிருத்தலினால் சிவத் தைப்போன்ற ஒரு சித்துப்பொருள்; ஆகையால் அது இயல் பாகவே அறியமாட்டாதோவென்பது அடுத்த வினா.

ஆன்மாவுக்கு அறியுந்தன்மை யிருந்தகாரணத்தினுலேயே வேதம், ஆகமம், புராணம் முதலிய நூல்கள் உண்டாயின. ஆயினும், அது அறிவிக்கவே அறியுந் தன்மையுடையது; உபதேசியாயுள்ளது. மிகுந்த பசியினுல் ஒருவன் மயக்கமடைகின்றுன்; சோற்றை உண்டவுடன் மயக்கத்தினின்று தெளிவுபெறுகிறுன். அது போல, ஆன்மா அறிவை விளக்கும் கலை, வித்தை, அராகம் முதலிய தத்துவங்கள் வியஞ்சகமாய் (*manifestor*) நின்று இயக்காதவிடத்து ஒன்றையும் அறியாதும், வியஞ்சகமுள்வழி அறிவுபெற்றும் நிற்கும். அங்ஙனம் அறியுமிடத்தும் எல்லாவிடயங்களையும் ஒருங்கே அறியாது ஒன்றொன்றுய் மாறி மாறி அறிகின்றது. அஃதாவது ஆன்மா கலை, வித்தை முதலிய தத்துவ வியஞ்சகமுள் வழி அறிவொப்புமையால் சத்தின் தன்மையையும்; வியஞ்சகமில்வழி அறிவுபெருதகாரணத்தால் அசத்தின் தன்மையையும் அடையும் என்பதாம். ஆதலால் ஆன்மாவுக்கு இறைவனைப்போல சுதந்தரமாயும் விடயங்களை ஒருங்கேயும் அறியுந்தன்மையில்லை; அறிவிக்கவே அறியுந்தன்மையுடையது என்பது புலனுகும். இதுபற்றியே ஆன்மா "சதசத்" எனப்படும். 'சதசத்' என்பது சார்ந்ததன்வண்ணமாய் நிற்கும் தன்மையுடையது எனப் பொருள்படும். அஃதாவது, ஒரு கண்ணுடிப் பாத்திரத்தில் எந்த எந்த நிறமுள்ள நீரை விடுகின்றேமோ அந்த அந்த நிறமாகவே கண்ணுடிப் பாத்திரமும் காட்சியளிக்கும். அதுபோல, ஆன்மா சார்ந்ததன்வண்ணமாய், சத்தைக்கூடின் சத்தாயும், அசத்தைக் கூடின் அசத்தாயுந் நிற்குந் தன்மையுடையதாம்.

அறிவிக்கவே அறியுமெனின், ஆன்மா பாசத்தைப்போன்று அசத்தாகாதோ! வென மேலும் வினுவெழுகின்றது.

ஆன்மா பாசத்தைப்போன்று அறிவற்ற பொருளன்று; ஏனெனில், [redacted] தத்துவப்பிரபஞ்சம் எதனையுமறிந்து அநுபவிப்பதில்லை. ஆன்மா முன்னே அறிந்து செய்த தீவினைகளை இப்போதறிந்து அநுபவிக்கின்றது. இஃதிவ்வாறாக, ஆன்மா, வியஞ்சகமுள்வழி அறியுந் தன்மையையும், அஃதில்லாவிடத்து அறியாத தன்மையையும் உடையதாயிருத்தலின், அறியுந்தன்மையையுடைய சித்துக்கும் அறியாத தன்மையையுடைய அசித்துக்கும் வேறாயுள்ள 'சிதசித்' எனப்படும். அன்றியும், அறிவொப்புமைநோக்கி, "பதி சூக்குமசித்து, ஆன்மா தூலசித்து" என சித்தாந்தபரிபாஷையில் கூறப்படுதல் ஈண்டு கவனிக்கத்தக்கது. இவற்றை முறையே பேரறிவு, சிற்றறிவு என்று கூறுதலும் பொருந்தும்.

எனவே, ஆன்மா அறிவுடைப் பொருளாயினும் மயக்கமுற்றும் மாறிமாறியும் அறிதலினால், அம்மயக்கம் ஆன்மாவோடு தொடர்புடையதாயும், எங்கும் வியாபகமாயுமிருக்கும் சிவத்துக்கு இல்லையோவெனுமையம் எழுகின்றது.

சமுத்திரத்தில் நீர் உண்டு; உப்புக் கரைந்து அதனுடன் சேர்வதால் சமுத்திரமே உவர்நீராய் விடுகின்றது. எனினும், அச்சமுத்திரத்தைத் தன்னுள் அடக்கியிருக்கும் ஆகாயத்தை (ether) உப்பு உவராக்குவதில்லை. அதுபோல ஆணவமலமயக்கம் ஆன்மாவில் அடங்க, ஆன்மா சிவத்துள் அடங்குவதால் அம்மயக்கம், என்றும் ஒரேதன்மைத்தாயும் ஒருங்கேயுமறியும் முற்றுணர்வுடைய சிவத்தின்முன் சூரியனைக்கண்ட இருள் போல விளங்கித்தோன்றாது. ஆகையால், ஆணவமல மயக்கம் சிவத்தைப்பற்றாது, ஆன்மாவையே பற்றி நிற்கும் என்பது தெற்றென விளங்குகின்றது.

ஏழாஞ் சூத்திரம் முடிந்தது.

## எட்டாஞ்சூத்திரம்

ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
டன்னிய மின்மையி னரன்கழல் செலுமே.

தனது உண்மைநிலை உணர்ந்த ஆன்மா இனிச் செய்ய வேண்டிய சாதனமும் (*religious practice*), சாதனம் வருதற்குரிய வழியும், சாதித்ததனுற் பெறப்படும் பயனும் இங்கே கூறப்படுகின்றன. மேலாகிய ஞானமார்க்கம் அல்லது சன்மார்க்கம், முறையே கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் (சிரவணம் மனனம் நிதித்தியாசனம் சமாதி) எனும் நான்கு படிமுறைகளில் பூர்த்திபெறும்; முதலில் ஞானத்தில் சரியையாகிய "கேட்டல்" நிகழுமாறு இங்கே கூறப்படுகின்றது.

**செம்பொருள் :-**

*ஆன்மாக்கள் ஆணவமலநீக்கத்தின்பொருட்டு உடம்புகளுடன் கூடித்தொழிற்படவேண்டியவை. தொழில் கன்மத்தின்பாற்படும். ஆகையினுல், ஆன்மா பிறவிகளையெடுத்து உடம்போடு கூடிவாழ்கின்றது; வாழுங்கால், கண். செவி முதலிய ஐம்பொறிகளுடன்கூடி விடயங்களை அறியவும். கை, கால், வாய் முதலிய கருவிகளால் கருமங்களைச் செய்யவும் முடிகின்றது. இவ்வாறு வாழ்க்கை நடைபெறுங்கால், இன்பமுந் துன்பமும் உண்டாகின்றன. ஆன்மா இன்பத்தைக்கண்டு சந்தோஷமும், துன்பத்தைக்கண்டு வருத்தமும் அடைகின்றது; இவ்வித அநுபவங்களால் உண்மையறிவுண்டாகும். உண்மையறிவு தவத்தினுல் (religious austerity) வருவது. தவஞ்செய்தலாவது தன்னைப் பக்குவப்படுத்துதலாகும்;. தவத்தில் ஆசைசெல்ல இறைவனும் மறைமுகமாக உள்நின்று*

உணர்த்துவானாகையால் தவம் முதிரும். அம்முதிர்ச்சி சரியை கிரியை யோகம் எனும் இம்மூன்று மார்க்கங்கள் மூலமாய்ப்படிப்படியே நிகழும்.

முற்பிறவிகளில், சரியைகிரியையோகமார்க்கங்களை அநுட்டித்துத் தவம் முதிர்ந்த வான்மாவுக்கு, இப்பிறவியிலே சாதனஞானம் உண்டாகும். அப்போது, இதுவரை மறைமுகமாக நின்று சரியைகிரியையோகமார்க்கங்களை உணர்த்திவந்த இறைவன், நான்காவதுபடியான ஞானமார்க்கத்தை உணர்த்தும்பொருட்டுக் குருவாய்த் தோன்றிச் சிவதீக்கை செய்வன். அது நிகழும்போது, அவன் ஆன்மாவைப் பார்த்து "அரசகுமாரன் ஒருவன் வேடர்கூட்டத்தில் அகப்பட்டு வளர்ந்துவந்தான்; அவர்களின் சேர்க்கையால், தான் அரசகுமாரன் என்பதை மறந்து தன்னை வேடரில் ஒருவனாக எண்ணிப் பழிப்புக்கிடமாய் வாழ்ந்துவந்தான்; பின்பு ஒருநாள், அவன் அறிவு வளர்ச்சியுற்றநிலையில், தகப்பனாகிய அரசன் ஒரு வேடனைப்போன்று அவன்முன்சென்று அவனது உண்மை நிலையையுணர்த்தினான்; உண்மையுணர்ந்த அரசகுமாரன் அரசபண்புகளைப்பெற்றுப் பின் அரசனாய் விளங்கினான். அதுபோல, ஆன்மாவாகிய நீ, கண், காது முதலிய ஐம்புலன்களின் வசப்பட்டு உன்பெருமையை இழந்து துன்பப்பட்டாய்; நீ சிவபோக வின்பத்தை அநுபவிக்கும் உரிமையுடையாய்; ஆதலின், சிவனின் திருவடி நீழலாகிய பேரின்பத்தையடையத் தலைப்படு" என்று கூறி ஞானநெறியை உபதேசிப்பன். இதன் பயனாய் உண்மையுணர்ந்த ஆன்மா உலகப்பற்றுக்களைவிட்டு நீங்கி சிவத்துடன் ஒன்றுபடுநிலையுணர்ந்து இறைவன் திருவடியணையும். அப்போது மலந்தாரகமாயிருந்த ஆன்மா சிவந்தாரகமாகும்.

**பெறப்படுவன:-**

1. ஆன்மாவுக்கு நல்லறிவு தவத்தினாலேயே வரும்.
2. ஆன்மாவுக்குச் சற்குருவாய் வருவது அரனே (சிவன்).
3. ஆன்மா ஐம்புலன்களைப் பற்றுகையினால் தன்னையும் அறியமாட்டாது.
4. ஆன்மா ஐம்புலன்களிலே பற்றற்றால் தன்னையும் அறியும்.

**விளக்கம்:-**

**அ. ஆன்மாவுக்கு நல்லறிவு தவத்தினாலேயேவரும்.**

சரியை கிரியை யோகம் முதலிய தவங்களைச் செய்யும் போதே, இடையீடின்றி ஞானம் உண்டாகவேண்டும். அவ்வாறின்றி மற்றொருபிறவியில் ஞானமுண்டாகுமெனக் கூறுதல் எதற்காகவெனும் சந்தேகம் இங்கு எழுகின்றது.

இங்கே, ஞானமென்பது குருவுணர்த்தியவாறு சிவஞானத்தைக் கண்ணாகக்கொண்டு அறிவதாகிய சாதனவறிவு. ஓர் ஆசிரியன் எவ்வளவு பாண்டித்திய முடையவனாயினும், அவனின் மாணவன் சிறிதுசிறிதாகவே அறிவு பெற்று வருதப்பேற்றம் பெறுவன். அதுபோல இறைவன் சர்வவியாபகனாய் நின்று விளக்கினும் ஆன்மா ஒரே முறையில் விளங்கிக்கொள்ள மாட்டாது. ஏனெனில், ஆன்மா தூலவறிவாகிய சிற்றறிவுடையது. இதனால் அறிவை விளக்கும் சிற்சத்தி திரோதானரூபமாய் நின்றுணர்த்த, ஆணவமலம் சிறிது சிறிதாகத் தேயும்; இறுதியில், விடயங்களில் வெறுப்புண்டாகிய பின்பே ஆன்மாவுக்கு முத்தியில் விருப்புண்டாகும். எவ்வாறெனில், சரியை, கிரியை, யோகம் முதலாந் தவங்களை

அனுட்டித்தோர் இறந்தபின் தேவர்களாகி, அவ்வத்த வத்திற்கேற்ற பயன்களாகிய சாலோகம், சாமீபம், சாரூபம் எனும் பதமுத்திகளைப்பெற்று, அவ்வவ்வுலகங்களில் இன்பத்தை நுகருவர்; நுகர்ச்சி முடிந்தவுடன் பிரகிருதியாயுள்ள கன்மத்தை அநுபவித்துத் தீர்த்துப் பிறவிப் பயனும் வீடு பேறுமாகிய சாயுச்சியமுத்தி (பரமுத்தி பேரின்பமுத்தி) யைப் பெறும்பொருட்டு, மீளவும், பூமியில் வந்து தோன்றுவர்; அப்போது, முன்செய்த தவம், உலக விடயங்களில் தோயாவண்ணம் அவர்களைக் காத்துநிற்க, அவர்கள் நல்ல சூழ்நிலையில், தத்துவஞானப் பயிற்சி பெற்றுச் சுத்தாத்துவிதசைவசித்தாந்த நெறி நிற்கும் பெற்றோரிடையேதோன்றுவர் இவ்வித சூழ்நிலையில் அவர்களுக்கு குருவுபதேசத்தைக் கேட்டுத்தெளியும் பக்குவமுண்டாகும். உண்டாகவே, ஞானத்தில் ஆசைபிறக்கும். இவைபற்றியே மற்றொரு பிறவியில் ஞானமுண்டாகுமெனப்பட்டது.

சரியை, கிரியை, யோகம் எனும் தவங்கள்மட்டுமே தத்துவ ஞானத்தைக் காட்டும் என்பது எதற்காக? வேதங்களில் கூறப்படும் யாகம் முதலாந்தவங்கள் ஞானத்தைக் கொடுக்காவோவென மேலும் சந்தேகம் எழுகின்றது.

வேதங்கள், யாகம், அதைச்செய்யும்முறை, செய்யும் அதிகாரி, அடையும் பயன் என்பனவற்றை விரித்துக்கூறுகின்றன. யாகங்கள் நல்வினையின்பாற்பட்டுப் புண்ணியங்களாய், காமிய (விரும்பிய) வின்பத்தைக் கொடுக்குமியல்பின. இவ்வின்பம், ஒருவன் பசிகாரணமாக முன் உண்டவுணவு சீரணமாகியவுடன், திரும்பவும் உண்ணும் உணவினால் பெறும் இன்பத்தை யொக்கும். எவ்வாறெனில், யாகாதிகன்மங்களைச் செய்தவினால் பெறும் பயனாகிய காமியவின்பம் அநுபவிக்

கப்பட்டுமுடியத் திரும்பவும் (ஒருவனுக்கு) யாகத்தில் ஆசையைச்செலுத்திநிற்கும். அஃதாவது, பதவியின் பத்தை நாடச்செய்யுமென்பதாம். எனவே, யாகம் ஆசையை நீக்கவுதவாது; உதவாதெனவே, அது தத்துவ ஞானத்தைப்பெறத் தடையாய் நிற்கும் என்பது புல னுகும். இதுபற்றியே தீவினையைப்போன்று, யாகம் முதலிய நல்வினையும் ஆன்மாவைப் பந்தப்படுத்துமென் றும், அதனல், அவை முறையே இரும்புவிலங்கும், பொன்விலங்கும் போன்றவையென்றுங் கூறப்படும்.

எனவே, சரியைகிரியையோகநெறி நின்று கன் மங்களைச்செய்யின் அவை முறையே சாலோகம், சாமீ பம், சாரூபம் எனும் பதமுத்திகளைமாத்திரமன்றி ஞானத்தையுங்கொடுக்குமென்றும், யாகங்கள்மாத்திரம் ஞானத்தைக்கொடுக்கா வென்றும் தெள்ளிதில் அறி யலாம். மேலும், பதமுத்திகளில் உள்ள ஆன்மாக்கள் அவற்றை அநுபவித்துக் கொண்டிருக்கும்போதே, நல் வினை தீவினையெனும் இருவினைப்பயன்களும் அநுபவ வாயிலாகக் கழிந்துவிடின், அவ்வப் பதமுத்திக்குரிய புவ னங்களிலிருந்தே ஞானநெறியைத் தலைப்படும். புண் ணியபாவப்பயன்கள் ஒத்து அநுபவிக்கப்பட்டுமுடியா விடின், ஆன்மா திரும்பவும் பிறவியெடுத்து இருவினை யொப்பெய்தி, குருவின் திருவருளால் சாதனஞானத் தைப் பெறத்தலைப்பட்டுப் பேரின்பநிலை எய்துமென்றும் அறியக்கிடக்கின்றது.

இருவினையொப்பு:- ஒன்றில் விருப்பும், ஒன்றில் வெறுப்புமின்றி, புண்ணியபாவம் இரண்டிலும், அவற்றின் பயன்களாகிய இன்பதுன்பங்களிலும், உவர்ப்பு ஒப்பநிகழ்தல். செங்கல்லையும்,செம்பொன் னையும் ஒப்பநோக்கும் நிலையெனினும் பொருந்தும்.

**புண்ணியம்:-** இது சிவபுண்ணியம், பசுபுண்ணியமென இருவகைப்படும்.

**சிவபுண்ணியம்:-** இது அபுத்திபூர்வமாகச் செய்யப்படுவது, புத்திபூர்வமாகச் செய்யப்படுவதென இருவகைப்படும்.

**அபுத்திபூர்வம்:-** இது பொதுநீக்கி யறியுமாறின்றிச் சிவபிரானைநோக்கிச் செய்வதும், நோக்கமின்றிச் செய்வது சிவபிரானின் பணியாய் முடிவதுமென இருவகைப்படும்.

**பொதுநீக்கி அறியுமாறின்றிச் சிவபிரானை நோக்கிச் செய்வது:-** இது பொதுச்சிவபுண்ணியம் சிறப்புச்சிவ புண்ணியம் என இருவகைப்படும்.

1. பொதுச்சிவபுண்ணியம் சிவதீக்கை யின்றிச் செய்வது.
2. சிறப்புச் சிவபுண்ணியம் சிவதீக்கையுடையராய்ச் செய்வது.

மேற்கூறிய பொது, சிறப்பு எனும் சிவபுண்ணியங்கள் இரண்டும், தனித்தனி பக்திகாரணமாக உண்மையாகச் செய்வதும், புகழ், பொருள்காரணமாக உலகப் பயனைநோக்கிச் செய்வதுமென இருவகைப்படும்.

சிறப்புச்சிவபுண்ணியமிரண்டில் (பக்தி காரணமாகவும் புகழ்காரணமாகவும் செய்யப்படும் இரண்டில்) ஒவ்வொன்றும் சரியை கிரியை யோகம் ஞானம் என நந்நான்காய், பின் சரியையிற்சரியை, சரியையிற்கிரியை யென ஒவ்வொன்றும் நந்நான்கு உட்பிரிவுகளையுடைத்

தாய், மொத்தம் (சிறப்புச்சிவபுண்ணியம்) முப்பத்திரண்டாய் விரியும். பொதுச் சிவபுண்ணியமும் ஏனையவைகளும் இவ்வாறே விரியுமென நுண்ணுணர்வாற் கண்டுகொள்க.

**அ. ஆன்மாவுக்குச் சற்குருவாய் வருவது அரனே:-**

சரியைகிரியையோகங்களைச்செய்து தவம்முற்றியவிடத்து, ஆன்மா ஞானத்தில் ஆசைகொள்ளுமென முன்னே கூறப்பட்டது. அவ்வாறு ஆசைகொண்டவான்மா மேலும் தவத்தைச் செய்து திருவடிஞானத்தைப் பெறவேண்டும். அதைவிடுத்து இறைவனே குருவாய்த்தோன்றி ஆன்மாவுக்கு ஞானத்தை விளக்குவனென்பது எற்றுக்கு? ஞானத்தை விளக்கவேண்டியிருப்பின் எம்மில் ஒருவர் ஞானத்தை அறிவுறுத்த முடியாதாவெனச் சிலர் கேட்கலாம்.

தவம் முற்றிய ஆன்மா இருவினையொப்பின் காரணமாக மலபரிபாகமெய்தும். மலபரிபாகமென்பது, ஆணவமலசக்தி ஆன்ம அறிவை மய்க்க இயலாது வலிகுன்றிநிற்குநிலை. மலபரிபாகமெய்தவே, சத்திநிபாபாதம் உண்டாகும். சத்திநிபாதம் என்பது திருவருட்சக்தியின் விளக்கம் ஆன்மாவில் பதிதல் எனப்பொருள்படும். அஃதாவது, இதுகாறும் மலத்திற்கு அநுகூலமாய், மறக்கருணையாய் நின்ற திரோதானசக்தி, ஆன்மா மலபரிபாகம் எய்தியதும், அறக்கருணை யெனப்படும் முன்னைய பராசக்திரூபமாய் ஆன்மாவில் பதியுமென்பதாம். சத்திநிபாதம் நிகழ்ந்தவுடனே ஆன்மா லௌகீக விடயங்களை வெறுத்து ஞானத்தைப்பெற உண்மைக் குருவை நாடிநிற்கும். அப்போது, இதுவரை பாலில் நெய் போன்று உள்நின்று தவத்தினிலுணர்த்திய பரம்பொருளாகிய இறைவன் பருவமறிந்து ஞானத்தை உபதேசிப்பன். அப்போது, ஆன்மாக்கள், பெத்தநிலையில்

நிற்பினும், அவரவர் பக்குவநிலைக்கேற்ப மூவகையினரா யிருத்தலின் அவரவர்க்கேற்ற தன்மையில் உபதேசிப்பன். ஆகையால், எம்மில் ஒருவர் ஞானத்தை உபதேசித்தல் உண்மை உபதேசமாகாது. அது உபாய உபதேசமாகும்.

**ஆன்மாக்கள் உபதேசம்பெறும் முறை:-**

விஞ்ஞானகலர், பிரளயாகலர் சகலர் என்போரே முற்கூறிய மூவகை ஆன்மாக்கள். விஞ்ஞானகலர் ஆணவமலம் ஒன்றினாலேயே பந்திக்கப்பட்டவர்; அசுத்த மாயா காரியங்களாற் பந்திக்கப்படாதவர்; இவர்கள் எடுத்த பிறவியிலேயே முத்தியைப் பெறும் பக்குவமுடையராதலால், இறைவன் நிராதாரதீக்கை (உள்நின்று உணர்த்துதல் அல்லது தன்மையினுணர்த்துதல்) செய்து மலத்தை நீக்குவன்.

பிரளயாகலர் ஆணவம், கன்மம் எனுமிரு மலங்களை யுடையவர்; அஃதாவது ஆணவ மலநீக்கத்தின் பொருட்டுக் கன்மமலமும் கூடப்பெற்றவர்; மாயாமலத்தால் பந்திக்கப்படாதவர். இவர்கள் ஒரு சில பிறவிகளிலேயே முத்தியைப்பெறும் உரிமையுடையர். அதனால் இறைவன் மான், மழு, நாற்புசம், காளகண்டமுடைய திருமேனியோடு முன்னிலையில் தோன்றி நிராதாரதீக்கை செய்து மலத்தை நீக்குவன்.

சகலர் (நாம் இதில் அடங்குவோம்) ஆணவம் கன்மம் மாயை எனும் மும்மலங்களாலும் பந்திக்கப்பட்டவர். இருவினையொப்பும், மலபரிபாகமு முண்டாயவுடன், இறைவன் குருவடிவாய், சகலவர்க்கத்தில் ஒருவரைப்போல் தோன்றி, சாதாரதீக்கை செய்து மலத்தை

நீக்குவன். சாதார தீக்கை யென்பது இறைவன் ஆதாரத்தோடு கூடிநின்று செய்யும் தீக்கை யெனப் பொருள்படும்.

இறைவன் ஒருவனே இவ்வாறு தன்மை, முன்னிலை, படர்க்கையெனும் மூவிடங்களிலும் நின்று, முறையே விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் எனும் மூவகையினருக்கு உபதேசஞ் செய்து ஞானத்தை உணர்த்தக் காரணமென்னவெனக் கேட்கலாம்.

விஞ்ஞானகலர் ஆணவமலத்துடன் மாயாகன்ம மலங்களையுடையவராயினும், பின்னைய இரண்டினாலும் பிணிப்புண்டு மயங்காது, சூக்குமமலசக்தியாகிய ஆணவமலத்தினால் மட்டும் பந்திக்கப்பட்டவராதலால், இறைவன் தன்மையினுணர்த்திய மாத்திரத்திலே மலம்நீங்கும். விஞ்ஞானகலர் ஒரு மலத்தை மட்டுமுடையவரென்றதும் இதுபற்றியே. ஆணவம் கன்மம் எனும் இரு மலத்தையுடைய பிரளயாகலர், மாயா மலத்தையும் உடையவராயினும், மாயாமலத்தினால் பிணிப்புண்டு மயங்காது, ஆணவமும் கன்மமும் சேர்ந்த தூலமலசக்தியால் மட்டும் பந்திக்கப்பட்டவராதலால், இறைவன் முன்னிலையில் நின்று உபதேசவாயிலாக உணர்த்திய அளவிலே மலம் நீங்கும். சகலர் ஆணவம், கன்மம், மாயை எனும் மூன்றுஞ் சேர்ந்த தூலதரமலத்தால் பந்திக்கப்பட்டவராதலால், இறைவன் சகலரில் குரு வடிவாயுள்ள மானிடப்போர்வையில் மறைந்து நின்று படர்க்கையில் உபதேச மூலம் உணர்த்தியபோதே மலம் நீங்கும். இவைபற்றியே ஆன்மாக்களில் சகலராயுள்ள எமக்கு, குருவடிவாய் வருபவன் அரன் (மலத்தை அரிப்பவன்) எனப்பட்டது.

## இ. ஆன்மா ஐம்பொறிகளைப் பற்றுகையினால் தன்னையும் அறியமாட்டாது.

ஆன்மாவுக்கு இதுவரை விடயங்களைப் பசுகரணமாய் நின்று உணர்த்திவந்த ஐம்பொறி முதலிய கருவிகள் பக்குவமடைந்த ஆன்மாவுக்குச் சிவகரணமாய்நின்று உண்மையை உணர்த்த மாட்டாவோ; இறைவன் குருவடிவாய் நின்று ஞானத்தை உணர்த்த வேண்டியது எற்றிற்கெனும் கேள்விகள் எழலாம்.

கண்ணாடியின் ஒருபக்கத்தில் பலநிறங்களைத் தீட்டினால், கண்ணாடியின் சுயவொளி நிறங்களில் அடங்கி மறைந்துவிடும். அதுபோல, ஆன்மா அறிவுவிளக்கத்தைப் பெறும்பொருட்டு ஐம்பொறிகளாய கருவிகளுடன் கூடியவுடன், ஐம்பொறிகள், ஆன்மாவின் சொரூபம் விளங்காத வகையில் தத்தம் விடயங்களையே விளக்கி நிற்கும். இதனால், ஆன்மா சார்ந்ததன்வண்ணமாகித் தன்தனித்தன்மையை இழந்து தன்னையுமறியாது மயங்கி நிற்கும். இதனாலேயே ஆன்மா ஐம்பொறிகளைப் பற்றுகையினால் தன்னையும் அறியமாட்டாது எனப்பட்டது.

மேலும், கருவிகரணங்கள் சடப்பொருளென முன்னே கூறப்பட்டது. இவை ஆன்மாவின் நன்மைக்காகவே தோன்றினவெனினும், அதன் அறிவைச் சார்ந்தே அவையும் தொழிற்படும். இதனால், கரணங்கள், ஆன்மா அஞ்ஞானநிலையில் நிற்கும்போது பசுகரணமாந்நிலையில் நிற்கும்; அது ஞானநிலையில் நிற்கும்போது, சிவகரணமாந்நிலையில் நிற்கும். எனினும், ஆன்மாவின் அஞ்ஞானம் நீங்கிய அவதரத்திலேயே பசுகரணம் சிவகரணமாந்நிலையை அடையுமாதலால், முதலில் குரு ஆன்மாவுக்கு உண்மை உணர்த்த வேண்டியது இன்றியமையாததாயிற்று என்பதும், கரணங்கள் தாமே

சிவகரணமாய் நின்று உணர்த்தாவென்பதும், அவை உணர்வதற்கு உதவியாய் உள்ளன என்பதும் பெறப்படுகின்றன.

மேலும், ஐம்பொறி முதலிய கருவிகள் தொழிற்படாவிடத்து ஆன்மா கேவலாவத்தையுற்று ஒன்றையும் அறியமுடியாத தன்மையில் நிற்கும். ஆதலால் ஐம்பொறிகள் தொழிற்படும்போதே குருவுபதேசத்தைக் கேட்டுத்தெளிவடைய வேண்டும். அஃதாவது ஆன்மா ஐம்பொறிகளைக் கூடிநின்று அறியினும், அவற்றின் (ஐம்பொறிகள்) பொதுவியல்புகள் இத்தன்மையன என்று உடபதேச மூலம் நன்கு அறிந்து, சிந்தித்து அவை தனக்கு வேறானவை எனத்தெளிய வேண்டும். தெளியவே, தன்சொரூபமாகிய சிறப்பியல்பை ஆன்மா அறியும்; அறியவே, தான் பரம்பொருளாகிய சிவத்துக்கடிமையென்றும், அப்பரம் பொருள் தன்னிடத்தில் தோன்றாத்துணையாய் நின்று ஞானத்தை விளக்குகின்றதென்றும் அறிந்து ஞானநெறியைத் தலைப்படும். இதன் காரணமாகவே, இறைவன் குருவடிவாய்த் தோன்றி உபதேசம் செய்ய வேண்டும் எனக்கூறப்பட்டது.

## ஈ. ஆன்மா ஐம்பொறிகளிலே பற்றற்றால் தன்னையும் அறியும்.

சகலவர்க்கத்திலுள்ள ஆன்மா ஐம்பொறிகள் தொழிற்படும்போதே குருவுபதேசத்தைக் கேட்டுத்தெளியுமென்பது பொருத்தமே. ஆயினும், அவ்வேளையில் ஐம்பொறிகளை விட்டு நீங்கமுடியாதே! நீங்கின் கேவலாவத்தை தலைப்படும், ஆதலின், ஆன்மா ஐம்பொறிகளின் பற்றை விடுதலெவ்வாறென வினவலாம்.

இயல்பாகவே சித்தாயும் வியாபகமாகயுமுள்ள ஆன்மா குருவுபதேசம்பெற்றவுடன் அறிவுவிளக்கம் பெற்று, தானிந்திரியங்களின் வேறானதொன்றென உணரும்; உணரவே, இறைவன் திருவடியைப் பெறத்தலைப்படும். ஆதலால், பற்றுத்தானாகவே நீங்கும்.

அவ்வாறாயின், இறைவன் உபதேசம் பெற்ற ஆன்மா மேலும் ஒரு முயற்சியுமின்றியே திருவடியைப் பெறத்தலைப்படும் என்பது எவ்வாறு பொருந்துமென மேலும் வினாவெழலாம்.

ஒருவன் ஊஞ்சலில் ஆடுகின்றான். ஊஞ்சற்கயிறு அறுந்துவிட்டால் தரையிலேயே விழுவான்; இடையில் நிற்க முடியாது. அதுபோல, ஆன்மா தன் உண்மை நிலையறியாது, ஐம்பொறிகள் மூலம் விடயங்களை யறிந்து ஐம்பொறிகளே தாரகமாக இதுவரை நின்றது. இப்போது குருவுபதேசத்தினால் ஐம்பொறிகள் தனக்கு வேறானவையென்றும், அவற்றினால் மேலுமுபயோகமில்லையென்றும் அறியும். அறியவே, அது, முயற்சியின்றியே, மற்றையதாரகமான இறைவன் திருவடியைப் பெறத்தலைப்படுமாதலாலென்க.

கருவிகளை விட்டதனால் அறியுந்தன்மையற்ற கேவலாவத்தை அடைந்த ஆன்மா, திரும்பத் திரும்பக் கருவிகளுடன் கூடிச்சகலாவத்தையுற்று அறிவுபெறும். அதுபோல, சிவத்தைத் தாரகமாகப்பெற்றுச் சுத்தாவத்தையிலுள்ள ஆன்மா மீளவும் மலத்தைத்தாரகமாகக் கொண்டு நில்லாதோவெனும் ஐயமெழலாம்.

ஆற்றுநீரை அணைகள் கட்டித் தடுத்துத் தேக்கிவைக்கிறோம். அணை உடைந்துவிடின், கட்டுப்பட்டு நின்ற நீர் பள்ளத்தின்வழியே சென்று கடலைச்சேர்ந்து

கடல் நீராய்விடும். அந்நீர் மறுபடி அணையை நோக்கி வாராது. அதுபோல, ஐம்பொறி முதலியவற்றாற் பெற்ற பாசஞானத்தால் தடையுண்டு நின்ற ஆன்மா, தடைவிலகியவுடன் இறைவன் திருவடியாகிய பதிஞானத்தைப் பெற்றுநிற்கும். இதன்காரணமாக, ஆன்மா திரும்பவும் பாசஞானத்தாற் கட்டுப்படுதலில்லை. அஃதாவது, சுத்தாவத்தையிலுள்ள ஆன்மா கருவிகளைக்கூடினும் அவற்றில் பற்றில்லாதகாரணத்தால் ஐம்பொறிகளால் பந்திக்கப்படாது என்பதாம்.

ஆன்மா குருவுபதேசத்தினால், தான் தத்துவங்களின் வேறாயுள்ள பொருளென்றும், அல்லாமலும் அவற்றுக்கு மேலான சித்துப்பொருளென்றும் அறிந்து நிற்றல் **சிவரூபம்** எனப்படும். திருவருள் தனக்கு ஆதாரமெனச் சிவரூபத்தினால் அறிந்துநிற்றல் **ஆன்ம தரிசனம்** எனப்படும்.

மேலும், பதிஞானமாகிய திருவடிஞானத்தைப்பெற்ற ஆன்மா, மீண்டும் ஐம்பொறிகளில் பற்று வைக்காதென்பது பொருந்தாதெனவும், அது எல்லாவற்றையும் சிவமாய்க் காணுதலின் அது பற்று வைத்தாலென், பற்றுவைக்காவிட்டாலென் எனவும் ஐயங்களெழலாம்.

ஆன்மா பசுத்துவம் நீங்கப்பெறின் ஆன்மஞானமாகிய வியாபகவறிவைப் பெறும். இதனால் ஆன்மஞானம், புலன்களாற்பெறும் பாசஞானத்திலும் மேலானது எனப்பெறப்படுதலால், அதுவே சிவனருளைப்பெற்று இன்பத்தை அநுபவிக்க உரிமையுடையது என்பது தெளிவு. பசுஞானமும் பாசஞானமும் பதிஞானமாகுந் தன்மையையுடையனவெனக் கொள்ளின், ஆன்மா, ஐம்பொறிகளிற் பற்றுள்ள சகலாவத்தையை

விட்டுப் பற்றுநிலையற்ற சுத்தாவத்தையில் திருவடியைத் தலைப்படத் தேவையில்லை. ஆகையால், ஆன்மா திருவடியை விட்டு நீங்கி, மீளவும் ஐம்பொறிகளில் பற்றுவைக்கின் எல்லாவற்றையும் சிவமாய்க் காணும் என்பது பொருந்தாதெனை அறிக.

சிவன் ஆன்மஞானத்துடன் மட்டுமே இயைந்துநிற்பன் ஊனவே, புலனுணர்வாகிய பாசஞானத்துடன் இயைபின்றி வேறாய் நிற்பன் எனவும், இதன்காரணமாய் இறைவனால் பாசஞானத்துக்கு ஒரு உபயோகமில்லை எனவும் முடியுமாதலால், அம்முடிவு இறைவனின் முதன்மைக்கு இழுக்காகாதோவெனக் கேட்கலாம்.

ஆன்மஞானம் பாசஞானம் எனுமிரண்டினும் சிவன் ஒருதன்மைத்தாய்க் கலந்து நிற்பினும் நிலைகளில் வேற்றுமையுண்டு. ஐம்பொறிகளெல்லாம் ஆன்மாவோடு கூடியறியுமாயினும். கண், பலமைல்கள் தூரம் வியாபித்துநின்று அறியுந்தன்மையது; காது, மூக்கு முதலியன அவ்வாறு வியாபித்தறியமாட்டா; அவை தம்மிடத்து வந்து சேர்ந்த சத்தம், மணம் முதலியவற்றையே அறியும். அதுபோல, சிவம் ஆன்மஞானம் பாசஞானம் எனுமிரண்டினோடும் ஒருதன்மைத்தாய் நிற்பினும், ஆன்மஞானமே சிவனையறிந்து அநுபவிக்குந் தன்மையது. பாசஞானமும், பசுஞானமும் ஏகதேச அறிவுடையனவாதலால் சிவனை அறிந்து ஆன்மாவுக்குக் காட்டா. ஆதலால் சிவனின் முதன்மைக்கிழுக்கில்லை. பசுத்துவம் நீங்கப் பெற்ற ஆன்மாவில் தோன்றும் இயல்பானஞானமே ஆன்மஞானமெனப்படும்.

மேலும், கடலுடன் சேர்ந்த நீர் திரும்பவும் கரையேறுதலுமுண்டு. அதுபோல, திருவடிஞானத்தைப்பெற்ற ஆன்மா மீளவும் ஐம்பொறிகளால் மயங்காதோவெனக் கேட்கலாம்.

வியாபகவறிவுடைய ஆன்மா பதிஞானம் பெற்ற பின் மீண்டும் மயக்கமடையாது; எனினும் அது முத்தி நிலையில் (சீவன்முத்தன்) பிராரத்தகன்மத்தை அநுப வித்துத்தீர்க்கும் பொருட்டு உடம்புடன் வாழும்; அப் போது, மலகன்மமாயைகள், கல்லெறியின் சிறிது நீங் கிப் பின்பு முன்னிருந்தபடியே பரந்துநிற்கும் கிணற் றுப்பாசிபோல், பயிற்சி வயத்தால் (வாசனையினால்) சந்தர்ப்பம்நோக்கி, அவ்வான்மாவை வந்து தாக்குதலும் உண்டு. அவ்வேளையில், ஆன்மா முன்னே கூறப்பட்ட உபாயங்கள் மூலம் சிந்தித்து, ஐம்பொறிவழி மீண்டுஞ் செல்லாது உறைத்துநின்று தன்னைக் காத்துக்கொள்ளு மாதலின், ஐம்பொறிகளால் மயங்க வேண்டிய நியதி யில்லை.

எட்டாஞ்சூத்திரம் முடிந்தது

## சாதனவியல் iii

# ஒன்பதாஞ்சூத்திரம்

ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி,
யுராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவத்,
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே.

ஆன்மாவுக்கு வீடுபேறடையும் உரிமையுண்டு. அது வீடுபேறடைவதற்குரிய சாதனம் (வழி) குருவின் உபதேசத்தால் விவேகித்தறியும் ஞானமொன்றேயெனவும், அது(ஞானம்) பாசப்பற்றற்றாலன்றி நிகழாமையின் பாசஞானத்தாலெய்த முடியாதெனவும் முன்னேகூறப்பட்டன. இப்போது, அச்சாதனத்தை நிகழச்செய்வது இதுவென்றும்,அதனைச்சாதிக்குமுபாயமும், ஆன்மசுத்திசெய்யுமாறு உணர்த்துமுறையில், கூறப்படுகின்றன. அஃதாவது ஞானத்திற்கிரியையாகிய "சிந்தித்தல்" நிகழுமாறு இங்கே கூறப்படுகின்றது.

**செம்பொருள்:-**

*பசுஞானம் ஊனக்கண் போன்றது. கண் ஆன்மாவின் துணையின்றிக் காணமுடியாததுபோல, பசுஞானம் தத்துவங்களின் துணையின்றி உண்டாகமாட்டாது. பாசஞானம், கருவிகரணங்களால் ஆன்மாவினிடமாக ஏகதேசமாய் (பகுதிபகுதியாய்) உண்டாகும் ஞானம். இவை இரண்டினாலும் (பசுபாச ஞானங்களால்) சிவனை அறியமுடியாது. ஆகையால், ஆன்மா பதிஞானத்தைக் கண்ணாகக்கொண்டு தன்னறிவின் கண்ணே விவேகித்து ஆராயவேண்டும். ஆராயவே, ஆன்மா தன்னைமட்டுமன்றி உடம்பு, கருவி, முதலியவற்றுக்குக் காரணமாகிய மாயாதத்துவங்களெல்லாம் தனக்கு வேறானவையென்று அறியும். அன்றியும், அவற்றின் தொடர்பு வந்தவாறும், அவற்றால் தான்*

பிணிப்புண்டு மயங்கிக்கிடந்ததற்குரிய காரணங்களும் ஆன்மாவுக்குத் தெரியவரும். அஃதாவது, திருவடி ஞானத்தைத்தலைப்பட்டு ஆராயப்புகின், கானல் நீர், நீர் போலத் தோன்றினும் தேடிச்சென்றவிடத்துப் பொய்யாய்க்கழியுமென்றறிதல்போல, தத்துவக் கூட்டங்களாகிய நிலமுதல் நாதமீறாகிய பாசக்கூட்டம் அநித்தியமென்று உணருமென்பதாம். உணரவே, ஆன்மவறிவின்கண்ணே இறைவன் திருவடி (பேரறிவு) காட்சிப்படும். அக்காட்சி பிறவித்துயராகியவெப்பத்துக்குக் குளிர்ந்த நிழலாய் அமையும். அக்காட்சி சிவதரிசனம் எனப்படும். சிவதரிசனம் என்பது பரமசுகமாகிய பேரின்பத்திற் சேர்ந்து சிவத்தினையே காண்டலெனும் பொருள்படும். சிவதரிசனத்துடன் ஆன்மசுத்தியும் உடன்நிகழும். ஆன்மசுத்தியென்பது ஆன்மா தன்னியல்பு கெட்டு ஞானமயமாய் நிற்றல் அல்லது தன்பணிநீத்தல் எனப்பொருள்படும். அவ்வாறு, ஆன்மா ஞானத்தைப்பெற்று ஞேயமாகிய முதல்வனையறியுங்காட்சி சிலபோது மறையவுங்கூடும். அஃதாவது ஆன்மா, தான் முன்னர் மலத்துடன் கூடிப்பெற்ற அநுபவங்களை விட்டுநீங்கி நிற்பினும் பயிற்சிவயத்தால் தன் ஞான நிலையில் சோர்வுகாணும் போது, மீளவும் அவ்வநுபவங்களைநோக்கி நிற்கவுங்கூடும். ஆகையினால் வாசனை(பயிற்சியால் வருவது) வயத்தால் ஆன்மா திருவடிக்காட்சியில் சலியாதிருக்கும்பொருட்டுத் திருவைந்தெழுத்தாகிய "சிவயநம" எனும் ஸ்ரீபஞ்சாக்கரத்தை (முத்திபஞ்சாக்கரம்) விதிப்படி ஓதவேண்டும் என்பதாம்.

**பெறப்படுவன:-**

1. ஆன்மா அரன் ஞானத்தினாலே அரனைக் காணும்.

2. ஆன்மா பாசத்திலே பற்றற்ருல் அரன்வெளிப் படுவன்.

3. பஞ்சாக்கரசெபம் பண்ணிஞல் வாசனுமலம் போம்.

விளக்கம்:-

**அ. ஆன்மா அரன் ஞானத்திஞலே அரனைக் காணும்.**

பாசஞானம் ஏகதேசவுணர்வாதலால் அதற்கு வியாபித்து அறியுந்தன்மையில்லை;பசுஞானம் ஆராய்ந்து அறியுந்தன்மை யுடையது. ஆதலால், பாசஞானத்தால் அறியமுடியாத சிவனைப் பசுஞானத்தால் அறியமுடியாதோ? பசுஞானத்தாலும் அறியமுடியாதெனில், சிவம் அறியப்படாத ஒரு பொருளாய் நிற்கும்; அறியப்படாத பொருளெனின் அதனையறிய முயலுவதில் ஏதும் பயனுண்டோவெனும் ஆசங்கைகள் எழுகின்றன.

சிவன் வாக்குமனுதீதகோசரமாயுள்ளவன். அஃதாவது, சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி எனும் நால்வகை வாக்குகளின் பகுதிகளான வேதம் முதலிய சொற்பிரபஞ்சம், நிலமுதல் நாதமீருகிய பொருட்பிரபஞ்சமெனும் இவைபற்றி நிகழும் பாசஞானத்தாலும், மேற்கூறிய சொற்பிரபஞ்சமும் பொருட்பிரபஞ்சமும் தன்னுள் வியாப்பியமென்றறிந்து அவற்றினின்றும் நீங்கித் தற்போதமுனைப்பால் "யானே பிரமம்" என எண்ணவருவதொரு ஞானமாகிய பசுஞானத்தாலும் சிவன் அறியப்படானுயினும், அவன் அறியப்படும் (கோசரமாகும்) தன்மையுள்ளவன் என்பதாம். எனவே, பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் சிவன் அறியப்படானெனில் அவன் பதிஞானத்

தால் அறியப்படுவன் என்பது அருத்தாபத்தியால் பெறப்படும். இதனாலேயே, இறைவன் பதிஞானத்தால் மட்டும் அறியப்படுவன் எனக்கூறப்பட்டது.

சிவன் அறியப்படுவனெனில், பதிஞானத்தால் மட்டுமே அறியப்படுவன் என்று கூறவேண்டியதில்லை. பசுஞானம் பசுத்துவம் நீங்கியவுடன் சுட்டிறந்தறியும் ஆன்மஞானமாய் நிற்கும், ஆன்மஞானம் பதிஞானத்தைப்போன்று எங்கும் வியாபகமாய் விளங்கும்தன்மையதெனச் சிவாகமம்கூறுகின்றது. ஆதலால் ஆன்மஞானத்தால் சிவனையறியலாம் என்றல் பொருந்தாதோ? அன்றியும் நாடி நரம்பு முதலாம் தத்துவதாத்துவிகங்களைத் தன்னின் வேறென விவேகித்தறியும் ஆன்மாவுக்கு,சிவனையறிதற்குப் பதிஞானம் வேண்டப்படுவது எற்றிற்கெனக் கேட்கத் தோன்றலாம்.

இடை, பிங்கலை, சுழுமுனை முதலிய நாடிகள், எலும்பு இரத்தம் முதலாம் அகக்கருவி புறக்கருவி (தத்துவதாத்துவிகங்கள்) எனும் பொருள்களில் தான் எப்பொருளென்று ஆராயத்தொடங்கியவான்மா, தான் எதுவென்று அறியாதுநிற்கும்; பின் குருவுபதேசத்தினால் மேலும் விவேகித்து ஆராயத்தொடங்கியபோது தன் அறிவினிடத்துநின்று தன்னைவிளக்குவதோர் அறிவு வேறுண்டெனவுணரும். அஃதாவது, ஆன்மா விவேகித்து ஆராயப்புகுங்கால், இதுவரை அதனுணர்வுக்கு மறைந்துநின்ற சிவன் ஆன்மாவினிடத்து விளங்கித் தோன்றுவன் என்பதாம். தோன்றவே, அது சிவத்தில் வியாப்பியமாய்நின்று சிவத்தையறியும் பொருளாகிய தன்னையும் அறியும். இதனால், தலைவனாகிய சிவனை அறியாத ஆன்மா தன்னையும் அறியாது என்பது தெளிவு. ஆகையால் ஆன்மஞானத்தால் சிவனை அறிய முடியாது.

இனி, ஆன்மாவின் துணையின்றிக் கண் காணமாட்டாது; அதற்கு முன்னேயிருக்கும் பொருளை ஆன்மா காட்டவே காணும்; அதேபோல பின்புறத்திலுள்ள பொருளையும் ஆன்மா காட்டக் கண் திரும்பிப்பார்த்துக் காணும்; இவ்வாறு, முன்னுள்ள பொருளையும் பின்னுள்ள பொருளையும் கண் ஒரே தன்மைத்தாய்க் காணினும், அக்கண் தன் சொந்தவியல்பையேனும், காட்டும் ஆன்மாவையேனும் அறியமாட்டாது. அதுபோல, அகக் கருவிகளையும் புறக்கருவிகளையுந் தற்போதத்தாலறி கின்ற ஆன்மா, தன்னையறியமாட்டாது, தன்னைச் செலுத்தும் சிவனையுமறியமாட்டாது. எனினும், கண் சடமாதலால் ஆன்மாவை ஒருபோதும் அறியமுடியாது. ஆயின், ஆன்மா, அறியுந்தன்மையுள்ள பொருளாயிருப் பதாலும், சிவன் ஆன்மாவின் அறிவுக்கறிவாகி (உயிர்க்குயிராய்) நிற்கின்ற கள்வனகையாலும், அவனை ஆன்மஅறிவின்கண்ணேயே வைத்து ஆராயின் அறிந்து தெளியலாம். இத்தெளிவு பதிஞானத்தாலேயே (அவனருளாலேயே) உண்டாகும். இதன் காரணமா கவே, ஆன்மா, ஆன்மஞானத்தினல் சிவனைக்காணு தென்றும், பதிஞானத்தினலேயே சிவனைக்காணுமென் றும், இவ்வாறு காணுந்தன்மையினல் ஆன்மா தன்னை யும் காணுமென்றும் கூறப்பட்டது.

அவ்வாறெனில், ஆன்மா தான் இந்திரியங்களின் வேருன பொருளெனக் காணவே, திருவடியாகிய ஞானக்காட்சியைப் பெறும். அக்காட்சியே வீடுபேற்றுக்கு அமைவுடைத்தாயிருக் கவும், ஆன்மசுத்தி எதற்காகவென மேலும் ஐயமெழுகின்றது.

காட்சியில் மூன்றுபடிகள் உள்ளனவென்று முன்பு ஓரிடத்தில் கூறப்பட்டது. மேலும் ஆராயுங்கால் நிர் விகற்பக்காட்சியையடுத்து இரட்டுறக்காட்சியும் நிகழ்

வதை அறியலாம். இரட்டுறக்காட்சி என்பது 'இது குதிரையோ, கழுதையோ' என ஐயத்துடன் காணுங் காட்சியாகும். ஒரு பொருளை அறிவதற்கு நிர்விகற்பக் காட்சி, இரட்டுறக்காட்சி, சவிகற்பக்காட்சியெனும் இம் மூன்று வகையான காட்சிகளும் மனதின்கண் முறையே நிகழவேண்டும். அதிபரிபக்குவமுடைய ஆன்மாக்களுக்குக் குருவுபதேசத்தைக் கேட்டமாத்திரத்திலேயே, முற்கூறிய மூவகைக்காட்சிகளும் ஒருங்கே நிகழ்ந்து, திருவடிக்காட்சி தெளிவுபடும். ஏனையோருக்கு, குருவுபதேசத்தைக் கேட்டலினால் நிருவிகற்பக் காட்சியும், சிந்தித்தலினால் இரட்டுறக் காட்சியும், தெளிதலினால் தெளிவுகாட்சியும் சோபானமுறையில் (படிப்படியாக) நிகழும். இதன்காரணமாகவே, சிவரூபத்தில் நிகழும் ஆன்மதரிசனத்தின்பின், சிவதரிசனத்தில் நிகழும் ஆன்மசுத்தியும் இன்றியமையாதாயிற்று.

## ஆ. ஆன்மா பாசத்திலே பற்றற்றால் அரன் வெளிப்படுவன்.

குருவுபதேசத்தைக்கேட்ட ஆன்மா அதிலுறைத்து நின்று ஆராயப்புகின் அசத்தாயும், நாமரூபபேதங்களாயுமுள்ள காரியப்பிரபஞ்சத்தை அசத்தெனக்காணும். கண்ணாடியை மறைத்துநின்ற வேற்றுநிறங்களை ஆராய்ந்து இவை வேற்றுநிறங்கள், கண்ணாடியின் சுயநிறங்களல்லவெனக் காணும்போது கண்ணாடியின்சுயரூபமே விளங்கித்தோன்றும். அதுபோல, நிலைபேறான ஞானசொரூபத்தை (பதிஞானம்) உணரவிடாது மறைத்து நின்ற தனுகரணபுவனபோகங்களாகிய காரியப்பிரபஞ்சத்தை, இது நிலையற்றது, இது ஆன்மாவுக்கு

வேறானதென விவேகித்தறியின் அப்போது ஆன்மவறி விற்குத் தாரகமாய் ஆனால் மறைவாய் நின்று இதுவரை யுணர்த்திவந்த ஞானசொரூபம் ஆன்மவறிவில் வெளிப் பட்டுத்தோன்றும். இதனாலேயே ஆன்மா பாசத்திலே பற்றற்றால் அரன் வெளிப்படுவனெனக் கூறப்பட்டது.

நாம் அறியும் விடயங்கள் யாவும் நாமரூபபேதங்களா கிய காரியப்பிரபஞ்சத்திலடங்கும். அவற்றை நிலைபேறில்லாத அசத்தென ஆன்மா காணின் காரியப்பிரபஞ்சம் மனத்தி னின்று நீங்கிவிடும். அப்போது இன்னதென்று அறிய முடி யாத சூனியமே தோன்றவேண்டும். அவ்வாறிருக்கவும் ஞான சொரூபம் விளங்கித் தோன்றுமென்பது எவ்வாறு பொருந்து மெனக்கேட்கலாம்.

பிரகிருதிமாயை சாத்விகம், இராசதம், தாமதம் எனும் முக்குணரூபமாய் அறியப்படும்; அசுத்தமாயை மலகன்மகாரியவடிவாய் அறியப்படும்; சுத்தமாயை நிலை யில்லாத இன்பவடிவாய் அறியப்படும். இறைவன், இம் மூவகைமாயைகளையும் கடந்துநிற்குந்தன்மையினால், முற் கூறிய முக்குணவிருத்திரூபமாய் அறியப்படாதவனாயும், அநித்தியானந்தரூபமாய் அறியப்படாதவனாயும் உளன். ஆன்மாவோ மூவகைத்தாய மாயாகாரியங்க ளுடன் கூடியநிலையிலேயே பொதுவாக அறியப்படும். எனினும், ஆன்மா அசத்தாகிய காரியப்பிரபஞ்சத்தை அசத்தென்றுகாணவே, இறைவன் சூனியப்பொருள் போலச் சுட்டறிவினளவினைக் கடந்துதோன்றினும் பின் சுட்டிறந்தறியும் ஆன்மவறிவின் கண்ணே ஞான சொரூபமாய் விளங்கித்தோன்றுவன்.

அவ்வாறாயின், ஆன்மா சுட்டிறந்தறியும்போது வெளிப் பட்டுத் தோன்றுவது ஆன்மசொரூபமாயிருக்கலாம்; அதைத்

திருவடியெனும் ஞானசொரூபமென்று கூறவேண்டியதற்குக் காரணமென்னவெனக் கேட்கலாம்.

ஆன்மா சார்ந்த தன்வண்ணமாய்நின்று அறியுமியல்புடையது. அதனால் இதுவரை பிரபஞ்சத்தோடு கூடி விடயங்களை ஒவ்வொன்றாய்ச் சுட்டியறிந்து, அநுபவித்துவந்தது. இப்போது, பிரபஞ்சப் பொருட்களில் தான் எதுவுமன்றென்று அறிந்தகாரணத்தால், அது என்றும் ஒரேதன்மைத்தாயறியும் சத்தாகிவிடமாட்டாது; அஃதாவது, ஆன்மா அசத்தைவிட்டுநீங்கிநின்று தானேயுணரும் வேறொரு சத்துப்பொருளாக மாட்டாது என்பதாம். அசத்தைவிட்டு நீங்கியவுடன், தான்காணுவது சூனியமேயன்றி வேறொன்றுமன்று எனவுணர்வதற்கும் ஆன்மா இன்னொரு பொருளைச் சார்ந்துநின்றே உணரவேண்டும். இதனால், அசத்தாகிய பிரபஞ்சத்தை வேறென விட்டுநீங்கியவுடன் சாரப்படுபொருளாய் நிற்பது சத்தாகியசிவம் என்பது பெறப்படும். எவ்வாறெனில், தத்துவக் கூட்டங்கள் நீங்கியவழி எஞ்சிநிற்பது 'சிவசத்து' ஆதலால் அது சூனியமாய் மறைந்துநின்றபோது ஆன்மாவினால் அறியப்படாதிருந்தாலும் ஆன்மா சாதனஞ் செய்து அசத்தை விட்டவழி, அறிவுக்கறிவாய் நின்ற சிவம் வெளிப்பட்டுத்தோன்றும். அதனாலேயே ஆன்மா சிவசத்தைச்சார்ந்து அதன் அடிமையாய் நின்ற காரணத்தினாலேயே சுட்டுணர்வு நீங்கப்பெற்றது என்றும், அதன் பயனாகக் காட்சிப்பட்டது ஞானசொரூபம் என்றும் கூறப்பட்டது.

அப்படியாயின், பிரபஞ்சத்தை அசத்தெனக் கண்ட ஆன்மா சிவத்தையறிதற்குச் செய்யவேண்டியசாதனம் எது என்ற வினா வெழுகின்றது.

விடவைத்தியன் கருடதியானஞ்செய்து விடத்தை நீக்குவன். கருடன் மூவகைப்படும். நாம் கண்ணுற் காணும் கருடன் ஆதிபௌதிககருடன்; அக்கருடனுக்குத் தெய்வமாயுள்ளது ஆதி தைவிக கருடன்; கருட மந்திரத்தினிடமாகநின்று பயன்கொடுக்கும் சிவசக்தி ஆத்தியான்மிக கருடன். வைத்தியன் ஆதிதைவிக கருடனை மந்திரரூபமாக மனதில் நிறுத்தித் தியானித்துக் கணித்துக்கொண்டுவர, அப்பயிற்சியின் காரணமாய், வைத்தியன் மந்திரரூபமாய்விடுவன். இவ்வாறு மந்திர பாவனையால் மந்திரரூபமாய் நிற்கும் வைத்தியன் விடந் தீண்டப்பெற்றவனைப் பார்த்தமாத்திரத்திலேயே விடம் நீங்கும். அதுபோல, நாமரூபபேதமாயறியப்படும் உலகம் நிலையற்றது எனவுணர்ந்த ஆன்மா, தன்னறிவின்கண்ணே சிவத்தை ஆராயத் தலைப்பட்டுச் 'சிவோகம்பாவனை' செய்யின், அப்பாவனையில் ஞானசொரூபம் அத்துவிதமாய் விளங்கித்தோன்றும். தோன்றவே, விடந்தீர்தல்போல, ஆன்மாவின் பொதுவியல்பாகிய பாசத்தாலுண்டாகும் ஏகதேச அறிவுநீங்க, வியாபக வறிவு உண்டாகும்.

**சிவோகம்பாவனை செய்யுமுறை:-**

ஆன்மா குருவுபதேசவழிநின்று சிவத்தை ஆராயத்தலைப்பட்டு 'சிவோயம்' (சிவனிதுவாயிருக்கின்றான்) எனத்தன்னுள்ளே பாவித்து, 'சிவத்துவமசி' (நீ சிவன் ஆகின்றனை) எனும் சித்தாந்த மகாவாக்கியத்தை நாள்தோறும் மனதில் இருத்தி 'சிவோகம்' (சிவன்நான் ஆகின்றேன்) என்று பாவிக்குமாயின் அப்பாவனையில் சிவன் விளங்கித் தோன்றுவன்.

**இ. பஞ்சாக்கரசெபம் பண்ணினால் வாசனாமலம் நீங்கும்.**

குருவுபதேசத்தைக்கேட்ட ஆன்மா விவேகித்தறிந்து பாசங்களின்பற்றைவிட பதிஞானம் பிரகாசிக்கும். அதனால் ஆன்மசுத்தியும் உண்டாகும். அப்போது திருவடிநீழலாகிய பதிஞானத்தால் சிவத்தை யறிந்து அநுபவிக்கும். ஆதலால் ஆன்மா இவ்வுலகில் மேலுஞ்செய்யவேண்டிய முயற்சி ஒன்றுமேயில்லை எனச் சிலர் கூறலாம். இக்கூற்றுப் பொருந்தாது.

ஏனெனில், கசப்பான மரச்சோற்றியையுண்டுவந்த புழு கரும்பையுண்ணும் வாய்ப்புக் கிடைப்பின் அதன் உருசியில் ஆசைவைத்து அவ்விடத்தை விட்டு அகலாதிருக்கும். அவ்வாறிருக்கும்போதும் முன் உண்ட கசப்புணவு பயிற்சிவயத்தால் இடையிடையே ஞாபகத்துக்குவர அவ்வுணவையும் விரும்பும்; விருப்பமுண்டாகவே அப்புழு கரும்பை விட்டுநீங்கிக் கசப்புணவைத் தேடிச் செல்லவுங்கூடும். அதுபோல, நிலையற்ற தநுகரணபுவன போகங்களில் அழுந்தி அநுபவித்துவந்த ஆன்மா, அவைகளை அசத்தெனக்கண்டு பற்றைவிட, அதன்காரணமாய் ஞானசொரூபமெனும் திருவடிக்காட்சி கிடைத்துஇன்ப நிலையில் இருக்கின்றபோதும், முன் சிற்றுணர்வாற் பெற்ற அநுபவங்கள் பயிற்சிவயத்தால் திரும்பவும் ஞாபகத்துக்கு வரும். இவ்வாறுண்டாகும் நாட்டத்தை நீக்குதற்பொருட்டு முத்திபஞ்சாக்கரத்தை முறைப்படி சுத்தமான தவறிவால் உச்சரிக்கவேண்டும். இதனால், ஆன்மா ஞானசொரூபக்காட்சியிற் சலியாது நிலைத்தற்காக, அஃதாவது இறைபணியில் வழுவாது நிற்றலின் பொருட்டு, செய்யவேண்டிய முயற்சி மேலும் உண்டென்பது தெளிவு. இறைபணி நிற்றலாவது, ஆன்மா தனது அற்ப இச்சை ஞானம் கிரியைகள் தொழிற்பட இறைவனது இச்சாஞானகிரியாசக்திகள் இன்றியமையாதவை என்றறிந்து, இறைவனின்வியாபக வறிவினுள்

அடங்கி நிற்றலாகும். இவ்வாறு நிற்றலினால் மாயா கன்மமலங்களின் வாசனை தாக்காது.

ஈ. **பதிஞானத்தைப்பெற்ற ஆன்மா, பழைய வாசனைகள் இடையே வந்து தாக்காதிருக்கும் பொருட்டு, முத்திபஞ்சாக்கரத்தை ஓதும் முறைமையும், அது திருவடியில் சலியாது நிற்கும் விதமும்:-**

இதயம், உந்தி, புருவநடு இவற்றைமுறையே பூசைத் தானம், ஓமத்தானம், தியானத்தானங்களாகக் கருத வேண்டும். இதயமாகிய தாமரைப்பூவுக்குப் பிரகிருதி தத்துவங்கள் இருபத்துநாலும் நாளமாகவும், அசுத்தமாயாதத்துவங்களுடன் சுத்தவித்தை சேர்ந்த எட்டும் எட்டிதழ்களாகவும், ஈசுரம் சாதாக்கியமெனும் இரண்டும் கோசரவடிவாகவும், சத்திதத்துவம் பொகுட்டாகவும், நாததத்துவம் அப்பொகுட்டிற்காணப்படும் பீசவடிவாகவும் அமைந்திருக்கும். இதயமாகிய தாமரைப்பூவில் பஞ்சாக்கரத்தைத் திருமேனியாகக்கொண்டு சிவசத்தி வீற்றிருக்கும்; சத்தியில் சிவமிருக்கும். முத்தர்கள் சிவத்தின் திருமேனியாகிய திருவைந்தெழுத்தைத்தியானித்து, கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறுமை, இரக்கம், அறிவு, வாய்மை, தவம், அன்பு எனும் அட்டபுட்பங்களைக் கொண்டு திருவைந்தெழுத்தால் விதிப்படி ஞானபூசை செய்ய வேண்டும். விதிப்படி யெனவே, ஆன்மா சிவனைத் தனது ஆலயமாகிய தேகத்தில் இதயத்தின்கண்ணே மானசமாகத் தாபனஞ் செய்து, கந்தம், அட்டபுட்பம், தூபம், தீபம், திருமஞ்சனம் முதலியவற்றை மனதினாற்கொண்டு, தியானம் வாயிலாக அந்தரியாகபூசை செய்யவேண்டும். இவ்வாறு

ஆன்மபூசை செய்யின் இறைவன் ஆன்மஅறிவில் வெளிப் பட்டுநிற்பன்.

**சிவன் விளங்கித் தோன்றும் விதம்:-**

இராகு கிரகங்களுள் ஒன்ருகக் கருதப்படினும், அதைக்காணமுடியாது. அது சாயையாக இருப்பதி ணல் சாயாக்கிரகம் எனப்படும். எனினும், கிரகணகா லங்களில் சந்திரன் அல்லது சூரியனிடத்தில் அதைக் காணலாம். அதுபோல, பசுபாசங்கள் போன்று ஒரு பொருளாயறியப்படாததும் மாயாதத்துவங்கட்கு அப் பாற்பட்டதுமாயுள்ள சிவத்தை இதயத்தின் கண்ணே பஞ்சாக்கரரூபமாய்ப் பாவிக்கின், கட்டையைக் கடையும் போது நெருப்புத் தோன்றுமாபோல, சிவம் அறிவுக் கறிவாய் விளங்கிநிற்கும்; நிற்கவே, ஆன்மா கொல்லன் உலையில் வைத்த இரும்பு நெருப்புமயமாய் விடுவது போல, தனது சுதந்திரத்தை விட்டுச் சிவத்துக்கு அடி மையாகிச் சிவமயமாய் விடும். அதனல் ஆன்மா திரு வடிக்காட்சியில் சலியாது பேரின்பத்தைப்பெற்று நிற் கும்.

ஒன்பதாஞ்சூத்திரம் முடிந்தது.

## பயனியல் i

# பத்தாஞ்சூத்திரம்

அவனே தானே யாகிய வந்நெறி
யேக ஞகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னெடு வல்வினை யின்றே.

ஏழாம், எட்டாம், ஒன்பதாஞ்சூத்திரங்களால், முறையே சாதிக்கும் பொருளினியல்பு (ஆன்மா), சாதித்துப் பெறப்படும் பொருளினியல்பு (குரு), சாதிக்கும்முறை என்பன கூறப்பட்டன. சாதனத்தின் பயனுகிய பாசநீக்கம், சிவப்பேறு எனுமிரண்டினுள் இப்போது பாச நீக்கமாகிய பயன் கூறப்படுகின்றது. அஃதாவது, சிவயோகம் எனப்படும் ஞானத்தில்யோகமாகிய "தெளிதல்" நிகழுமாறு கூறப்படுகின்றதென்பதாம்.

**செம்பொருள்:-**

*ஆன்மா ஆணவமலத்தினுல் பந்திக்கப்பட்டிருக்கும் நிலை, பெத்தநிலை. அந்நிலையில் அது பசுபாசஞானங்களாலுண்டாகும் ஏகதேசவறிவாகிய சிற்றறிவைப் பெற்று நிற்குமென முன்னே கூறப்பட்டது.*

*ஆன்மா சார்ந்ததன்வண்ணமாய்நின்று அறிவைப் பெறினும், இறைவன், ஒன்றாய்நின்று அது அறியும் வண்ணம் விடயங்களைத் தானே (இறைவன்) காட்டிக் காணுவயின், ஆன்மா பசுபாசஞானங்களைத்தானும் பெறமாட்டாது. இவ்வாறு, ஆன்மா அறியும்படி பெத்தமுத்திகாலங்களில் ஒரேதன்மைத்தாய் நின்று முதலுதவிசெய்யும் இறைவன், பெத்தகாலத்தில் இறைவனுகிய தான் இருக்கின்றானென ஆன்மாவறியாதபடி தோன்றாத்துணையாய் நின்றான்; அதுமட்டுமன்றி, அவன், அப்போது, எதையும் தானே (ஆன்மா)*

அறிந்து வந்ததாக ஆன்மா எண்ணும்படி அவ்வான்மாவோடுஒற்றித்து நின்றான். இதனால், இறைவன் அறிந்து காட்டியவற்றை எல்லாம் ஆன்மா தானேகண்டு அறிந்ததாக எண்ணிநின்றது.

அம்முறையேபோல, ஆன்மா, முத்திநிலையில் இறைவனோடு ஒற்றித்து நின்று அறியினும் தானென வேறு காணப்படாதவாறு இறைவனேயாம்படி ஒற்றுமைப்பட்டு ஏகனாகி இறைபணியில் வழுவாதுநிற்க வேண்டும். ஏகனாகி நிற்பின், காண்போன், காட்சி, காணப்படுபொருள் எனப்பகுத்துக்காணும் மயக்கவுணர்வைக்கொடுக்கும் ஆணவமலவாதனை நீங்கும்; நீங்கவே 'யான்', 'எனது' எனுஞ்செருக்கு நீங்கும். அப்போது ஆன்மாசெய்யும் எல்லாவினைகளையும், இறைவன் தான் செய்யும் வினைகளாக ஏற்றுக் கொள்வன். அன்றியும், ஆன்மாவின் இன்பதுன்பநுகர்ச்சிகளும் இறைவன் பணிகளால் உண்டாகும் நுகர்ச்சிகளாய்விடுதலால், மேலைக்கு வித்தாகவரும் ஆகாமியகன்மம் ஏறாது. ஏறாதாகவே, பாசத்தில் பற்றுவிட்ட அவ்வான்மாவுக்குப் பழைய வாசனையால் வந்துதாக்கும் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களினால் உண்டாகும் மயக்கவுணர்வு தோன்றாது. மயக்கவுணர்வு தோன்றாதெனவே, பாசநீக்கமென்பது மும்மலங்களும் வலிகெட்டு நிற்பனவென்ற பொருளைத் தந்துநிற்கும்.

**பெறப்படுவன:-**

1. ஆன்மா அரனுடன் ஒன்றாகி நிற்கவேண்டும்.
2. ஆன்மா தன்தொழிலெல்லாம் அரன்பணியென்று கொள்ள வேண்டும்.

## அ. ஆன்மா அரனுடன் ஒன்றாகி நிற்கவேண்டும்.

ஆன்மா சிந்திக்கத்தலைப்பட ஞானசொரூபம் காட்சிப்ப டும்; காட்சிப்படினும், வாசனுமலத்தால் அக்காட்சி நீங்காதிருக் கும் பொருட்டு ஸ்ரீபஞ்சாக்கரததை உச்சரித்தலே போதும்; அவ்வாறிருக்கவும், தானொரு பொருளுண்டென வேறு காணப் படாதவாறு ஆன்மா இறைவனாகிய முதல்வனுடன் ஒற்றுமைப் பட்டு ஏகனாகி இறைபணியில் வழுவாது நிற்கவேண்டியது எற் றிற்கோவெனும் கேள்வியெழலாம்.

*சார்ந்ததன்வண்ணமாய்க்காணும் இயல்புடைய கண்ணொளியும், என்றும் ஒரே தன்மைத்தாய் நிற்கும் விளக்கொளியும் அத்துவிதமாய்க் கலந்து நிற்குந்தன் மையினால், அவற்றை வேறு பிரித்து அறியமுடியாது. அந்நிலையில், கண்ணொளியே காண்கின்றது என்ற உணர்ச்சியுடன் காணின், காணுந்தன்மையே முனைத் துத்தோன்றும்; அப்போது விளக்கொளியிருந்தும் இல்லையாகும். விளக்கொளியாய்க் காணுங்கால், காட் டுந்தன்மையே முனைத்துத்தோன்றும்; அப்போது கண் ணொளியிருந்தும் இல்லையாகும்; இது கண்ணொளி, இது விளக்கொளி எனப்பிரித்துக் காணப்புகின், அப் போதும் காணுந்தன்மையே முனைத்துத்தோன்றும். இவ்விதகாட்சிகள் திரிபுகாட்சி அல்லது விபரீதக்காட்சி எனப்படும். ஆயின், கண்ணொளி விளக்கொளியைக் காணுங்கால் விளக்கொளியே தானாகின்று தன்னையு மவ்விளக்கொளிவண்ணமாய்க் காண்டல் தெளிவு காட்சி எனப்படும்.*

*எனவே, காண்பான் (ஞாதா), காட்சி (ஞானம்), காட்சிப்பொருள் (ஞேயம்) எனப்பகுத்துக்காணும் காட்சி திரிபுகாட்சியால் உண்டாவது. ஏனெனில்*

யானென்றும், இறைவனென்றும் பிரித்தறியமுற்படின் ஆன்மபோதமே (யான் ஒருவன் உளேன் எனும் உணர்வு) முனைத்துத் தோன்றும். தோன்றவே இறைவன் காட்சி தோன்றாது. அஃதாவது, தூலவறிவாகிய ஆன்மாவும், சூக்குமவறிவாகிய சிவமும் அத்துவிதமாய்ப் பிரித்தறியமுடியாதவாறு கலந்துநிற்கும் நிலையில், ஆன்மா, காண்பானாகிய "யான்" உளன் எனும் தூலவறிவுகொண்டு நோக்கின் சூக்குமவறிவாகிய சிவம் "தான் ஒரு முதல்வன் உளன்" எனத்தன்னைக் காட்டாது தானுமவ்வான்மாவாகவே காணப்படுவான். ஆயின் "யான் எனும் ஒருபொருள் தனித்துக் காணப்படுமாறில்லை" என்னும தன்னிலையை யுணர்ந்த ஆன்மா, சிவனேமுழுவதும் எனக்காணின், சிவன் அவ்வான்மாவைத் தன்திருவடிவியாபகத்துள் அடங்கிநிற்கச் செய்து தானே எல்லாமாங்காட்சி கொடுத்து நிற்பன்.

ஆகையால், வாசனைமலத்தைநீக்கி ஆன்மசுத்தி பண்ணுதற்கு ஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரித்தல்மட்டும்போதாது ஞாதிரு, ஞானம், ஞேயம் எனப் பகுத்துக்காணும் திரிபுடிக்காட்சியினால் உண்டாகும் மயக்கத்துக்குக் காரணமாகிய மலவாசனை நீங்கும் பொருட்டு, ஆன்மா பதிஞானத்தைத் தலைப்பட்டவிடத்தும் ஏகனாகி இறைபணிநிற்கவேண்டும். அவ்வாறு நிற்கவே, அது திருவடியாகிய சிவானந்தத்தைஇடையறாது அநுபவிக்கும் தன்மையைப்பெறும்.

### ஆ. ஆன்மாவின் தொழிலெல்லாம் அரன்பணி என்று கொள்ளவேண்டும்.

உடம்பு உள்ளவரை பிராரத்த வினையும், அதை அநுபவிக்குங்கால் ஆகாமியவினையும் உண்டாம். ஆதலின் ஆன்மா

இறைபணிநிற்பின் கன்மமலமும் மாயாமலமும் ஆன்மாவைத் தாக்காது என்றுகூறக் காரணமென்னவெனும் ஆசங்கை இவ்விடத்தில் எழுகின்றது.

இறைபணிநிற்கும் ஆன்மா அவன் அருள்வழிநின்று தொழிற்படும்; அதனால் கன்மமலத்தாலுண்டாம் ஆகாமிய வினையும், மாயையின் காரியமாகிய மயக்கமும் அதனைத் தாக்காது வலிகெட்டுநிற்கும். வினைகளை நுகருதற்குக் கருவிகளாயுள்ள தநுகரணபுவனபோகங்கள் எனுமிவை மாயேயங்கள் (மாயையின் காரியங்கள்) எனப்படும். அவை முதல்வனாலேயே தொழிற்படுவன. திருவடியைத் தலைப்பட்டு இறைபணிநிற்கும் ஆன்மா அடிமையாய்ச் சுதந்திரமின்றி நிற்குங் காரணத்தால் பிராரத்த வினையை அநுபவிக்கும்போதும் சிவன் விளக்க விளங்கியும், விளக்காதபோது விளங்காமலும் நிற்கும். அப்போது, ஆன்மா தான்செய்யுந் தொழில்களெல்லாம் சிவனின் அருள்வழிநின்று இறைபணியாய்ச் செய்வதாகக் காணும். அதனால், சிவனுக கடிமையாய்நிற்கும் ஆன்மா எவ்வுடம்பினின்று எவ்வினைகளைச் செய்யினும் அவ்வினைகள் அவ்வான்மாவைப் பந்திக்கமாட்டா. ஆகாமியவினைக்குக் காரணமாயுள்ள பிராரத்தவினையும் உடலூழாய் அநுபவிக்கப்பட்டுக் கழிந்துவிடும். இதனாலேயே, ஆகாமியகன்மம், மாயை எனுமிருமலங்களும் இறைபணி நிற்கும் ஆன்மாவைத் தாக்காமல் விட்டுநீங்கும் எனக் கூறப்பட்டது.

இன்னும், குரு, தீட்சைமூலம் அத்துவசோதனை செய்தபோது சஞ்சிதவினை நீங்கிவிடும்; அதன்பயன் அத்துவசுத்தியாகும். அத்துவாக்கள் மந்திராத்துவா, பதாத்துவா, வன்ணத்துவா, புவனத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா எனவறுவகைப்படும். இவற்றில், முறையே,

மந்திரங்கள் பதினொன்றும், பதங்கள் எண்பத்தொன்றும், அட்சரங்கள் ஐம்பத்தொன்றும், புவனங்கள் இருநூற்றிருபத்துநான்கும், தத்துவங்கள் முப்பத்தாறும், கலைகள் ஐந்தும் அடங்கும். ஆன்மாக்களின் கன்மங்களும் போகங்களும் அத்துவாக்களில் அடங்குமாகையாலும், அவை மனம், வாக்கு, காயமெனும் முத்திறத்தாற்செய்யுங் கன்மங்கட்குத் துணைக்காரணமாயுள்ளவையாதலாலும், அத்துவசுத்தி இன்றியமையாததாயிற்று.

அவ்வாறாயின், இறைபணி நிற்கும் ஞானியின் பிராரத்த க்ன்மம் உடலூழாய்க்கழிய ஏனையோரின் பிராரத்தகன்மம் மேலும் ஆகாமியமாய்ச் சென்று வருத்தக்காரணமென்ன, இறைவன் நடுநிலைமையற்றவனாவெனுங் கேள்விக்கு இடமுண்டாகின்றது.

அடைக்கலமென வந்தடைந்தோரைக் காத்தல் உத்தமகுணம். தனது திருவடித் தொண்டில் நிற்கும் அடியாரைச் சிவனேயாக நிற்கச்செய்து, அவர்களுக்கு வரும் ஆகாமிய கன்மங்களை ஏறாது தடுத்தலும், திருவடித்தொண்டில் நில்லாது தற்போதமுனைப்பால் தொழிற்படும் ஏனையோரைச்சாரும் ஆகாமிய கன்மங்களை நியதிப்படுத்திக் கொடுத்தலும் நடுநிலைமைக்கு மாறான காரியமன்று. எனவே இறைவன் நடுநிலைமையுள்ளவனென்பது பெறப்படுகின்றது.

மேலும், இறைபணி நிற்கும் ஞானிகளையும் பிராரத்தவினை தாக்குகின்றது. தாக்குமிடத்து ஆகாமியவினை ஏறாதென்றுகூறுவது எவ்வாறு பொருந்துமென மேலும் வினாவெழலாம்.

பெருங்காயம் வைத்தெடுத்த பாத்திரத்தில் (பெருங்காயம் இல்லாதபோதும்) அதன்வாசனை சிறி

தளவாவது காணப்படும். அதுபோல, 'நான் அவன்' என்று சிவோகம்பாவனை செய்துநிற்கும் ஞானிகளிடத்தும் பயிற்சிவயத்தால் ஆன்மபோதம் இடையிடையே முனைத்துத் தோன்றக்கூடும்; அப்போது, பிராரத்த வினையும், உடம்பு முதலிய மாயையப்பற்றும் மெலிதாய், வாசனைமாத்திரையாய் வந்து அவர்களைத் தாக்கும். அந்நிலையில், அவர்கள் மறுபடியும் விவேகித்தறிந்து சிவோகம்பாவனை செய்து ஏகனாகி, இறைபணி நிற்பின் ஆகாமியவினை மறுபிறவிக்கு வித்தாய் முறுகாது அதன் பற்றுக்கோடாயுள்ள தநுகரணபுவனபோகங்களாகிய மாயையங்களோடு கெட்டொழிந்துவிடும். இதனாலேயே ஞானிகளுக்கு ஆகாமியவினை ஏறாதெனப்பட்டது.

இன்னும், ஞானி எங்களில் ஒருவனாய் எங்களுடன் இருந்துவரினும் தன்னிலை பிறழமாட்டான். அக்கினித்தம்பனஞ்செய்பவல்லான் கையில் நெருப்பையேந்தி வைத்திருப்பன்; குதிரையேற்றம் பழகியவன் குதிரை எவ்விதவாய்ப்பாயினும் தன்னிலைதவறி விழமாட்டான். அஃதாவது, அவர்கள், முறையே, சூட்டையும் வேகத்தையும் வென்றுநிற்பர் என்பதாம். அதுபோல, ஞானிகள், சிவனின் திருவடிவியாபகத்துள் அடங்கி அவ்வச்சினை (சிவனை) உணர்ந்துநிற்கவல்லவராதலால், ஆகாமியவினை ஏறுதற்குக் காரணமாகிய ஐம்புலவிடயங்களிற் சென்றாராயினும், அவற்றால் பந்திக்கப்படார் என்பது தெளிவு.

பத்தாஞ்சூத்திரம் முடிந்தது.

## பதினோராஞ்சூத்திரம்

காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்
காணவுள் ளத்தைக் கண்டு காட்டலி
னயரா வன்பி னரன்கழல் செலுமே.

சாதனம் செய்வதனாலுண்டாகும் பயன் பாசநீக்கம், சிவப்பேறு என இருவகைப்படும். அவ்விரண்டினுள், பாசநீக்கம் பத்தாஞ்சூத்திரத்தில் கூறப்பட்டது. சிவப்பேறு (பரமுத்தி நிலை) எனப்படும் ஞானத்தில்ஞானமாகிய "நிட்டை" கூடுமாறு இங்கே கூறப்படுகின்றது.

### செம்பொருள்:-

*கண் அறிவற்ற பொருளாதலால் புறத்தேயுள்ள எவ்விதவுருவத்தையும் தானே காணமாட்டாது. அதனால், ஆன்மா, கண் ஓருருவத்தைக் காணச்செய்வதற்கு அதனோடு ஒருங்கியைந்துநின்று கண்ணுக்கு உருவத்தைக் காட்டுதல்மட்டுமன்றி, அக்கண்ணொளியோடுகூடச் சென்று அவ்வுருவத்தைக் காணுதலுஞ்செய்கின்றது. இவ்வாறு காணும்போது, அது தன்னறிவு வேறு கண்ணொளி வேறு என வேற்றுமையின்றி விரவி உடனாய் நின்று அறிகின்றது; அதனுடன் கண்ணையும் காணச் செய்கின்றது. அஃதாவது, ஆன்மா காண்கின்றதோ கண் காண்கின்றதோவென வேறுபிரித்தறியமுடியாதபடி காணுதலாகிய இத்தொழில் நடைபெறுகின்றது என்பதாம். அதுபோல, இறைவன் ஆன்மாவோடு ஒருங்கியைந்துநின்று விடயங்களைக் காட்டுதல்மட்டுமன்றி, தானும் ஆன்மாவின் சிற்சத்தியோடு கூடச்சென்று விடயத்திலுங் கலந்துநின்று (ஆன்மாவின் பொருட்டு) காணுதலுஞ் செய்கின்றான்.*

எவ்வாறெனில், சார்ந்ததன்வண்ணமாயும் அறிவிக்கவே அறியுந்தன்மையுமுடைய ஆன்மா தானே விடயங்களை அறியமாட்டாது; ஆயினும், அது இறைவனுடன் அத்துவிதமாய்க் கலந்துநின்று அறியுமியல்புடையது. அதனால், ஆன்மா விடயங்களையறியும்படி, அவன் அவ்வான்மாவோடு ஒருங்கியைந்துநின்று அறிவித்து வருகின்றான். இவ்வாறு அறிவிக்குமிடத்தும், ஆன்மா தானே விடயத்திற் சென்றுபற்றமுடியாது: விடயத்தைப் பற்றுதலுக்கும் இறைவனின் உதவி வேண்டப்படுதலால், அவன் ஆன்மவறிவோடு கூடச்சென்று விடயத்தில் விரவிநின்று காணுதலுஞ் செய்கின்றான். இறைவன் இவ்வாறு கருணையினாற் கலந்துநின்று உதவுந் தன்மையினால் ஆன்மாவின் பசுத்தன்மை நீங்காத பெத்தகாலத்தில் ஆன்மாவேயெனும்படி ஒற்றுமைப்பட்டு நின்று விடயங்களையறிவிக்க ஆன்மா அறிந்துவரினும், அது (ஆன்மா) தானேயறிகிறதாக எண்ணுகின்றது; அதனால், அவ்விடயங்களால் வரும் இன்பதுன்பங்களை ஆன்மாவே அநுபவிக்கின்றது. பசுத்தன்மை நீங்கப்பெற்ற முத்திக்காலத்தில், ஆன்மா தன்பணியை நீத்து இறைபணிசெய்து நிற்குந்தன்மையினால் அது சிவனுடன் ஒற்றுமைப்பட்டுச் சிவனேயெனும்படிநின்று விடயிக்கின்றது; அதனால் விடயவின்பதுன்பங்கள் ஆன்மாவைச் சேரா. இவ்வாறு, இறைவன் செய்யுமுபகாரத்தைச் சிவாநந்தபூதியைத் தலைப்பட்ட ஆன்மா மறவாதிருத்தலினால் அதற்கு (இறைவனில்) பேரன்பு மேன்மேலும் பெருகும்; அவ்வன்பு திருவடியாகிய பேரின்பத்தைக் கொடுக்கும்.

**பெறப்படுவன:-**

1. ஞானிக்கு வரும் விடயங்களை அரனே அநுபவிப்பன்.

2. அரனை மறவாமல் அன்பு இருந்தால் அவனிடத்தில் ஐக்கியமாய்ப் போவன்.

விளக்கம்:-

**அ. சிவப்பேறு கூறப்படுங் காரணம்:-**

"ஞானி அகத்தின்கண்ணே சிவனுடன் ஒற்றுமைப்பட்டு நிற்கவேண்டுமென்பதற்காக ஏகனுகியென்றும், புறத்தில் பிராரத்தவினை தாக்காவண்ணம் இருப்பதற்காக இறைபணி நிற்கவேண்டுமென்றும் கூறுவது பொருந்தும். அவ்வாறு நிற்கும்போது ஆன்மாவுக்குத் தனக்கெனச் செயலில்லை; இல்லையாகவே, ஆன்மாவின் இச்சை, கிரியை, ஞானம் தொழிற்படக் காரணமில்லை; எனவே, ஆன்மா முத்திநிலையில் ஒன்றையும் அறியாது நிற்கும் அல்லது அறியவேண்டிய பொருள் அதற்கு ஒன்றுமேயில்லை" எனும் சந்தேகத்தை நீக்கவே, சிவப்பேறு எனும் நிட்டையினியல்பு இங்கு கூறப்படவேண்டியதாயிற்று.

**ஆ. ஆன்மசுத்தி, பாசநீக்க மெனுமிரண்டும் கூறப்பட்டபின் சிவப்பேறு கூறப்படவேண்டிய காரணம்:-**

ஏகனுகி இறைபணி நின்றூர்க்கு இனிச்செய்ய வேண்டிய தொன்றுமில்லை. இருள்நீங்கவே ஒளிதோன்றும். இவ்விரு தொழில்களும் ஒருங்கு நிகழ்தல்போல, ஆன்மாவுக்குப் பசுத்துவம் நீங்கின் சிவத்துவமுண்டாகும். ஆகையால், சிவாநுபூதியாகிய சிவப்பேற்றைப்பற்றிக் கூறவேண்டிய காரணமென்னையோவெனும் ஐயமெழுகின்றது.

ஆன்மா பெத்தநிலையிலிருந்து சுத்தநிலைக்கு வந்தவிடத்தும் ஐவகையவத்தையுறும். ஏகனுகி இறைபணி நிற்கும் ஆன்மா துரியநிலையில் (அருள்நிலை) மலவாசனை

யற்றுநிற்கும். அப்போது அருள்விளக்கம் அஃதாவது "என் செயலாவது யாதொன்றுமில்லை" என்ற உணர்வு மாத்திரமே உண்டாகும். துரியாதீதநிலைக்கண் விளங்கும் சிவத்துவவிளக்கமாகிய பரமசுகம் (பேரின்பம்) விளங்காது. அந்நிலையிலும் ஆன்மா செய்யவேண்டிய முயற்சியுண்டு. ஏனெனில், இருள் நீங்கியவுடன் ஒளி காணப்படுமாறுபோல, பசுத்துவம் நீங்கியவுடன் உடனிகழ்வது அருள்விளக்கமே; துரியாதீதநிலைக்கண் பெறப்படும் ஆநந்தவிளக்கம் உடனிகழாது. ஆகையால் அதைப்பெறுதற்கு மேன்மேலும் பக்திசெய்து நிற்க வேண்டுமென்றும், அதனாலேயே சிவப்பேறுண்டாகுமென்றும் அறியக்கிடத்தலினாலேயே, ஆன்மசுத்தியும் பாசநீக்கமும் கூறப்பட்டபின் சிவப்பேறு கூறப்பட வேண்டியதாயிற்று.

## இ. ஞானிக்கு வரும் விடயங்களை அரனே அநுபவிப்பன்:-

கண் அறிவற்ற சடப்பொருள், அதற்குக் காணவேண்டிய தேவையில்லை. அறியுந்தன்மையுள்ள ஆன்மா விடயத்தையறிவதால் பயன்பெறும். அதனால், அது கண்ணொளியுடனியைந்துநின்று விடயத்தைக் கண்ணுக்குக்காட்டி, தானுமறிந்துவரும் என்பது பொருத்தமே; ஆயினும், அறியுந்தன்மையுடைய ஆன்மாவே, அறியும் விடயத்தின் பயனைப் பெறுதலால், சிவன், விடயத்தை ஆன்மாவுக்குக் காட்டி, தானும் (சிவன்) விடயத்தையுணருவன் என்பது எவ்வாறு பொருந்துமென மேலும் ஆசங்கையெழுகின்றது.

விளக்கொளி கண்ணொளியோடு கலந்து, அதனோடு கூட உருவத்திலுங்கலந்தாலே, கண் ஓர் உருவத்தைக் காணும். விளக்கொளி இவ்வாறு கலந்துநிற்காவி

டின், கண் உருவத்தைக் காணமாட்டாது. அதுபோல, சிவனையின்றித் தனித்துநில்லாததும் அறிவிக்க அறிவதாயுமுள்ள ஆன்மா; சிவனின் சிற்சக்தி அதனுடன் (ஆன்மா) கலந்துநின்று அதன் (ஆன்மா) சிற்சக்தியோடு கூடச்சென்று விடயத்திலுங்கலந்து நின்றாலே, அறிவு விளக்கம்பெற்று விடயத்தையறியும். இதனால், அறிவு விளங்குதற்கு மாத்திரமன்றி, விடயத்தைப் பற்றுதற்கும் சிவன் ஆன்மாவோடு விரவி உடன்நிற்றலாகிய உபகாரம், பெத்தமுத்தி எனும் இரு நிலைகளிலுமுள்ள ஆன்மாக்களுக்கு இன்றியமையாததாயிற்று என்பது தெளிவு. அஃதாவது விடயங்களை ஆன்மாக்களுக்குக் காட்டியும், ஆன்மாக்களின்பொருட்டுக் கண்டும்வருகின்ற சிவனினுபகாரம் பெத்தம், முத்தி எனும் இரண்டிலும் ஒரேதன்மைத்தாய் நிகழுகின்றது என்பதாம்.

மேலும், அவ்வுபகாரத்தை, ஒருவாறு, நிழற்படக்காரன்(*photographer*) செய்கைக்கு ஒப்பிடலாம். அவன் உருவங்களைக் காட்டிக்கொண்டு, படக்கருவிக் கண்ணாடியுடன் (*view-finder*) நின்று தானுங்கண்டுகொண்டே நிழற்படம் பிடிக்கின்றான்; அதனாலேயே படம் நன்றாக வமைகின்றது. அதுபோல இறைவனும் ஆன்மாவோடு விரவிநின்று ஆன்மவறிவோடு கூடச்சென்று விடயத்திலுங்கலக்குமாற்றால், காட்டிக்கண்டு வருகின்றான்.

எனினும், அவ்வுபகாரம் முத்திநிலையிலேயே நன்கு விளங்கும். முத்திநிலையில், சிவன், அத்துவிதக்கலப்பில் ஆன்மவறிவுடன் ஒன்றாய்நிற்றலால் ஆன்மவறிவுடன் கலந்துநின்று காணச்செய்தும், வேறாய் நிற்றலால் தானே சிவபோகமாய் விளங்கித்தோன்றியும், உடனாய்

நிற்றலால் அச்சிவபோகத்தை ஆன்மவறிவோடு உடனின்று அறிந்தும்நிற்பன்.

அவ்வாறு ஏகனாகி இறைபணிநிற்கும் ஞானிக்கு, சிவன் தன்னுடன் அத்துவிதமாய்க் கலந்துநின்று காட்டியுங்கண்டும் வரும்கருணையை எண்ணவெண்ண, அன்பு மீதூரும். மீதூரவே, அவ்வன்பு பேரின்பவநுபவமாய் விளங்கித்தோன்றும். இவ்வுண்மையை ஆராய்ந்து பார்க்கின், ஞானிக்கு எய்தும் விடயங்களை அரனே (சிவன்) அநுபவிப்பன் என்பதும், சிவாநுபவமொன்றையே ஞானி எய்துவன் என்பதும் புலனாகும்.

சிவன் ஆன்மாவுடன் ஒற்றித்துநின்று தானும் விடயங்களைக் காணுவானாயின், அவன் ஆன்மாக்கள்போல அவ்விடயங்களாற் பந்தப்பட்டு விகாரமடையானோவெனும் ஆசங்கை யெழுகின்றது.

ஆன்மா, இரசம், உருவம், பரிசம், சத்தம், கந்தம் (சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்) எனும் விடயங்களை அறியும்போது தன்னியல்பு இதுவென வேறாகக்காணாது அவ்வப்பொறிகளுடன் கூடி, அவ்வப் பொறிகளாயக் கலந்துநின்று அறியும்; ஒன்றொன்றாயே அநுபவிக்கும். அவ்வைந்துவிடயங்களையும் ஒருங்கேயறிந்து அனுபவிக்கமாட்டாது. அவ்வநுபவத்தால் ஆன்மா விகாரமுறுமென்பது உண்மையே. ஆயினும், சார்ந்ததன்வண்ணமாய்நிற்கும் ஆன்மாவைப்போலல்லாது என்றும் ஒரே தன்மைத்தாய்த் தன்னிலை மாறாதுநின்றறியும் சிவன், எல்லாவான்மாக்களுடைய விடயங்களையும் பொதுவாக ஒருங்கேயறிந்தும், ஒவ்வோர் ஆன்மாவோடும்நின்று சிறப்பாகவறிந்தும் வருதலால் விகாரமுறான்.

ஆன்மா ஐம்பொறிவழி விடயங்களை யறிந்தநுபவிப்பது போலச் சிவத்தையும் அறிந்தநுபவிக்கும் என்பதுபொருந்தும்.

ஆயினும் ஞானிகளுக்கு வரும் விடயவின்பதுன்பங்களைச் சிவனே அநுபவிப்பன் எனக்கூறப்படுதலால், சிவப்பேற்றில் "சிவன் தன்னையே அநுபவிப்பன்" என்று பொருள்கொள்ள வேண்டும். அவ்வாறு கொள்வது குற்றமாகும். ஆதலால் சிவன், முத்திநிலையில் ஆன்மாவின் விடயமாகிய தன்னை அறிவன் என்று கூறுதல் பொருந்துமோவெனும் வினவெழுகின்றது.

*சிவப்பேறுபெற்ற ஆன்மா, தாளுெருபொருளன்றெனவுணர்தல் வாயிலாக, எல்லாஞ்சிவமே எனவுணரும். இது தெளிவுக்காட்சி யெனப்படும். அவ்வாறு தெளிவாயுணருங்கால் அன்பு மேன்மேலும் பெருக, சிவம் பரபோகமாய்ப் பேரின்பத்தை நல்கும். அந்நிலையில் வியாபகப்பொருளாகிய சிவம் ஆன்மவறிவுடன் கலந்துநிற்குந் தன்மையினால், வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருளாகியதன்னை, ஆன்மவறிவோடு உடனின்று ஆன்மாவின்பொருட்டு அறிந்துநிற்கும், ஆதலால் சத்-சித்-ஆனந்தமாயுள்ள சிவத்துக்குத் தன்னையே தானனுபவித்தல் எனும் குற்றமுண்டாகாது.*

### ஈ. ஞானி அரனை மறவாமல் அன்பு இருந்தால் அவனிடத்திலே ஐக்கியமாய்ப் போவான்:-

*ஒரு பொருளைப்பற்றி அறியும்போதே இச்சை உண்டாகும். இச்சை உண்டாகிவிடின் அப்பொருள் கிடைத்துவிட்டதென்பதன்று. அதனாலேயே, ஆன்மா பதிஞானத்தைத் தலைப்பட்டு ஆன்மசுத்தி பெற்றபின்னும், இச்சையாகிய பக்திசெய்தாலே திருவடியாகிய சிவாநந்தத்தைப் பெறுமெனக்கூறப்பட்டது. பக்தி செய்தலாவது சிவன் அத்துவிதமாய்நின்றறிவித்த சிவாநந்த விடயத்தை ஆன்மா தானறிந்ததென்றும், அவ்*

வான்மாவை அதிட்டித்துநின்ற சிவன் அறிந்தானென்றும் பிரித்துணரமுடியாதபடி இருவகையறிவும் அத்துவிதமாய்க் கலந்துநின்று விடயத்தைப்பற்றுமாறு, சிவன் செய்துவரும் உபகாரத்தை மறவாது அவனருள்வழி நிற்றலாகும். இதுபற்றியே, அன்பு அல்லது பக்தி இச்சை மிகுதல் எனப்பொருள்படும். மாயாவாதிகள் சீவன்முத்திநிலைக்கே செய்யப்படுஞ் சாதனமாக பிரமா, விட்டுணு, உருத்திரன் எனும் சகுணமூர்த்திகளிடத்து வைக்கும் அன்பே பக்தி என்று கூறுவர். இதன்காரணமாக, அவர்கள் நிர்க்குணப்பிரமநிலையையே முத்திநிலை என்பர். இது சுத்தாத்துவித சைவசித்தாந்தக்கொள்கைக்கு மாறுபட்டதாகும். சித்தாந்திகள் ஆன்மா சிவனுடன் அத்துவிதமாய்க்கலந்து ஆநந்த சொரூபமாய்நிற்கும் பரமுத்திநிலையையே சிவாநுபூதியாகிய முத்திநிலை என்பர்.

ஞானிகள் சிவாநந்தாநுபவமாகிய சிவாநுபூதியைப் பெற்றவர்கள் என்பது பொருந்தாது; சிவாநுபூதி உடம்பைவிட்டு நீங்கிய ஆன்மாவுக்கே உரியதாகும்; உடம்போடுள்ள ஆன்மா சிவாநுபூதிநிலையை அடையுமாயின் அவ்விதநிலையை அறிய முடியவில்லையேயெனும் ஐயமெழுகின்றது.

சூரியன் எவ்விடத்தும் எல்லோர்க்கும் ஒரேதன்மையாய் ஒளியைக்கொடுப்பினும் கண்பார்வையிழந்தவர்கள் அதை அநுபவிக்கமுடியாது. அதுபோலச் சிவன் பெத்தராகிய எங்களிடத்தும், முத்தராகிய ஞானிகளிடத்தும் அத்துவிதமாய் ஒப்பநிற்பினும், எங்களுக்குப் பாசஞானமாய் நிற்பன்; பக்குவமுள்ள முத்தர்களுக்கு வியாபக அறிவைப் பெறச்செய்து, எதிரே வெளிப்பட்டுத் தோன்றுவன். ஆகையால் ஏகதேசவறிவுடைய பெத்தர்கள் அறியமுடியாது.

ஞானிகள் எங்களைப்போல் உடம்புள்ளவர்களாகையால் பாசத்தின்பாற்பட்டவர்கள்; எனவே எங்களுக்கும் அவர்களுக்கும் வேற்றுமையில்லையே; அவ்வாறிருக்கவும், அவர்கள் எம்மிலும் வேறுபட்ட நிலையிலிருப்பரெனின், எவ்வாறிருப்பரெனுமொரு கேள்வியெழலாம்.

தாமரை மொட்டுக்கள் பலவிருப்பினும் சூரியன் சந்நிதியில் பக்குவமுடைய மொட்டுக்களே விரியும்; ஏனையவை விரியா. அதுபோல, திருவருட்பார்வையால் பக்திசெய்து நிற்கும் முத்தர்கள் உடம்புடன் இருப்பினும் பாசத்தையுடையவரல்லர். அஃதாவது பாசங்களினால் பந்திக்கப்படாதவரென்பதாம்.

ஏகதேசவறிவுபெற்ற ஆன்மா, பின்புவியாபகவறிவு பெற்றுப் பரமுத்திநிலையில் சிவனுடன் கூடுங்கால் சிற்றறிவு (ஏகதேசவறிவு) கெட்டுக் கூடுமோ, கெடாது கூடுமோ வென்பது அடுத்தகேள்வி.

சிற்றறிவு கெட்டுக்கூடுமெனில், குணமாகிய அறிவு கெடவே குணியாகியவான்மாவும் கெட்டுப்போதலின் அது சிவத்தோடு கலந்து நிற்கமாட்டாது. சிற்றறிவு கெடாதவிடத்து வியாபகவறிவு காணப்படாதாகையால் (இருவேறுபொருள்களாய் நிற்றல் காரணமாய்) சிற்றறிவு பேரறிவாகிய சிவனுடன் ஒன்றிநிற்கமாட்டாது. ஆகையால், சிவன் சிறுமைப்படுத்தும் ஆணவமலத்தின் வலிமையைக் குன்றச்செய்ய, ஆன்மா வியாபகவறிவைப் பெற்று அவனைக்கூடுமென அறியக்கிடக்கின்றது. உப்பு, நீரைச்சேர்ந்தவுடன் தன்சுவைமுழுவதையும் அந்நீருக்காக்கி, உருசியில் சமன்செய்து அதனைத்தன்னோடு ஒப்ப நிற்கச்செய்யும். அதுபோல, ஆன்மா சிவாநந்தத்தைத் தலைப்பட்டுச் சிவத்துக்கடிமையாகி அருள்வழிநிற்க, சிவனும் ஆன்மாவைப் பிரியாதுநின்று பேரின்பநிலையை

அருளுவன். மேற்கூறியவாற்றால், ஞானி இடையறாது சிவனைப் பக்திசெய்ய வேண்டுமென்பதும், அப்பக்தியின் பயனாய்ச் சிவனுடன் ஐக்கியமாய்ப்போவன் என்பதும் உறுதியாகின்றன.

## உ. கேவலம், சகலம், சுத்தமெனும் காரணவவத்தைகள்:-

சூரியன் சிலவேளைகளில் முகிற்படலத்தால் மறைப்புண்டு நிற்கும். படலம் சிறிது நீங்கியபோது அதனொளியின் ஒருபகுதியே பிரகாசிக்கும். பின்னர், முகிற்படலம் முற்றாய் நீங்கும்போது சூரியவொளி எங்கும் வியாபகமாகப் பரந்துபிரகாசிக்கும். அதுபோல, ஆன்மவறிவு கேவலாவத்தையில் மலத்தினால் மறைப்புண்டு, பின்பு சகலாவத்தையில் ஏகதேசமாய்ச் சிறிது விளக்கத்தைப்பெற்றுப் பிரபஞ்சத்தையறிந்து அதில் அழுந்திநிற்கும். சுத்தாவத்தையில் சிவனின் திருவருளால் மலசக்தி பற்றறக்களையப்பட, ஆன்மவறிவு வியாபகவறிவைப்பெற்றுச் சிவாநந்தத்தைத் தலைப்பட்டுப் பேரின்பத்திலழுந்தும். இதனால் கேவலாவத்தையை இரவின் தொழிலுக்கும், சகலாவத்தையைப் பகலின் தொழிலுக்கும், சுத்தாவத்தையை இவையிரண்டினையுங்கடந்த அதீதநிலைக்கும் ஒப்பிடுவர்.

## ஊ. பரநடனம்.

ஐந்தாம் சூத்திரத்தில் கூறியவாறு இறைவன், பெத்தகாலத்தில் ஆன்மாவின் ஞானஇச்சைகிரியைகளைத் தொழிற்படச்செய்து அறிவித்துநிற்றல் அதிசூக்குமபஞ்சகிருத்தியம் அல்லது அதிசூக்குமநடனம் எனப்படும். எனவே, (சிறப்பாக) முத்திக்காலத்தில் சிவன்

ஆன்மாவின் ஞானஇச்சைகிரியைகளைப் புறத்தே செல்ல விடாது தடுத்து, ஞேயமாகிய தன்னையுணர்த்துவான் வேண்டி ஆன்மசிற்சக்தியினிடமாய்நின்று தானுமறிந்து வருகின்ற உபகாரம் 'பரநடனம்' எனப்படும். அஃதாவது ஆன்மாவெனப்படும் மன்றிலே சிவன் இவ்வாறு பரநடனஞ்செய்கின்றான் என்பதாம்.

சிதம்பரத்தில் பரநடனமும், திருவாலங்காட்டிலே ஊர்த்துவநடனமும் (கால்தூக்கி ஆடுதல்), மதுரையில் விஜத்தியஸ்தநடனமும் (மாறியாடுதல்), வேதாரணியத்தில் புயங்கலளிதநடனமும் (பாம்பணிந்தாடுதல்), கும்பகோணத்தில் அம்பிகாநடனமும் (உமையோடாடுதல்), தேவதாருவனத்தில் கஜசும்பிநடனமும் (யானைத்தோல் போர்த்தாடுதல்), உத்தரகோசமங்கையில் பரமாகசிய ஆநந்தநடனமும், பேரூரில் பிரளயகாலசங்காரநடனமும், திருக்கைலாசமலையில் திருநடனமுமெனும் நவதாண்டவங்கள் சிவன் செய்கின்றானெனத் திருமுறைகள் கூறுகின்றன.

பதினோராஞ்சூத்திரம் முடிந்தது

---

## பயனியல் iii

# பன்னிரண்டாஞ்சூத்திரம்

செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலயந் தானு மரனெனத் தொழுமே.

பதினோராஞ்சூத்திரத்தில் சிவப்பேறு எனும் பரமுத்திநிலை கூறப்பட்டது. இடையருவன்புகொண்டு அரன் திருவடி யடைந்து நிட்டைகூடிய முத்தர்க்கு பிராரத்தகன்மகாரண மாக நிட்டை கலைவுறும். கலைவுறவே, அவர்தம் ஞானஇச்சை கிரியைகள் புறத்தே சென்று பிரபஞ்சத்தை நோக்கநேரின் சீவன்முத்திநிலை யெய்துவர். அப்போது, அவர்களின் ஞான இச்சைகிரியைகள் எங்கெங்கு செல்லுமென்பதும், செல் லும்வழி அவர்கள் வழிபடுமுறையும் இங்கே கூறப்படுகின்றது.

**செம்பொருள்:-**

*முற்கூறியவாறு அரன் திருவடி அடைதலாகிய சிவப்பேற்றைப்பெற்று அதில் நிட்டைகூடித் தளராது நிற்பவன் சிவஞானி. ஆயினும், பிராரத்தகன்மத்தை அநுபவித்துத்தொலைக்காத காரணத்தால் அவனின் நிட்டை கலைவுறவுங்கூடும். எவ்வாறெனில், உடம்போடு தொடர்புடைய பிராரத்தகன்மம் அநுபவிக்கப்படுங்கால் இச்சைகிரியைஞானசக்திகளைப்பற்றிநின்று ஐம்பொறி களின் வாயிலாய் புறத்தைநோக்கித் தொழிற்படத் தலைப்படும்; தலைப்படவே, நிட்டை கலையும்; கலையவே, இதுவரை நெகிழ்ந்து நீங்காதுகிடக்கும் ஆணவம் கன் மம் மாயையாகிய மும்மலங்களும் திருவடியை மறைக் கத் தலைப்படும்; அவ்வாறு தலைப்பட்டால், அவை மெய் யுணர்வைக்கெடுத்துப் பிறவிக்கு வித்தாகிய விபரீதவுணர்*

வைக் கொடுக்கும். ஆகையால், சீவன்முத்தன் மும்மலங்களையும் நீக்க மேலும் முயற்சிசெய்யவேண்டியவனாகின்றான்.

சீவன்முத்தனாவான் மும்மலங்களாகிய அழுக்கை அறிவெனும் நீரால்கழுவுவன். அஃதாவது மலங்களின் தன்மையையுணர்ந்து அவற்றைநீக்குமுகமாய்ச் சிவஞானிகளைச் சிவனென அறிந்து வழிபடுவன். அப்போது, சிவன் அவர்கள்வாயிலாகக் காட்சிப்பட அவர்களிடத்தே அன்பு பெருகும். அதனால் அவன் அவர்களுடன் கூடிநிற்க அவனது இச்சாசக்தி உலகவிடயங்களிற்செல்லாது அன்பராகிய ஞானிகள் கூட்டத்தில் தொழிற்படும்; அதனால் சிவனில் அன்பு பெருகும். அவன் ஞானிகளது திருவேடமாகிய விபூதிஉருத்திராக்கங்களையும், சிவாலயத்தையும் அரனெனவே வழிபடுவன்; அதனால் அவனது கிரியாசக்தி வழிபடுதல் முதலாம் நற்செய்கைகளில் தொழிற்படும். இவ்வாறு தொழிற்படுங்கால் பிராரத்தவினை அவனைத்தாக்காது வலிகெட்டு அழிந்துவிடும்.

**பெறப்படுவன:-**

1. ஆணவம் கன்மம் மாயையெனும் மும்மலங்களையும் சீவன்முத்தன் களையவேண்டும்.

2. அவன் சிவஞானிகளுடனே கூடவேண்டும்.

3. சிவஞானிகளையும் சிவலிங்கத்தையும் சிவனெனவே வழிபடவேண்டும்.

4. வழிபாடும் இடையறாது செய்தல் வேண்டும்.

**விளக்கம்:-**

**அ. ஆணவம், கன்மம், மாயையெனும் மும்மலங்களையும் களையவேண்டும்:-**

இடைவிடாத அன்பினால் மெய்ப்பொருளையறிந்து ஞானத்தைத்தலைப்பட்டு நிட்டைகூடினார்க்கு ஆணவம், கன்மம்,மாயை எனும் மும்மலங்களும் சக்திகுறைந்து தொழிற்பாடின்றி நிற்கும். அவ்வாறிருக்கவும், சீவன்முத்தன் மும்மலங்களையும் பின்னுங்களையவேண்டுமென்பது எற்றிற் கெனுங்கேள்வி எழலாம்.

முன்னொருகாலத்தில் உளதாய ஆகாமியகன்மம் புண்ணியபாவங்களாயமைந்து இப்போது பயனைத்தருவதுபோல, இப்போதேறும் ஆகாமியகன்மம் புண்ணிய பாவங்களாயமைந்து வருங்காலத்தில் பயனைக்கொடுக்கும்: நிலமுதல் மாயையீறாயுள்ள மாயாமலம் ஆணவ மலச்சேர்க்கையால் மயக்கக்காட்சியைக் கொடுக்கும்: ஆணவமலம் அஞ்ஞானத்தைக் கொடுக்கும். இவ்வாறு இம்மூன்று மலங்களும் தருணம் வாய்க்கும்போது சீவன்முத்தனுக்கு இன்னல் விளைப்பன.

எவ்வாறெனில், சீவன்முத்தனுக்கு உடம்புள்ள வரை பிராரத்தவினை உடம்பைப்பற்றிநிற்கும். அவ்வாறு நின்று அது அநுபவத்துக்கு வரும்போது விருப்பு வெறுப்புக்களை உண்டாக்கும்; விருப்பு வெறுப்புக்களைத் தொடர்ந்து மற்றைய மலங்களும் வாசனைமாத்திரையாய் சீவன்முத்தனைத் தாக்கும்; அத்தாக்குதலினால் தற்போதம் உண்டாக, மயக்கத்தைக் கொடுக்கும் பிரபஞ்சம் காட்சிப்படும்; அக்காட்சியினால் அஞ்ஞானம்மேற்படும். அதுகாரணமாக மெய்யுணர்வாகிய தத்துவஞானம் சோர்வுபெற, அஞ்ஞானம் சுட்டியறிவாகிய விபரீத

வுணர்வைத் தோற்றுவித்துப் பிறவிக்கு வித்தாய்விடும். இதனாலேயே மும்மலங்களையும் பற்றறக்களையவேண்டு மெனப்பட்டது.

இன்னும், கன்மமலம் மாயாமலம் எனுமிரண்டும் ஆன்மாவின் ஈடேற்றத்துக்குத் துணைக்காரணங்களாயி னும், அவை ஆணவமலச்சார்பால் மேலும் சீவன்முத்த னைப்பந்திக்குமாகையால் மும்மலங்களையுங் களையவேண்டு மென வற்புறுத்தப்பட்டது.

## ஆ. 1. சீவன்முத்தன் சிவஞானிகளுடனே கூட வேண்டும்:-

பிராரத்தவினையநுபவங்காரணமாக உண்டாகும் விருப்புவெறுப்புக்களால் சீவன்முத்தனின் இச்சாஞானக் கிரியைகள் உலகத்தை நோக்குஞ் சமயத்தில் சிவ ஞானிகளுடன் இணக்கம் வைக்கின், உலகியலறிவு காட் சிப்படாது; சிவாநுபூதி நிலைபெறும். இதனால் பிராரத்த கன்மாநுபவங்கள் சீவன்முத்தனுக்கு வாதனைசெய்யா வாய், உடம்பின் அநுபவமாய்நின்று கழிந்துவிடும். சிவ ஞானிகளுடன் கூடிநிற்பின், பிராரத்தகன்மம் அநுபவத் துக்குவரினும், அதனால் தாக்கப்படான் என்க.

## 2. சிவஞானிகளைச் சிவனென வழிபடல் வேண்டும்.

உலகப்பற்றுக்களுக்குக் காரணமாயும் அசத்தாயு முள்ள நாமரூபபேதங்களை அசத்தெனக்கண்ட சீவன் முத்தனுக்கு ஞானமயமாயுள்ளஞானி சிவனெனக் காட்சிகொடுத்தலினால், அவரை வழிபடுதல் நிட்டை கூடுதலாகிய அத்துவிதநிலைக்கு அவனை வழிப்படுத்தும். இதனாலேயே சிவஞானிகளை வழிபடவேண்டுமெனப் பட்டது.

பஞ்சாக்கரசெபம் பிராரத்தவினையை நலியச்செய்து அத்துவிதநிலையை நிலைபேருக்கும். அவ்வாறிருக்கவும் சீவன் முத்தன் சிவஞானிகளை வழிபடல்வேண்டுமென்பது எதற்காகவெனும் ஆசங்கை எழுகின்றது.

பிராரத்தவினையை அநுபவித்துக் கழிக்கவேண்டிய சீவன்முத்தனது ஞானஇச்சைகிரியைகள் புறத்தே செல்லுங்கால் விருப்புவெறுப்புக்களும், அவைகாரணமாக அஞ்ஞானக்காட்சியுமுண்டாகும். பிராரத்தவினை பற்றறக் கழிந்தால் இவ்வாறுய துன்பக்காட்சிகள் உண்டாகா. ஆகையால், வாசனைவயத்தால் வரும் இத்துன்பத்தைத் துடைக்க தத்துவஞானிகளை வழிபடல் வேண்டும். வழிபடின் மெய்யுணர்வு மேம்படும்; அன்பு பெருகும்; இன்பநிலை யுண்டாகும்; பிராரத்தவினை வலியற்று அழியும். இதனுல் சீவன்முத்தனுவான் ஞானிகளை வழிபடுதல், பஞ்சாக்கரசெபத்துக்கு மேலும் உறுதியைக் கொடுக்கும் என்பது தெளிவு.

## 3. திருவேடங்களாகிய விபூதி உருத்திராக்கம் என்பனவற்றை அரனெனவே வழிபடல்வேண்டும்.

தத்துவஞானத்தைப்பெற்ற சீவன்முத்தர்கள் எங்கணும் அரனையே காணுவரெனக்கூறலே பொருந்தும். எனவே, அவர்கள் எப்பொருள்களையுமரனெனவே வழிபடல் வேண்டுமென்னுது, ஞானிகளது திருவேடத்தையும் சிவாலயத்தையும் வழிபடல் வேண்டுமென வேறுபிரித்துக் கூறியதெதற்காகவென்று மேலுமாசங்கையெழுகின்றது.

மனம் வாக்குக்கெட்டாத சிவன் உலகத்தவர்மீது கொண்டகருணையினுல் தனது திருவேடங்களாகிய திருநீறு, உருத்திராக்கம் முதலியவற்றை அடியார்களாகிய சிவஞானிகளுக்குக் கொடுத்துள்ளான். அவர்கள், அவற்றைத்துணைக்கொண்டு சிவோகம்பாவனை செய்வதால்,

சிவன் அவர்களைத் திருவடிவியாபகத்துளடங்கச்செய்தல் வாயிலாகத் தன்னையறிந்து அநுபவிக்கச்செய்கிறான்.

காமக்கிழத்தியர் அணியும் சந்தனம், ஆடை, ஆபரணங்கள் முதலியன காமுகருக்குக் கண்டவுடனேயே இன்பத்தைக் கொடுப்பதுபோல, சிவனது திருவேடங்களைச்சீவன்முத்தர்கள் கண்டமாத்திரத்திலேயே, அவை அவர்களை வசப்படுத்தியின்பங் கொடுக்கும். அப்போது ஐம்பொறிகள் திருவேடங்களை விடயித்து நிற்றலால் உலகப்பொருட்களின் மயக்கக் காட்சிகள் கவர்ச்சியைக் கொடா. இதனாலேயே, திருவேடங்களையும் அரனெனத் தொழல்வேண்டுமென்பது.

## 4. சிவாலயத்தையும் அரனெனவே வழிபடல் வேண்டும்:-

விறகைக் கடைச்சற்றடிகொண்டு கடைந்தால் நெருப்புத் தோன்றும், கடையாவிடத்து அது தோன்றாது மறைந்துநிற்கும். அதுபோல, சிவன் ஆன்மாக்களுக்குப் புத்தி முத்தியருளும் பொருட்டுக் கலப்பினால் இலிங்கவடிவாய்க் காட்சிகொடுப்பன். அப்போது, சிவனே தானாய்நின்று காணும் மெய்யடியார்களுக்குச் சிவனாகவே தோன்றி அருள்செய்வன். ஏனையோருக்கு மந்திரசாந்நித்தியத்தால் விளங்கித்தோன்றுவன். எவ்வாறெனில், பகுத்துணர்தலின்றி சிவலிங்கமுதலிய திருமேனிகளை சிவமெனக்கண்டு வணங்கும் சரியைமார்க்கத்தில் நிற்போருக்குச் சிவன் இலிங்கவடிவில் மறைந்து நின்று அருள்செய்வன். ஈசானாதிமந்திரங்களினால் வழிபடும் கிரியாமார்க்கத்தாருக்கு விரும்பிய அந்தந்த மந்திரத்திருமேனிகளில்நின்று அருள்செய்வன். உள்ளங்

கள்தோறும் வியாபித்துள்ளசிவன் இத்திருமேனியிலும் வீற்றிருந்து அருளுவன் எனக்கருதிச் சாத்திய மந்திரங்களால் வழிபடும் யோகமார்க்கத்தில் நிற்போருக்குக் கறந்தால் மாத்திரந்தோன்றும் பால்போல், விரும்பியவடிவமாய்நின்று அருள்செய்வன். அன்புமாத்திரத்தினால் வழிபடும் ஞானமார்க்கத்தில் நிற்போருக்குக் கன்றைநினைந்த பசுப்போல் உடனேயே அருளுவன். எனவே, அதுவேதானாய்நின்றுகாணும் ஞானமார்க்கத்திலுள்ள சீவன்முத்தருக்குச் சிவலிங்கம் சிவனாகவேதோன்றி அருள்செய்தலால், சிவாலயத்தையும் சிவனென வழிபடல் இன்றியமையாதாயிற்று.

பன்னிரண்டாஞ்சூத்திரம் முடிந்தது.

சிவஞானபோதசாரம் முற்றுப்பெற்றது.

ஸ்ரீமெய்கண்டதேவநாயனார் திருவடி வாழ்க.

திருச்சிற்றம்பலம்.

விவேகானந்த அச்சகம், யாழ்ப்பாணம்.

விவேகானந்த
அச்சகம்
யாழ்ப்பாணம்